Scott. II-48—22,303—17-1-18.

# Home (1918) Department.

## Miscellaneous

Ordinary SERIES.

**G.O. No.** 720

**DATED** 23-10-18

INDEXED

---

[Despatch Abstract.]

Editors' Table privileges.-

Stating that the Government are unable to further patronise the "Panchayat" and that the journal cannot at present be admitted to ----------------

## BACK PAPERS.

| G.O. | No. | Department. | Date. | G.O. | No. | Department. | Date. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

## FURTHER PAPERS.

| G.O. | No. | Department. | Date. | G.O. | No. | Department. | Date. |
|---|---|---|---|---|---|---|---|
| | 321 | Home (Mis) | 2.3.21 | | | | |



DEPARTMENT.

# CURRENT FILE.

CONTENTS.

| Current No. | From | Number. | Date. | Pages. |
|---|---|---|---|---|
| | | | | |

[P.T.O.] FOR PUT UP PAPERS.

PAPERS PUT UP WITH CURRENT No.

Papers of the department to which the current belongs.

| Number. | Date. | Original (=O) or spare copy (=S.C.). | Remarks. (In this column such of the papers as have been removed for copying, printing, etc., should be marked with a cross.) | Initials of Referencer with date in token of return to Reference department |
|---|---|---|---|---|
| | | | | |

Papers of other departments.

| Department. | Number | Date. | Original (=O.) or spare copy (=S.C.). | Initials with date of (1) Referencer acknowledging returns of the paper concerned or (2) Despatcher to denote the return of the papers to the department concerned. |
|---|---|---|---|---|
| | | | | |

Tennore.
Trichinopoly
16.8.18.

2406
L9-828

From

M.S.R. Chandran,

Editor & Manager,

The "Panchayat",

Tennore, Trichinopoly.

To

The Chief Secretary,

Government of Madras,

Fort St. George.

Sir,

I have the honour to forward herewith copies of the 1st and 2nd issues of a new Tamil Journal published by me at Trichinopoly. The Journal is devoted to the spreading in the Tamil Districts, Panchayats idea, the initial work in which line, has been so graciously undertaken by the Benign British Government of India.

I beg to add that the journal, seeking to enjoy as it does, a very wide popularity in rural areas will largely help recruiting and getting subscriptions to the War loan and the more regular work of the journal namely in spreading of panchayat idea and the encouragement of thrift and co-operation in rural areas, will bring in more people to appreciate and understand in its full significance, the Local Self Government, a communique which was recently issued by the Government of India.

I therefore pray that the Government of Madras will be pleased to extend their kind patronage to the journal by (1) sending their advertisements to it (2) purchasing a number of copies for distribution in Government and other Offices (3) by directing the various Revenue Officers in the Tamil Districts to introduce the journal to the village Pleaders other Panchayats under their control (4) sending Government publications, notifications etc., relating to the subjects free of cost and

doing

4

2406

19-8-28

doing such other help as the Government in their opinion think fit.

I beg to remain,

Sir,

Your most obedient servant,

M.S.R. Chandran

16.8.28.

Sectt. II 8 (c).—12-1-15.

NOTES.



5

Home (Misc) Dept.

From the Editor & Manager Panchayat of the 8.18

[2373] Recd. No. 2373-18 28.8.18

Referred to the Dt. Magte, Trichinopoly, for remarks.

26.8.18

28.8.18

To the Dt. Magt, Trichinopoly.
(Endt & cf. with journals to be returned with reply)

Reminder to issue on 28.9.18.

C.No. 2583 Abeil 12.9.18

R.F.D.—80-1—3,000—20-8-13.

LOCAL AND MUNICIPAL DEPARTMENT.

CURRENT No. 6

4

*Received* REGISTRAR 12 SEP. 1918 LOCAL & MUNICIPAL SECRETARIAT 191 . *Registered* C.No-4857 L 191 . 12-9-18

*Subject.*

The "Panchayat".

Submitting copy of a D.O.letter in connection with the application of the Editor of ----- and at stating that it is too soon to form any decided opinion of the journal and of theutility in patronizing it.

L.m. To Home (mis) no. V.T.K 13/9 16.9.18

L&M wo No. 4857-L 17-9-18

| ENCLOSURES. |
|---|
| No. |
| Spare copies |

R.C. No. 1485/M. of 1918.

*Station* Trichinopoly , *Dated the* 7th September 1918.

From (Name) H.T. Reilly Esq., I.C.S.,

(Designation) Dist.Magistrate, Trichinopoly,

To the Secretary to the Government of Madras,

Local and Municipal Department.

Madras.

Sir,

Referring to Endorsement No. ~~237 B-1~~ 2373-1 Home (mis), dated 28th August 1918, I have the honour to forward herewith a copy x of the x P.T.O. D.O. letter sent by my predecessor to Mr. Graham in connection with a similar application made by the Editor and to state that so far only 2 copies of the 'Panchayat' have appeared till now. It is therefore too soon to form any decided opinion of the journal and of the utility in patronizing it.

I have the honour to be,

Sir,

Your most obedient servant,

[signature]

For Dist.Magistrate.

R.R. 10.9.18

REGISTRAR HOME DEPT. 14 SEP. 1918

5/

Copy of D.O. dated 29-7-18 from E.P. Walsh, Esq., I.C.S., Ag.Collector of Trichinopoly, to Mr. Graham.

My dear Graham,

Your D.O. dated 11th July 1918 about Mr. S.R.Chandran. This person is about 26 years old. He was for some years a teacher in the Local Fund School at Palur, in the Ariyalur Division and latterly at Ariyalur itself. He was considered to be a successful teacher. While a teacher, he was also a correspondent to the Swadesa Mitran, a Tamil Madras Daily and was taking part in public movements. When the recruiting party went to Ariyalur last year he is reported to have given some lectures to help recruitment. About the end of last year he was appointed as an Amin in the District Munsif's Court at Ariyalur, which he resigned and came away to Trichinopoly with a view to start the journal "The Panchayat". On 31-12-1917 he applied to me for permission to start the journal. After the necessary enquiries I took a declaration from him under the Press Act on 11th April 1918. Only one issue of the Journal has appeared till now though it is said to be a monthly one and though the 1st issue is for April--May(Chittrai). The man has a house and garden in Kulittalai Taluk worth about Rs.1,000. He is a brahmin by caste and cannot be said to have much means. His antecedents are not bad.

Yours sincerely,

(Sd.) E.P. Walsh,
Collector.

(True Copy)

Scott. II 8 (c).—12-1-15.

# NOTES.

Page ______

7

Home (Judl.) Dept.

6

Issue at once?

Memo No. 2373-2 of 18.9.18

The Dt. Magte, Trichinopoly is informed that the Enclosure to Endt. no. 2373-1, Home (Judl.), of the 28th August 1918, have not been received in the Secretariat along with his letter no. 1486/M, of the 7th Sept. 1918 addressed to the Secretary to Govt. L & M. Dept. He is requested to return them to this dept. at an early date.

Ag. 17.9.18

18/9

To
The Dt. Magte, Trichinopoly.
(Memo)

1,77,936—24-1-18.

C.F.—31.

Home (Miscellaneous) **DEPARTMENT.** Home (Mis) No 2712

8

*Received* 7 OCT 1918 *Registered* 2/10/18

*Subject.*

Panchayat.

Submitting report to Government re: the status and character of the Editor of ------- a Tamil monthly journal.

| ENCLOSURES. |
|---|
| No. 2 Books & 3 Sheets. |
| Spare copies |

D.Dis.No. 748/M./18

*Station* Trichinopoly, *Dated the* 26th September 1918.

From (Name) H.T. Reilly Esq., I.C.S.,

(Designation) Dist.Magistrate, Trichinopoly,

To The Secretary to the Government of Madras,

Home (Miscellaneous) Department,

Ootacamund.

Sir,

Adverting to Memo No.2373-2, dated 18th September 1918 I have the honour to return herewith the enclosures received with the Government Memo No.2373, dated 18th September 1918.

I have the honour to be,
Sir,
Your most obedient servant,

For Dt.Magistrate.

R.K. 26.9.18

# பஞ்சாயத்து

## (PANCHAYAT)

திருச்சினப்பள்ளியில் வெளிவரும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

பத்திராதிபர்: M. S. R. சந்திரன்.

| | | |
|---|---|---|
| பு. 1. | காளயுக்தி-ஹு சித்திரை-மீ | ஸ. 1 |


கிராமத்தார்களின் முன்னேற்றத்திற்கு வெளிவருகின்றது.

பழையகால பஞ்சாயத்து முறைகளையும் பஞ்சாயத்து கொள்கைகளையும் வெளிப்படுத்தும். எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்து சபைகள் ஏற்பட வேண்டுமென்பதே இதன் முக்ய நோக்கம். பிரதி கிராமத்திலும் இப்பத்திரிகை இருக்கவேண்டியது அவசியம். இப்பத்திரிகையில் வெளிவரும் விஷயங்கள் இந்த சஞ்சிகையின் 4-வது பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகைக்கு பல தேசாபிமானிகளும் கல்விமான்களும் விஷயதானம் செய்கிறார்கள். ரூ. 25-ம் அதற்கு மேலும் கொடுத்து உதவிபுரிபவர்கள் நமது போஷகர்களாகக்கொள்ளப்படுவார்கள். இதனை ஆதரிக்குமாறு எல்லாரையும் வேண்டுகின்றோம்.

| | | |
|---|---|---|
| இதன் வருஷ சந்தா | ... ரூ. | 3—0—0 |
| அரை வருஷ சந்தா | ... ரூ. | 1-12—0 |

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| பக்கம் 1-க்கு மாதம் 1க்கு | ... ரூ. | 4—0—0 |
| அரைப் பக்கத்துக்கு மாதம் 1-க்கு | ரூ. | 2—0—0 |
| பக்கம் 1க்கு 3-மாதத்திற்கு | ... ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்துக்கு 3 மாதத்திற்கு | ரூ. | 5—0—0 |

மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

MADRAS GOVT.

மானேஜர்,
"பஞ்சாயத்து ஆபீஸ்"
தென்னூர், திருச்சினப்பள்ளி.

விஷயங்கள்—CONTENTS.

1. வாழ்த்துப்பா—Prayer. ... ... 1
2. நாம்—Ourselves. ... ... 1
3 மாதிரி கிராம பஞ்சாயத்துக்கள்—Informal Village Panchayats. ... ... 5
4. பஞ்சாயத்தார்கள் கவனிக்கவேண்டியவை—Panchayatdars' items. ... ... ... 6
5. திருச்சிநாப்பள்ளி ஜில்லாவில் கிராம பஞ்சாயத்துக்கள் செய்துள்ள வேலைகள்—Report on the working of the Informal Panchayats in the Trichinopoly Dt. 9
6. காட்டுப்பஞ்சாயத்தைப்பற்றி கனம் சிதம்பரநாத முதலியார் Hon'ble K. Chidambaranatha Mudaliar on Forest Panchayats. ... ... ... ... 2
7. காட்டுப்பஞ்சாயத்து சபைகள்—Forest Panchayats. 13
8 யூனியன் பஞ்சாயத்து விஷயமாய் கவர்ன்மெண்டு விளம்பரங்கள்—Notifications by the Government regarding Union Panchayats. 14
9. கிராமங்களில் கல்வி—Education in Villages; By N. Mr. Rengasamy Iyer M. A., L. T. 16
10. குடியானவர்களின் நிலைமையை உயர்த்துதல்—How to improve the condition of Farm Labourers; By K. Natesa Iyer, Editor, Varthaka Mitran Tanjore. 21
11. நீர்ப்பாசன மிராசுதார்களின் சங்கங்கள் அவசியமா?—Channel Mirasdars' Association—Is it a necessity? 21
12. கிராமங்களின் சுகாதார நிலைமை—Village Sanitation; By Dr. T. S. S. Rajan, M. R. C. S., L. R. C. P. 24
13. கனம் T. ரெங்காச்சாரியார் "சென்னை பஞ்சாயத்து ஆக்டை"ப் பற்றி The Hon'ble T. Rengachari on Madras Panchayats Act. ... ... 27
14. நியாயஸ்தல செய்தி—Court News. ... ...29
15. விசேஷ பஞ்சாயத்துக்களைப் பற்றிய குறிப்புகள்—Notes on Typical Panchayats. ... ... 30
16 விசேஷப் பஞ்சாயத்துக்களின் விசேஷத் தீர்மானங்கள்—Typical Proceedings of Panchayats. ... 32
17. ஐரோப்பிய மகாயுத்தம்—The Great War. ... 35
18. யுத்தக் கடனும் படை திரட்டலும்—War Loan and Recruiting. ... ... 36
புத்தக வரவும் விளம்பரங்களும். ... ... 37, 38.

# பஞ்சாயத்து

பு. 1. காளயுக்தி-௵ சித்திரை-௴ ல 1.

## வாழ்த்துப்பா.
## (PRAYER.)

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக தீதெலாம் நலிக!
அறம்வளர்ந்திடுக மறம்மடிவுறுக!
பாரதநாட்டினர் பண்புடன் இயற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தேயத்தினர் நாடோறும் உயர்க
வந்தேமாதரம்!! வந்தேமாதரம்!!! (பாரதி).

---

## நாம்.
## OURSELVES.

நாம் வசிக்கிற தேசத்திற்கு பாரத தேசமென்று பெயர். பள்ளிக்கூடத்தில் நமது பிள்ளைகள் வாசிக்கும்போது இத்தேசத்தை இந்தியா தேசமென்று அழைப்பார்கள். ஜனங்களுக்காகவே இந்தப் புண்ய பூமியில் அநேக ஆயிரம் அரசர்கள் அரசாண்டிருக்கிறார்கள். மோக்ஷஸாதனமே அவர்களுடைய முக்யகோரிக்கை. ஞானமும் கடவுளிடத்தில் பக்தியும் அவர்களுடைய முக்கியமான விருப்பங்கள்.

நல்லொழுக்கமுள்ளவர்கள். அந்தக்காலங்களில் ஒருவனுடைய வாழ்வு ஆடம்பரமாயில்லாமல் சாதாரணமாய் இருந்தது. ஆனந்தத்தைக கொடுத்தது. நம்முடைய பெரியோர்கள் பழைய காலங்களிலே சுக ஜீவிகளாய் இருந்தனர். ஒற்றுமையும் சகோதர அபிமானமும் நிரம்பவும் அவர்களிடமிருந்தன. ஜனங்களுடைய ஸ்திதிக்குத்தகுந்தபடி ராஜாக்கள் அரசாண்டு வந்தார்கள். அவர்கள் குடிகளிடமிருந்து ஆறில் ஒரு பகுதி வீதம் வரிவாங்கிவந்தார்கள். சாதாரண ஜீவனத்தையே எல்லாரும் விரும்பினார்கள். ஒவ்வொரு கிராமத்து ஜனங்களும் தங்கள் தங்கள் லாப நஷ்டங்களை அவர்களே கவனித்துக் கொள்ளுமாறு விடப்பட்டிருந்தார்கள் பஞ்சங்களாலும் கொடிய நோய்களாலும் அவர்கள் ஒருபோதும் பீடிக்கப்படவில்லை. கஷ்டப்படவுமில்லை.

கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்பட்டு அவைகளின் மூலமே கிராமகாரியங்கள் நடத்தப்பட்டன கிராமத்தார்களே பஞ்சாயத்தார்களை தெரிந்தெடுத்தார்கள் கிராமத்தார்களுக்கு அவர்கள் அதிக பொறுப்பு வாய்ந்தவர்களாய் இருந்தார்கள். சரியாக கிராம காரியங்களைப்பார்க்காமல் அசட்டைசெய்யும் பஞ்சாயத்தார்களை நீக்கி புதிய அங்கத்தினர்களை நியமிப்பது வழக்கமாயிருந்தது கிராம வழக்குகளை பஞ்சாயத்தார்களே விசாரித்து முடிவு செய்து வந்தனர் அநேகமாய் எல்லா கிராமங்களிலும் ஜாதிக்கட்டுப் பஞ்சாயத்துக்கள் இருந்தன. இக்காலத்திலும் பல கிராமங்களில் சில ஜாதியார்களுக்குள்ளே மேற்படி பஞ்சாயத்துக்கள் இருந்து வருகின்றன. சிற்சில இடங்களில் தங்கள் தங்கள் தலைக்கட்டுக்கும் ஜனங்களே தங்கள் தங்கள் தலைவர்களைத்தெரிந்தெடுத்து சொந்தகாரியங்களைப்பார்த்து வந்தனர் கிராம வழக்குகள் கிராமங்களிலேயே தீர்க்கப்பட்டு வந்தமையால் நியாயமாகவும் பாரபக்ஷம் இல்லாமலும் தீர்ப்புகள் கிடைத்தன. மாடுகள் மேய்வதற்குத்தகுந்த இடம் இருந்தது. கிராமப்பிள்ளைகளுக்கு பொறுப்புள்ள உபாத்தியாயரால் இலவச நாட்டுப்படிப்பு சொல்லிக் கொடுக்கப்பட்டது. கிராம சுகாதாரத்தைக்காப்பாற்ற நல்ல குடி தண்ணீர்க்குளம் இருந்தது. காலாகாலங்களில் வயல்களுக்குத்தேவையான ஜலம் வரக்கூடிய அளவு வரத்து வாரிகள் வழியாய் ஓடி நிரம்பியிருக்கும் நீர்ப்பாசன ஏரிகள் இருந்தன. பொறுப்புள்ள



பஞ்சாயத்தார்கள் பாய்ச்சலுக்கும் பயிர்களுக்கும் வேண்டிய அளவு ஜலத்தைப்பங்கிட்டுகொடுப்பது வழக்கம். பிரதி கிராமங்களிலும் அநேக தொழிலாளிகளும், வேலைக்காரர்களும இருந்து வந்தனர். அவர்களுக்கு மான்ய நிலங்கள் விடப்பட்டிருந்தன. மேலும் கிராமத்தார்களும் மாசூல் அறுவடைகாலங்களில் ஒரு சிறு பகுதி கொடுத்து உதவி வந்தனர் பல கிராமங்களிலுள்ள வாய்க்கால்கள் நல்ல மேலான நிலைமையில் இருந்து வந்தன. கிராம காரியங்களில் யாதொருவிதகுறைவும் நேரிட்டதில்லை. எல்லாரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர்.

ஆனால், பழய பஞ்சாயத்து முறைகள் இப்போது ஒரு கிராமத்தில்கூட அனுஷ்டானத்தில் இல்லை. பஞ்சாயத்துகள் மட்டும் கிராமங்களில் ஏற்பட்டுவிட்டால் நன்மை உண்டு என்று கிராமத்தார்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும் பஞ்சாயத்துகளைப்புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லி பரீக்ஷார்த்தமாகப்பஞ்சாயத்துகளை ஏற்படுத்திவருகின்றனர். பஞ்சாயத்துகள் ஏற்பட்டுள்ள இடங்களில் எவ்வளவுதூரம் கிராமத்தார்கள் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறார்கள் என்பதை கவனிப்போமானால் அந்த சங்கதி மிகக் குறைவாயிருக்கும். சில இடங்களில் மட்டும் பொறுப்புள்ளவர்களாய் நடந்து வருகிறார்கள். பல இடங்களில் பஞ்சாயத்தின் வகைகளும், அவசியமும், பஞ்சாயத்து நடத்தும் விதமும் தெரியாமலே இருக்கிறார்கள். கிராம காரியங்களில் எவ்வளது தூரம் பொறுப்புள்ளவர்களாய் இருந்து மேற்படிகாரியங்களில் பங்கு பெறலாம் என்பதையும், கடமை இன்னதென்பதையும் அறியாமலே காலங்கழிக்கின்றவர்கள் அநேக ஆயிரம் பேர் இருக்கின்றனர். கிராமத்தைப் பற்றியமட்டில் கிராமத்தார்கள் தெரிந்துகொள்ளவேண்டியவை அநேகம் உண்டு. எல்லா விஷயங்களைப்பற்றியும் எல்லாத்துறைகளிலும் எடுத்து எழுதி விளக்கமாயும் விரிவாயும் சொன்னால் தான் நம்முடைய எண்ணங்கள் கைகூடும்; கிராமப்பொது ஜனங்களும் தங்கள் கடமை இன்னதென்று உணருவார்கள்.

மேற்சொன்னமாதிரி விஷயங்களை கிராமத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் எப்படித்தெரிவிப்பது? அதற்கு எதைக்கருவியாகக்

கொள்ளலாம் என்றால் இப் "பஞ்சாயத்து" என்னும் பத்திரிகையே தகுந்த உதவிக் கருவியாயிருக்குமென்று நினைக்கிறோம். இதன் மூலம் கிராமத்தார்கள் தெரிந்து கொள்ளவேண்டியவைகளை அவர்களுக்குத் தெரிவிப்பது மேலானது என்று தோன்றியே இப்பத்திரிகையை ஆரம்பித்திருக்கின்றோம் காகிதத்தின் விலை அதிகரித்து இருப்பதால் இப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூபாய் மூன்று ஏற்படுத்த நேரிட்டது. சர்க்கார் பரீக்ஷார்த்தமாக ஏற்படுத்தியிருக்கும் பஞ்சாயத்துகளைப்பற்றி பாதகமான ரிபோட் ஏற்படாமலிருக்கும் பொருட்டும், இன்னும் பல கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படவும், கிராமத்தாகள் சிக்கனமாய் ஜீவிக்கவும், கிராமத்தார்கள் சுகஜீவிகளாய் வாழவும் இப்பத்திரிகை பக்க உதவியாயிருந்து மாதமொருமுறை கிராமந்தோறும் சென்று கவனித்துவரும். கிராம பஞ்சாயத்தார்களும் கிராமஉத்யோகஸ்தர்களும், கிராம மகாஜனங்களும் நண்பர்களும் இதனை அன்புடன் வரவேற்று அழைத்து ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்.

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிடும் விஷயமாய் ஊக்கங்காட்டிய எமது நண்பர்கள் பலருக்கும் எமது அன்பார்ந்த வந்தனத்தை மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். எல்லாம் வல்ல ஈசன் உலகத்திலுள்ள ஆன்மகோடிகளைக்காத்து ரக்ஷிக்கின்றானென்பதும், ஜனங்கள் சர்வ சுதந்திரங்களும் பெற்று சுகஜீவிகளாய் வாழ்ந்து வர அனுக்கிரஹிப்பாரென்பதும் சத்யம். ஓம்!!! சுபம்!!!

---

## பஞ்சாயத்து என்னும் பத்திரிகையில் வெளிவரும் விஷயங்கள்.

1. எல்லாவித பஞ்சாயத்துக்களைப்பற்றிய முழு விவரங்கள்.
2. விசேஷ பஞ்சாயத்துக்களின் விசேஷத் தீர்மானங்கள்.
3. பஞ்சாயத்துக்களை நன்றாய் நடத்துவதற்குரிய மார்க்கங்கள்.
4. கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்படவேண்டிய விதங்கள்.
5. பஞ்சாயத்துக்கள் முன்னேற்றமடைவதற்குரிய வழிகள்.
6. சென்னை போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் அடிக்கடி வெளிவரும் கிராமத்தார்கள் அறியவேண்டிய பஞ்சாயத்து முதலிய சட்டங்களும் இதர முக்கிய விஷயங்களும்.



7. கிராம சுகாதாரம், நாட்டுக்கல்வி வியவசாயம், கைத்தொழில், ஐக்ய நாணயச் சங்கங்கள் முதலிய விஷயங்கள்.
8. தேவஸ்தான விஷயங்கள், பொது ஸ்தாபன விஷயங்கள்.
9. விசேஷ காட்டுப் பஞ்சாயத்துக்கள், நீர்ப்பாசன பஞ்சாயத்துக்கள் முதலியவற்றின் விசேஷ நடவடிக்கைகளும், சுவதேச, பிறதேச வர்த்தமானங்களும் நீதிக்கதைகளும், விசேஷ நிருபங்களும், கோர்ட்டு வர்த்தமானங்களில் கிராமத்தார்கள் தெரிந்துகொள்ளவேண்டியவைகளும்.
10. ராஜீய விஷயங்களில் கிராமத்தார்கள் தெரிந்துகொள்ளவேண்டியவைகள்.

---

## மாதிரி கிராம பஞ்சாயத்துகள்.

## (Informal Village Panchayats.)

கிராமங்களில் பரீக்ஷார்த்தமாக பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்துவதில் ராஜாங்கத்தார் தமது பொறுப்பை கீழ்உத்தியோகஸ்தர்களாகிய தாசில்தார், டிப்டிகலெக்டர் முதலியோரிடம் ஒப்புவித்து விடுகின்றனர். அவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் ஆபீஸ்வேலைக்கு இடைஞ்சல் எற்படாமலும் மேலுத்தியோகஸ்தர்களுக்குப் போகவேண்டிய தபால்கள் எழுதியனுப்புவதில் தாமதம் சிறிதும் ஏற்படாமலும் பார்த்துக்கொண்டு ஓய்வுநேரத்தில் மட்டும் சில முக்கியமான கிராமங்களில் பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்தி மாதா மாதம் மேற்படி சபைகள் செய்யும் வேலையைக்குறித்து ரிபோர்ட்டு அனுப்புவதென்று எற்படுமானால், கிராமபஞ்சாயத்தார்களுக்கு விபரமாய் பஞ்சாயத்து சபைகளின் அவசியத்தைப்பற்றியும் சபைகள் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் சபைகளால் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் விவரித்துச் சொல்லி அவர்களை நல்வழியில் திருத்த அவர்களுக்கு வேண்டிய சாவகாசம் இல்லாமற் போகுமானால், பஞ்சாயத்தார்கள் யாதொரு வித அதிகாரமும் பெறாமல் எப்படி பஞ்சாயத்து சபைகளை நடத்துவது சாத்தியமாகும்? நல்லவேலைகளை அவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா? ரிவினியூ உத்யோகஸ்தர்கள் நல்ல அல்லது உண்மையான ரிபோர்ட்டுகள் அனுப்பமுடியுமா? ஜில்லாகலெக்டர்கள் என்னசெய்வார்கள்? கீழ்உத்தியோகஸ்தர்கள் அனுப்புவதை ஆதாரமாகக்கொண்டுதான் தங்கள் அபிப்பிராயத்தை சர்க்காருக்கு கலெக்டர்கள் தெரிவிக்கிறார்கள். உண்மையான நிலைமையை அறியாது கலெக்டர்கள் பாதகமாக அறிக்கைகளை அனுப்பித்தால் கவர்ன்மெண்டார் இப்பொழுது பரீக்ஷார்த்தமாக ஏற்படுத்திவரும் பஞ்சாயத்துகளுக்குத் தகுந்த அதிகாரங்களைக்கொடுத்து அவைகளை ஊர்ஜிதம் செய்யமாட்டார்கள். பிறகு நமது பிரதிநிதிகள் கவர்னர் சட்டசபைக

யில் வாதாடிவருவது வீணாய்விடும் பிறகு நமது கோரிக்கைகள் வீணாய்ப்போகுமோ வென்று சந்தேகிக்கநேரிடும். ஆகையால் கூடுமானவரை ரிவின்யூ உத்தியோகஸ்தர்களுக்கு பஞ்சாயத்து சபைகள் ஏற்படுத்துவதில் உதவிக் கருவியாக இருக்கவும் பஞ்சாயத்து சபைகள் ஏற்பட்டுள்ள ஊர்களிலே பஞ்சாயத்து சபைகளை நன்றாய் நடத்துவ தற்குரிய வழிகளை பஞ்சாயத்தார்கள் தெரிந்து கொள்ளவும், இச்சமயத்தில் நல்ல ரிபோர்ட்டுகளை வெளியிட்டு பரீக்ஷார்த்தமாய் ஏற்படுத்தப்பட்டுவரும் இப்பஞ்சாயத்து சபைகளுக்கு முறைப்படி அதிகாரங்களைக்கொடுத்து சீர்திருத்துவதற்கான வழிகளை ஊர்ஜிதப்படுத்தவும் இப்பத்திரிகைமூலமாக பஞ்சாயத்தார்களையும் கிராமமகாஜனங்களையும் தூண்டி நல்ல வழிகளில் பஞ்சாயத்துசபைகளை நடத்தும்படி வேண்டிக் கொள்ளுகிறோம். இதில் எல்லாவித பஞ்சாயத்துக்களைப்பற்றியும் வேறுசங்கங்களைப் பற்றியும் கோர்ட்டுகளைப்பற்றியும் அடிக்கடி விபரமாய் எழுதிவருவோம். கிராமங்கள் நல்ல நிலைமைக்கு வருவதற்குரிய விஷயங்களைப் பற்றியும் கிராமமகாஜனங்கள் சௌக்கியமாய் ஜீவிப்பதற்கும் தகுந்த மார்க்கங்களைக் குறிப்பிடுவோம்.

---

## பஞ்சாயத்தார்கள் கவனிக்கவேண்டியவை.
## (Panchayatdars' Items).

### I பஞ்சாயத்தும் மெம்பர்களும்.

1 பஞ்சாயத்துசபை ஏற்படுத்துவதற்கு முன்னால் கிராமத்திலுள்ள கக்ஷிப்பிரதிக்கக்ஷிகளையும் விரோதபாவங்களையும் கூடுமானவரையில் நீக்கி ஒற்றுமைப்படுத்தவேண்டும்

1 கிராமங்களில் ஜாதிபேதமன்றி தலைகட்டுகளுக்கும் தெருக்களுக்கும் தகுந்தபடி அந்தஸ்தும் செல்வாக்கும் பொறுப்பும் வாய்ந்துள்ளவர்களை கிராமகோவிலிலோ சாவடியிலோ அவர்களை அழைத்துவந்து ஒற்றுமைப்படுத்தி பஞ்சாயத்துசபையின் அவசியத்தைப்பற்றி விபரமாய் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

3 பஞ்சாயத்து சபைக்கு கிராமஜனங்களுடைய அபிப்பிராயத்தின் பேரில் 5 7, 9, 11 அங்கர்களை நியமிக்கவேண்டும்.

4 அப்படி நியமிக்கப்படும் அங்கர்கள் (மெம்பர்கள்) கிராமஜனங்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

5 தெரிந்தெடுக்கப்பட்ட அங்கர்கள் கிராமதேவதைகளின்பேரிலும் அவர்களுடைய குலதெய்வங்களின்பேரிலும் தாங்கள் எப்போதும் நியாயமாகவும் ஒழுங்காகவும் பாரபக்ஷமில்லாமலும் ஜாதி, குலம், அந்தஸ்து



முதலியவைகளின் வித்தியாசங்களைக் கொஞ்சமேனும் எண்ணாமலும் பஞ்சபூதசாக்ஷியாக பஞ்சாயத்து அங்கர்களாக நாங்கள் இருக்கிறவரையில் [illegible] பஞ்சாயத்து காரியங்களைச் சரிவர நடத்திவருவோமாகவும், என்று ஆணையிட்ட பிறகுதான் அங்கர்கள் ஸ்தானம் வகிக்கவேண்டும்)

(குறிப்பு:—கவர்னர் சட்டசபையில்கூட புதிய அங்கர்கள் தாங்கள் உண்மையாக நடந்துகொள்கிறோமென்று ப்ரமாணம் செய்கிறார்கள்.)

6 கிராமத்தில் வசிக்கிறவர்களுக்கும் சொந்த வீடு வைத்திருக்கிறவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் கூலி வேலைசெய்கிறவர்களுக்கும் அங்கர்களைத் தெரிந்தெடுப்பதில் பாத்தியம் உண்டு.

7 பஞ்சாயத்துசபையின் தலைவரை பஞ்சாயத்து அங்கர்கள் தெரிந்தெடுக்கவேண்டும்.

8 கிராமங்களின் ஜனத்தொகைக்கும் விஸ்தீரணத்திற்கும் தகுந்தபடி கூட்டங்கள் வாரம் ஒரு முறையாவது மாதம் இருமுறையாவது கூட்டப்படவேண்டும்.

9 எப்போதும் சபைக்கூட்டங்கள் பொது இடங்களாகிய கோயில்களிலாவது சாவடிகளிலாவது சத்திரத்திலாவது கூட்டப்படவேண்டும்.

10 கிராமப்பொது ஜனசௌகரியத்திற்கு ஏற்படுத்தும் பணத்திற்குத் தகுந்தபடியும் கிராமஜனங்களின் நிலைமைக்கு தக்கபடியும் பஞ்சாயத்து சபைக்குவேண்டிய மரச்சாமான்களையும் இதர சில்லரை சாமான்களையும் வாங்கிக்கொள்ளலாம். பஞ்சாயத்துக்கூட்டங்கள் கூடுங்காலத்தில் பெஞ்சு முதலிய சாமான்கள் அவசியமில்லை. சாதாரணமாக கையிலுள்ள பணமுதலுக்குத் தகுந்தபடி பஞ்சாயத்துஜனங்களும் பொதுஜனங்களும் உட்காருவதற்கு விரிப்புகள் வாங்கிக்கொள்ளலாம்.

### II பஞ்சாயத்து சபைக்குத் தேவையான சாமான்கள்.

11 பணத்திற்குத்தகுந்தபடி மேஜை நாற்காலியாவது அல்லது ஒரு விரிப்பும் ஒரு கைமேஜையுமாவது வாங்கிக்கொள்ளலாம்,

12. பஞ்சாயத்து ரிகார்டுகளையும் (தஸ்தாவேஜுகளையும்) சில்லரை சாமான்களையும் வைத்துக்கொள்ள தகுந்த பெட்டிகள் வேண்டும்

13. பஞ்சாயத்து ஆபீஸ், பஞ்சாயத்து சபைத்தலைவருடைய வீட்டிலாவது அல்லது அங்கர்களால் குறிக்கப்படும் ஓர் இடத்திலாவது இருக்கவேண்டும்.

14. தினந்தோறும் பஞ்சாயத்து சபையார்கள் தீர்மானத்திற்குவரும் மனுக்களை வாங்கவும் ஜனங்களுடைய குறைகளைக் கேட்கவும் காலையிலாவது மாலையிலாவது ஓர் காலத்தைக் குறிப்பிடவேண்டும்.

15. நடவடிக்கை புஸ்தகமும், சிவில் கேஸ் பதிவு புஸ்தகமும் கிரிமினல் கேஸ் பதிவு புஸ்தகமும், பஞ்சாயத்து அங்கர்கள் ஆஜர் பதிவு புஸ்தகமும், பஞ்சாயத்து வரவு செலவு புஸ்தகமும், கடிதப்போக்கு வரத்து பதிவு புஸ்தகமும், பஞ்சாயத்தாரால் தீர்க்கப்பட்ட கேஸ்களைக் குறிக்கும் புஸ்தகமும், கிராமங்களில் செய்துள்ள பொதுக்காரியங்களைக் காட்டும் புஸ்தகமும், சந்தா வசூல் புஸ்தகமும், ரசீது புஸ்தகமும், பஞ்சாயத்தாருடைய மேல்பார்வையில் வைக்கப்படும் பொதுக்கட்டடங்கள் சமுதாய நிலங்கள், தர்ம சொத்துக்கள் முதலியவைகளின் விபரம்காட்ட தனிப்புஸ்தகமும், குத்தகை ஒப்பந்தச் சீட்டுகள் முதலியவற்றைப்பதிவுசெய்யவும் முச்சலிக்கை வகையறுக்களை வைக்கவும் தனித்தனி புஸ்தகங்களும், விசேஷ கடிதங்களையும் சாசுவதமாக வைத்துக்கொள்ளவேண்டிய நிபந்தனை, ஒப்பந்தம், குத்தகை முதலிய சீட்டுகளையும் முக்கியமான கைக்குறிப்புக் கடிதங்களையும் வைத்துக்கொள்ள ஓர் ஒட்டுப்புஸ்தகமும், சாக்ஷி வகையறுக்களை தனியே குறித்து அவர்கள் சம்பந்தமாக குறிக்கவேண்டிய விஷயங்களுக்குத் தனிப்புஸ்தகம் ஒன்றும், சர்க்காருடன் கடிதப்போக்கு வரத்து செய்ய ஓர் தனிப்புஸ்தகமும் இருக்கவேண்டும்.

16. நடவடிக்கை புஸ்தகத்தில் முதலில் பஞ்சாயத்து நடவடிக்கைகள் எழுதும்போது இன்னவிடத்தில் இன்ன தேதியில் கூடினதென்று எழுதவேண்டும். ஆஜரானவர்களின் பெயர்களையும் குறிக்கவேண்டும். நடவடிக்கைகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதி அதற்கு அடியிலாவது அல்லது எதிர்ப்பக்கத்திலாவது தீர்மானங்களை எழுதிவரவேண்டும்.

## III பஞ்சாயத்தார்சளின் முக்கிய வேலைகள்.

17. கிராமங்களில் தெருக்களை சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், சப்பாத்திகளை அப்புறப்படுத்துதல் குளம் குட்டைகளை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ளுதல், வழிநடைப்பாதைகளை ஒழுங்காய் சீர்ப்படுத்தல், ஏரி, வாய்க்கால், கோவில், சத்திரம், சாவடி, பள்ளிக்கூடம் முதலியவைகளைப் பழுது பார்த்து கவனித்தல், சிவில் கிரிமினல் கேசுகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுதல் முதலியன.

18. கிராம எல்லைக்குள் கிராம சீர் திருத்த விஷயமாய் தாலூகா போர்டார் செய்ய எண்ணும் வேலைகள், அதாவது:—கிணறு வெட்டுதல், பாட





சாலை, சத்திரம் முதலியவைகளைப் பழுது பார்த்தல், புதிய பள்ளிக்கூடங் கட்டுதல், ரஸ்தாக்களுக்கு ஜல்லி (கப்பி) போடுதல் முதலிய சகல வேலைகளையும் பஞ்சாயத்தார்கள் தாங்களே செய்து முடிக்கத் தயாராக இருப்பதாக மேற்படி போர்டார்களுக்குத் தெரிவித்து ஷை வேலைகளின் ஒப்பந்தங்களைப் (கண்டிராக்ட்) பெற்று பஞ்சாயத்தார்களே நடத்தவேணும்.

19. கிராமங்களில் பஞ்சாயத்தார் செய்யமுடியாத பெரிய வேலைகளை கிராமத்தாரின் சௌகரியத்திற்காக செய்துமுடிக்க எண்ணினால் அவ்வேலைக்கு ஏற்படும் மொத்தச்செலவில் ஏதேனும் ஓர் பாகத்தை கிராமத்தார்களுக்காக பஞ்சாயத்தார்களே ஒப்புக்கொண்டு, சர்க்காரையே மேற்படி வேலையை முடித்து கிராமத்துக்கு சௌகரியம் உண்டாக்கிக்கொடுக்கவேண்டுமென்று வலுவல் நாம் கேட்டு அவர்களை வற்புறுத்தி நம் கிராமக்குறைகளை நிவர்த்திக்கவேண்டும்.

---

## திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் கிராம பஞ்சாயத்துக்கள் செய்துள்ள வேலைகள்.

## Report on the working of the Informal Panchayats in the Trichinopoly District.

1820-வது வருஷம் வரை கிராமப் பஞ்சாயத்து சபைகள் நல்ல நிலைமையிலிருந்தன வென்பதும் தற்போது கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாகப் பஞ்சாயத்து சபைகளை ஸ்தாபித்து வருகின்றனரென்பதும் பலர் அறிந்த விஷயம். ஆனால் இக்காலத்தில் ஸ்தாபிக்கப்படும் பஞ்சாயத்து சபைகள் ஒருவித சுதந்தரமும் பெருமலும் சட்டசம்மத மாக்கப்படாமலும் இருக்கின்றன. சபைகளுக்கு உரித்தான அதிகாரமும் கொடுக்கப் படவில்லை. எனினும் சிற்சில இடங்களில் மட்டும் பஞ்சாயத்து சபைகள் நன்கு நடத்தப்படுகின்றன. அதற்குக் காரணம் அங்குள்ளபொறுப்புவாய்ந்த உத்தியோகஸ்தர்களும் கிராமஜனங்களும் முக்கியஸ்தர்களாய் விளங்கிப் பஞ்சாயத்து சபைகளின் நன்மைக்காகவும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுகின்றனர்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா, உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் டிப்டி தாசில்தார் டிவிஷனில் பஞ்சாயத்து சபைகள் அதிமாயிருக்கின்றன. அங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள 90 பஞ்சாயத்துக்களுள் சுமார் 60 பஞ்சாயத்து சபைகள் நன்கு நடைபெறுகின்றன. சுமார் 30 பஞ்சாயத்து சபைகள் முதல்தரமான நடவடிக்கைகளை நடத்திவருகின்றன. மேற்சொன்ன பஞ்சாயத்து சபைகளில் கிராமங்களின் ஜனத்தொகைக்குத்தக்கபடி 5, 7, 9, 11 மெம்பர்கள் பஞ்சா

யத்தார்களாக அமர்ந்திருக்கின்றனர். விஷயங்களுக்குத் தக்கவாறு வாரம் ஒரு
முறை மாதமும்முறை மாதமிருமுறை இங்ஙனமாகக் கூட்டங்கள் கூடு
கின்றன. கிராமப்பொது விஷயங்களாகிய கிராம சுகாதாரம், குடி
தண்ணீர்க்குளம், வரி, சத்திரம், சாவடி, கோவில்கள், வழிநடைப்பாதை
கள் இன்னும் இவைபோன்ற பலவிஷயங்கள் நன்கு கவனிக்கப்படுகின்றன.
அநேக வருஷங்களாய்க் கிராமத்தார்களுக்குள்ளிருந்த சண்டை சச்சரவுகள்
நின்றுபோயின, கிராமதேவதைகளின் உற்சவங்கள் செவ்வனே நடத்தப்பட்டு
வருகின்றன. திருப்பணிகளும் ஒழுங்குடன் கவனிக்கப்படுகின்றன. ஸிவில்,
கிரிமினல் வியவகாரங்களைக் கூடுமானவரை இரண்டு கக்ஷிக்காரர்களுடைய
சம்மதத்தின் பேரில் பஞ்சாயத்து சபையார்கள் விசாரித்து, நியாயமாகத்
தீர்ப்பு சொல்லிவருகின்றனர். விசாரணை, குறுக்கு விசாரணை, சாக்ஷி விசாரணை
முதலியவைகளிலும் வாக்குமூலம் வாங்குவதிலும் அதிக திருத்தம் பெற்றிருக்
கின்றனர். பெரும்பாலும் பஞ்சாயத்து மெம்பர்கள் ஜனங்களால் தெரிந்தெடு
க்கப்படுகின்றனரென்றே சொல்லப்படுகிறது. திருமழப்பாடி என்னும் கிரா
மத்திலுள்ள ஜனங்களில் ஒரு வகுப்பார் ஜாதிவாரி ஸ்தானம் கிடைக்கவேண்
டுமென்றும் தங்கள் தலைக்கட்டுக்கும் ஒரு பிரதிநிதி வேண்டுமென்றும் மனுக்
கொடுத்துக் கொள்ள பஞ்சாயத்தார் தீர்க்காலோசனை செய்து அந்த யோச
னையை ஏற்கவில்லை. ஸிவில், கிரிமினல் வியவகாரங்களிலும், மஹமைக் குத்
தகைகளிலும், கிராமப் பொது சமுதாயங்களிலும் வருமானங்கள் கிடைக்கின்
றன. பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்து சபைகளுக்கு
மூலதனம் ஏற்படுத்தியிருக்கின்றனர். கிராமப் பஞ்சாயத்து சபைகள்
அதிகம் ஏற்பட்டு ஸிவில் வியாஜ்யங்களைத் தீர்த்து ஒழுங்குபடுத்துவதால்,
அரியலூர் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் அதிக நம்பர்கள் தாக்கல் செய்
யப்படவில்லையென்று மேற்படி டிஸ்டிரிக்ட் முனிசீப் தமது ரிபோர்ட்டில்
ஜில்லா கோர்ட்டுக்குத் தெரிவித்தாரென்று சொல்லப்படுகிறது. ரூ 200
வரை ஸிவில் வியவகாரங்களையும் தீர்த்து வருகின்றனர். அநேக ஆக்ரமிப்
புத் தகரார்களையும் வழி நடைப்பாதைகள் வரப்பு வாய்க்கால் சம்பந்தமான
விவகாரங்களையும், சில்லரை கிரிமினல் குற்றங்களையும் விசாரிக்கின்றனர்.

இதுகாறும் பஞ்சாயத்து சபைகள் அந்த டிவிஷனில் செய்துள்ள வே
லைகள் வருமாறு:—

1. பொது ஜன நன்மையையும், சுகாதாரத்தையும் முன்னிட்டுச் சப்பா
த்திகள் எடுக்கப்பட்டதின் மதிப்பு ரூ. 30,000.

2. சுமார் 6 கிராமங்களில் குள மராமத்து செய்து மண்வெட்டிப்
போட்ட வேலைகளின் மதிப்பு ரூ. 2,000.

3. 15 கிராமங்களில் குடி தண்ணீர்க்குளங்களைச் சுத்தப்படுத்திய
வேலையின் மதிப்பு ரூ. 500.



15

4. திருமழபபாடி, திருமானூர் கிராம ரஸ்தாவைச் சீர்படுத்திய வேலை
யின் மதிப்பு ரூ. 250.

5. 5 கிராமங்களில் பஞ்சாயத்தார்களால் கிராமக் கோயில்களை மரா
மத்து செய்ததின் மதிப்பு ரூ. 500,

6. விழுப்பனங்குரிச்சி கிராமப் பஞ்சாயத்தார் முயற்சியால் மேற்படி
கிராமக்கோயிலின் முடிந்த வேலையின் மதிப்பு (கும்பாபிஷேகச் செலவு)
ரூ. 5000.

7 அடுத்த வருஷத்தில் எதிர் பார்க்கப்படும் கிராமக் கோயில்களின்
வேலை மதிப்பு ரூ. 20,000

8. ஓட்டக் கோயில் தேவாலயம் சீர்ப்படுத்தப்படுவதின் மொத்த
மதிப்பு ரூ. 10,000.

9, திருமழப்பாடி பஞ்சாயத்தாரும் மற்றொரு பஞ்சாயத்தாருமாகச்
சேர்ந்து வாய்க்கால் வெட்டு வேலை மதிப்பு ரூ 250.

10. புத்தூர் என்னும் கிராமத்தில் (5 மைல் நீளம்) கனி வர்க்கங்களையும்
விருக்ஷங்களையும் வைத்துப் பயிர் செய்த வகையில் ரூ. 150.

11. கிராமங்களில் ஏரிகளின் ஜலவரத்து வாரிகளையும் போக்கு மதகு
களையும் மராமத்து செய்து நீரணிகளை நியமித்து ஜல சப்ளை செய்யும் விஷய
மாய் ரூ 1,000.

12. விளிப்பிரிங்கியம் என்னும் கிராமத்தில் பஞ்சாயத்தார்கள் பாடசாலை
ஏற்படுத்தி பாடசாலை உபாத்தியாயர்களுக்குப் பஞ்சாயத்து வருமானத்திலி
ருந்து சம்பளம் கொடுத்து வருகின்றனர்.

இனியாகிலும் கவர்ன்மெண்டார் தாமதமின்றிக் கிராமங்கள்தோறும் சட்
டப்படி பஞ்சாயத்து சபைகளை ஸ்தாபித்து, தக்கப்பொறுப்புகளைக் கொடு
த்து அன்புடன் அருள்புரிவாராக. சுபம் !!!

குறிப்பு:—திருச்சி ஜில்லாவிலும் இதர ஜில்லாக்களிலும் பஞ்சாயத்துக்
கள் நன்கு நடைபெறுவதாய் அறிகிறோம். பலவிடங்களிலிருந்து நடவடிக்
கைகள் வரப்பெற்று பிரதி மாதமும் அவைகளைப் பிரசுரிப்போம். திருச்சி
தாலூக்காவில் குழுமணி கிராம பஞ்சாயத்தார் ஒரு சிறிய ரஸ்தாவுக்கு கப்பிப்
போடுவதைப்பற்றிய ஒரு வருஷ ஒப்பந்தத்தை திருச்சி தாலுக்கா போடா
ரிடமிருந்து பெற்றிருக்கின்றனர் என்று அறிகிறோம். இதர பஞ்சாயத்தார்
கள் இதனைக் கவனிப்பார்களாக.

## காட்டுப்பஞ்சாயத்தைப்பற்றி.

### கனம் சிதம்பரநாத முதலியார்.

### Hon'ble K. Chidambaranadha Mudaliar on Forest Panchayats.

1916-ஆம் வருஷத்து கோயம்புத்தூர் ஜில்லா கான்பரன்ஸின் அக்கிராசனாதிபதியாக இருந்து கனம சிதம்பரநாத முதலியார் அவர்கள் காடுகளைப்பற்றியும் காட்டு இலாகா பஞ்சாயத்துகளைப் பற்றியும் அவர் தெரிவிப்பதாவது :—

இந்த ஜில்லாவின் விஷயங்களைக் கவனிப்போம். இந்த ஜில்லாவிலுள்ள காடுகளிலே தேக்கு, சந்தனம், முதலிய பலவகை மரங்கள் வெகுவாய் வளருன்றன. இம்மாதிரியான காடுகளை க்ஷீண திசையடையும்படி விட்டுவிட்டால், மறுபடியும் அவைகளை நிலைநாட்டமுடியாது. தேசத்தின் நன்மைகளைக் கவனிக்கும்பொழுது, காடுகளின் விஷயமாய் கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்கும் கோட்பாட்டை முற்றிலும் மாற்றவேண்டும். காடுகள் நாள்தோறும் க்ஷீண திசையடைந்து வருகின்றனவென்பதைப்பற்றி அபிப்பிராய பேதமிராது

காடுகள் இப்பொழுதுள்ள துக்ககரமான நிலைமையடைந்திருப்பதற்குக் காரணமென்னவென்பதை கவர்ன்மெண்டார் கவனித்திருக்கின்றனரா? கவர்ன்மெண்டின் காட்டிலாகா நிபுணர்களாவது காடுகளின் நிலைமையை உத்தேசித்து அதைத் திருத்துவதற்கு ஏதேனும் பரிகாரம் சொல்லியிருக்கிறார்களா? அவ்விதம் அவர்கள் செய்திருக்கிறார்களென்பதற்கு எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை. காடுகள் க்ஷீண திசையடைந்திருப்பதைப் பார்த்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதைவிட கவர்ன்மெண்டாவது ஜனங்களாவது சும்மாவிருப்பது நியாயமாகுமா? காடுகளைச் சரிவர காப்பதற்கே காட்டிலாகா ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் தினந்தோறும் அந்த இலாகா செய்து வரும் வேலை யென்ன? மரங்களோ வெட்டப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூரிலுள்ள சென்னை பாரஸ்டு கலாசாலையின் பரிசளிப்புக் கொண்டாட்ட சமயத்திலே கனம் கில்மான் "காடுகளின் சமபந்தமாய் ஜனசமூகமும் பத்திரிகைகளும் செலுத்தும் கவனம் கம்மி யென்று புகார் செய்திருக்கிறார். காடுகள் க்ஷீண திசையடையாமலிருப்பதற்குச் செய்யவேண்டிய மார்க்கமென்னவென்றால், உயர் மரங்களை வெட்டக்கூடாது; பட்டுப்போகும் தருவாயிலிருக்கும் மரங்களையும் பட்டுப்போன மரங்களையுமே வெட்டவேண்டும் இவ்விதம் செய்வதானால். கவர்ன்மெண்டின் வரி வருமானம் குறையுமென்பது எனக்குத் தெரியாமலில்லை. ஆனால் காடுகளின் விஷயமாய் அனுஷ்டிக்கப்படும் கோட்பாட்டினால், முதல் போய்விடும்; காடுகள் க்ஷீண திசை



யடைவதால் மழை வரவரக் குறைகிறது; நதிகளின் ஜலம் வறண்டு போகிறது; காடுகள் சரியான நிலைமையில் இருந்தால்தான் மைதானங்களின் நிலைமை திருப்திகரமாக இருக்கும். ஆகவே. தேசத்தின் நிரந்தரமான க்ஷேமலாப விருத்தியைப் பாது காப்பதற்காக, இப்பொழுது காட்டில் கிடைக்கும் வரி வருமானத்தை கவர்ன்மெண்டார் பறிகொடுக்கவேண்டும். தவிர கிராமங்களிலுள்ள காடுகளை விருத்திசெய்ய வேண்டுமென்பதோடு, கால்வாய்களின் கரைகளிலும், புறம்போக்கு நிலங்களிலும் மரங்களை வளரச் செய்யவும் வேண்டும்.

### காட்டிலாகா பஞ்சாயத்துக்கள்.

காட்டிலாகா பஞ்சாயத்துக்களின் விஷயமாய் கவர்ன்மெண்டும் கனம் கில்மானும் எடுத்துக்கொள்ளும் சிரத்தையைக் குறிப்பிடவேண்டும் அப்பஞ்சாயத்துக்களில ஜனங்களும் கவனஞ்செலுத்தி அவைகளில் கலந்து உழைக்கவும் வேண்டும். மரங்களைப் பயிராக்கிப் பாதுகாப்பதானது மேலான பெரிய நற்காரியமாகுமென்று நமது முன்னோர்களான மகரிஷிகளும் பெரியோர்களும் விதித்திருக்கின்றனர். இந்த மிகப்பெரிய நற்காரியத்தில் கவர்ன்மெண்டும் ஜன சமூகத்தினரும் கவனஞ்செலுத்தி உழைத்து வருவார்களாக.

---

## காட்டுப்பஞ்சாயத்து சபைகள்.

## Forest Panchayats.

முற்காலங்களில் நமது கிராமத்தார்கள் ஆடுமாடுகள் மேய்ப்பதிலும் வீடுகளுக்குத் தேவையான விறகு முதலியவற்றைச் சேகரிப்பதிலும் கஷ்டமின்றி வாழ்ந்து வந்தனர். இக்காலத்திலோ காடுகளை ஸர்க்கார் தங்கள் வசமாக்கிக்கொண்டுவிட்டபடியால் பொது ஜனங்களும் கால் நடைகளும் கஷ்டப்படுகின்றன. எந்தெந்த கிராமங்களுக்கருகில் காடுகள் இருக்கின்றனவோ அந்தந்த கிராமங்களில் காட்டுப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த ஆரம்பித்து இருக்கின்றனர். அவ்வாறு பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்துவதில் குடிகளுக்கு சில சௌகரியங்களும் ஏற்படுகின்றன தங்கள் கிராமப் பக்கத்திலுள்ள காடுகளைப்பற்றி கவலை எடுத்துக்கொண்டு அவைகளை நிர்வஹிப்பதில் ஓரளவு சுதந்திரமும் பெறுகின்றனர். பொறுப்பும் அதிகமாகிறது அவர்கள் திறமையாய் நிர்வகிப்பார்களானால் அவர்களுக்கு நன்மைகள் பலவுண்டாகும்.

சென்ற சிலவருஷங்களாக காட்டு நிர்வாகப்பஞ்சாயத்து சபைகளை கவர்ன்மெண்டார் சிலகாலமாக ஏற்படுத்தி வருகின்றார்கள். 1915–1916-ம் வருஷத்திய ஸர்க்கார் வருஷ முடிவு அறிக்கையில் 147 காட்டுப்பஞ்சாயத்து

சபைகள் ஏற்பட்டிருப்பதாய்க்கண்டிருக்கிறது. அதற்கு முந்திய வருஷத்தில் 76 பஞ்சாயத்துக்களே ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஒரு வருஷத்திற்குள் 71 பஞ்சாயத்து சபைகள் அதிகரித்து இருப்பதைக் கவனிக்கும்போது இதன் அவசியத்தையும் உபயோகத்தையும் ஜனங்கள் நன்கு கண்டுகொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. மேற்சொன்ன 141 சபைகளின் மேல்பார்வையில் சுமார் 134213 ஏகர் விஸ்தீரணமுள்ள காடுகளை இராஜாங்கத்தார் வைத்திருக்கின்றனர். கூடுமான வரையில் எல்லா சபைகளும் நன்றாக வேலைசெய்கின்றனவென்று தெரியவருகிறது. காடுகள் உள்ள கிராமங்களில் இப்பஞ்சாயத்துக்களை அதிகமாயும் விரிவாகவும் ஏற்படுத்திக்கொடுக்கும்படி நாம் கவர்ன்மெண்டாரை வேண்டுகிறோம். காட்டுப்பஞ்சாயத்து சபைகளின் உபயோகங்களைப்பற்றியும், அவைகளை நடத்தும் விதங்களைப்பற்றியும் இன்னொரு முறை விபரமாய்க் கூறுவோம்.

---

## யூனியன் பஞ்சாயத்து விஷயமாய் கவர்ன்மெண்டு விளம்பரங்கள்.

## Notifications by the Govt. regarding "Union Panchayats"

உதகமண்டலம், 1917-ம் ௵ மே-௴ 1-௳ நெ. 438.

### யூனியன் பஞ்சாயத்துக்களின் அக்கிராசனாதிபதிகளை எலெக்ஷன் மூலமாய் நியமிப்பதற்கான விதிகள்

1. அக்கிராசனாதிபதியைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரம் எந்த யூனியன் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படலாமோ அந்த யூனியன் பஞ்சாயத்தில் அக்கிராசனாதிபதிகளை அடியிற்கண்ட விதிகளின்படி தெரிந்தெடுக்கவேண்டும்.

2. எலெக்ஷனானது அந்தக்காரியத்திற்காகவே பிரத்தியேகமாய்க் கூட்டப்பட்ட பஞ்சாயத்தின் ஒரு சபையில் நடத்தப்படவேண்டும். எந்த தாலூகா போர்ட் பிரசிடெண்டினுடைய அதிகார வரம்பில் அந்த யூனியன் இருக்கிறதோ அந்த தாலூகா போர்ட் பிரசிடெண்டானவர் இந்த சபையைபற்றி பதினன்கு தினத்துக்குக்குறையாமலும் இருபதுதினத்துக்கு மேற்படாமலும் முன்னதாக விளம்பரம் பிரசுரிக்கவேண்டும்.

3. அக்கிராசனாதிபதி உத்தியோகத்துக்காக முன்வரும் ஒவ்வொரு அபேட்சகரும், 1884-ம் ௵த்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 123-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி அந்த பஞ்சாயத்தில் ஒரு



மெம்பராயிருக்கவேண்டும். அவர் பஞ்சாயத்தைச் சேர்ந்த குறைந்தது 2 மெம்பர்களால் அடியிற்கண்ட நமூனாப்படி நேமகம் செய்யப்படவேண்டும், புதிய அக்கிராசனாதிபதியைத் தெரிந்தெடுக்கப்போகும் சபையின் தேதிக்குக் குறைந்தது 7 தினத்துக்கு முன்பாக இந்த நமூனாவை உத்தியோகம் வகிக்கும் அக்கிராசனாதிபதிக்கு அனுப்பவேண்டும்.'

யூனியன் பஞ்சாயத்து.

19 -ம் ௵ மாதம் தேதியில் நடத்தப்போகும் எலெக்ஷனில், அக்கிராசனாதிபதி உத்தியோகத்துக்கு அபேட்சகராக (இன்னார்) அடியிற் கையெழுத்திட்ட நாங்கள் நேமகம் செய்கிறோம்.

தேதி. (கையெழுத்து)

யாதொரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் அபேட்சகராய் முன்வருவதற்காக ஜில்லா கலெக்டருடைய அனுமதியைப்பெற்றிருந்தாலன்றி மற்றபடி அவர் அபேட்சகராய் நேமகஞ்செய்யப்படுவதற்குத் தகுதியற்றவராவார்.

4. யூனியன் பஞ்சாயத்தின் அக்கிராசனாதிபதியானவர் அப்படிப்பட்ட நேமகங்களைக் குறித்து அடியிற்கண்ட நமூனாப்படியுள்ள ஒரு ஜாபிதாவை, யூனியன் பஞ்சாயத்து ஆபீசில் ஒரு நோட்டீஸ் தொங்கவிட்டு அதன்மூலமாக உடனே பிரசித்தஞ்செய்யவேண்டும். அதில் மூன்று கலங்கள் முக்கியமானவை. 1. பெயர் 2. விவரம். 3. இருப்பிடம்.

5. (a) எலெக்ஷன் நடக்கும் தேதியிலே, அக்கிராசனாதிபதியாவது அக்கிராசனாதிபத்தியம் வகிக்கும்படி தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பராவது பிரஸ்தாப உத்தியோகத்துக்காக நேமகஞ்செய்யப்பட்டிருக்கும் அபேட்சகர்களின் பெயர்களை வாசித்து, உடனே தெரிந்தெடுக்கத் தொடங்கி, அதை அடியிற்கண்ட விதமாய் நடத்தவேண்டும்.

வோட் (அபிப்பிராயம்) கொடுக்க விரும்பும் ஒவ்வொரு மெம்பருக்கும் அபேட்சகர்களுடைய பெயர்கள் அடியிற்கண்ட நமூனாப்படி அச்சிடப்பட்டாவது தெளிவாய் எழுதப்பட்டாவதுள்ள ஒரு துண்டு காகிதம் சபையில் கொடுக்கப்படவேண்டும்.

| | அபேட்சகரின் பெயர். | வோட், |
|---|---|---|
| 1. | ... ... ... ... | ... |
| 2. | ... ... ... ... | ... |
| 3. | ... ... ... ... | ... |

அதன்பிறகு, மெம்பர். தாம் எந்த அபேட்சகருக்கு வோட் கொடுக்கிறாரோ அவருடைய பெயருக்கு எதிராக × என்னும் அடையாளத்தை இரகசியமாய்ப்போட்டு அந்த துண்டு காகிதத்தை அபிப்பிராயச்சீட்டுப் பெட்டியில் போட்டுவிடவேண்டும்.

அதன்மேல் அக்கிராசனாதிபதியாவது அக்கிராசனாதிபத்தியம் வகிக்கும் மெம்பராவது யூனியன் பஞ்சாயத்தாரின் முன்னிலையில் அந்தப்பெட்டியைத் திறந்து வோட்டுகளை எண்ணவேண்டும். எந்த அபேட்சகருக்கு மிகவும் அதிக வோட்டுகள் கிடைத்திருக்கின்றனவோ அவராவது, ஒரே ஒரு அபேட்சகர் நேமகம் செய்யப்பட்டிருந்தால் அந்த அபேட்சகராவது, அந்த உத்தியோகத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவராக எண்ணப்படுவார்

(b) பிரஸ்தாப உத்தியோகத்துக்கு நேமகம் செய்யப்பட்ட எந்த அபேட்சகரும் வோட்கொடுக்கும் விஷயத்தில் தலையிடக்கூடாது; ஆனால் ஒரு அபேட்சகர் தம்மை நேமகம் செய்தவர்களுடைய சம்மதத்தைப் பெற்றாவது பெறாமலாவது எந்த தசையிலாகிலும் தாம் அபேட்சகராய் முன்னிற்பதினின்றும் விலகிக்கொள்ளலாம். அதன்பிறகு வோட் கொடுக்கும் விஷயத்தில் தலையிடுவதற்கு அவர் யோக்கியதையுடையவராவார்.

ஜில்லா கெஜட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

---

## படிப்பு விஷயம்.

### கிராமங்களில் கல்வி.

### Education in Villages.

இவ்வியாசத்தில் கல்வியின் உபயோகத்தைப்பற்றியும் அது நமக்கு அத்தியாவசியமானது என்பதைப்பற்றியும் அதிகமாய்ச் சொல்லவேண்டியது அனாவசியமென்று நினைக்கின்றேன். கல்வி பட்டணவாசங்களில்தான் உயர்ந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்த விஷயம். பட்டணங்களில் இருப்பதைப்போல் அவ்வளவு இல்லாவிட்டாலும் ஏதோ கொஞ்சமாவது கிராமங்களிலும் கல்வியை அப்பியசிக்கவேண்டுவது அவசியம். "கிராமங்களுக்குப் படிப்பு எதற்கையா, பட்டணங்கள் கெட்டதுபோரும்" என்று யாரேனும் மறுத்தளிப்பவர் இருப்பாரென்று நான் நம்பவில்லை. பெண்களுக்குப் படிப்பாகாதென்று சொல்லும் மூடர்களைப் பார்த்திருக்கிறேன் கிராமவாசிகளுக்கும் படிப்பு வேண்டாமென்று சொல்லுவாரை இனிமேல்தான் காணவேண்டும்.



கல்வி என்றால் என்ன என்று தெரியாமலே பலர் வாதாடி ஒருவரோடொருவர் சச்சரவு செய்கிறார்கள் புத்தகங்களை வாசிப்பதும் சிலேட்டுகளில் எழுதுவதும் மாத்திரமே படிப்பாகாது. உண்மையான படிப்பு மனப்பெருக்கு, பெருந்தன்மை காம்பீரியம், மற்றவருள்ளம் அறிதல், நிதானித்துப் பேசுதல், வணக்கவொடுக்கம் மனிதரோடு மரியாதையாய்ப் பழகுதல், வியவகாரங்களில் நுட்பம், நெறியோடொழுகிச் சரியாயிருத்தல், நன்மை உண்மை தீமை பொய்மை என்னவென்று கற்றறிய ஆசை, இவைகளைப் பகுத்தறியும் சக்தி இன்னும் இவை போன்ற மனிதனைச் சரியானமனிதனாகவும், தேவனென்றே சொல்லும்படியாகவும் செய்யக்கூடிய உயர்ந்ததாகிய ஞானமே படிப்பு. இம்மாதிரி பார்ப்போமானால், கிராமாந்தர வாசிகளில் கிட்டத்தட்ட சரிபாதிக்கு மேல் சுமாராய்ப் படித்தவர்களென்றே சொல்லலாம்.

ஆனால் எழுதப்படிக்கத் தெரிவது சுயப்படிப்புக்கு இன்றியமையாத உபகரணம். மேற்சொன்ன லோக வியவகாரங்களின் மேன்மைக்குணங்களெல்லாம் எப்பொழுதும் நம்மைவிடப்பெரியோரைக்கண்டு பேசியே சம்பாதிக்கமுடியாது. பெரும்பான்மையாக அவர்கள் எழுதிய புத்தகங்களிலிருந்தே அறியவேண்டும் இதற்கு பாஷா ஞானம் அவசியம். பட்டணங்களில் படிப்பு இங்கிலீஷில் இருந்தாலும் நம் கிராமங்களில் தமிழ் அப்பியாசம் மாத்திரம் போதும். தமிழே நம்முடைய தாய்ப் பாஷையானதால் அதையே விருத்தி செய்வது நம்முடைய கடமையாகும்.

தற்காலத்தில் பள்ளிக்கூடமில்லாத கிராமம் இல்லையென்றே சொல்லலாம். நமது கவர்ன்மெண்டார் ஜனங்கள் நன்மையைக் கருதி கிராமங்களெங்கும எலிமெண்டரி அல்லது ஆரம்பக்கல்விப் பாடசாலைகளை விருத்தியாக்கிக்கொண்டே வருகிறார்கள். மனுஷ திரவிய சகாயம் செய்ய எப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிராம வாசிகளும் ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். எங்கெந்த கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லையோ, அங்கங்கே காலதாமதமில்லாமல் வித்தியாப்பியாசத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும் 100, 150, குடிகளுக்குக் குறையாமல் இருக்கப்பட்ட ஒவ்வொரு ஊருக்கும் அவ்வூர்ப் பிள்ளைகள் படிக்க ஒரு பள்ளிக்கூடம் நிச்சயம் வேண்டும் என்பது என் அபிப்பிராயம். ஊருக்குள் தலைவனாயிருக்கப்பட்ட மிராசுதாரோ அல்லது ஊர் பஞ்சாயத்தோ அவருடைய பணத்திலிருந்தாவது அல்லது பஞ்சாயத்துப் பொது பண்டிலிருந்தாவது செலவை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கவேண்டும். அப்பொழுது சர்க்காரும்கூட உதவியளிக்கக்கடமைப்பட்டுப் பின் உதவிசெய்வார்கள் என்பது நிச்சயம்.

மேற்கு தேசங்களில் மூன்று விஷயங்களை ஆரம்பப்படிப்பிற்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்பார்கள். நமக்கும் அவைகளே சரியாகும். வாசிப்பது, எழுதுவது, கணக்குப் பார்ப்பது என்பவைகளே. இந்த மூன்றும் தெரியுமா என்றுதான் நம்மையும் நம் ஜனங்களும் கேட்கிறார்கள். இது ஸகஜம் தான்.

என். ரங்கசாமி அய்யர்,

எம். ஏ. எல். டி.

(இன்னும் வரும்.)

---

## மாகாண கல்விக்காக கிராண்டுகள்.

நமது இராஜாங்கத்தார் நமது சென்னை மாகாணத்தில் கல்வி அபிவிர்த்திக்காக ஐந்தரை லக்ஷம் ரூபாய் கிராண்டு கொடுத்திருக்கிறார்கள். அப்பெருந்தொகையில் பெரும்பாகத்தை கிராமங்களில் அதிக பாடசாலைகளை ஏற்படுத்துவதிலும், உபாத்தியாயர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து அவர்களின் குறைகளை நீக்குவதிலும், தொழிலாளிகளுக்குப் புது முறைகளில் இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதிலும், கைத்தொழில், விவசாயம் முதலியன சொல்லிக்கொடுப்பதற்குத் தகுந்த பாடசாலைகள் ஏற்படுத்துவதிலும், செலவு செய்யுமாறு நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். கூடுமானால், எந்த இடங்களில் கிராம பஞ்சாயத்துக்கள் நன்கு நடைபெறுவதாக கவர்ன்மெண்டார் அறிகிறார்களோ அந்தப் பஞ்சாயத்சார்கள் வசம் ஏதோ ஒரு சிறு தொகையை கொடுத்து அவர்களையே தங்கள் தங்கள் கிராம பாடசாலையின் மேல்பார்வையை ஒப்புக்கொண்டு பள்ளிக்கூடத்தைக் கவனித்துவரும்படி விட்டுப் பார்க்க வேண்டுமென்பதை நாம் வற்புறுத்துகிறோம்.

## கல்விக்காக கிராண்டுகள்.

சென்னை அரசாங்கத்தார் ஜில்லா போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் எலிமெண்டரி பாடசாலைகள் கட்ட ரூ. 199807-ம் பள்ளிக்கூட உதவிக்காக ரூ. 169807-ம் கொடுத்திருக்கிறார்கள்.

## பள்ளிக்கூடம் விழுந்தது.

கள்ளிக்கோட்டையிலுள்ள ஒரு மாப்பிளா பள்ளிக்கூடம் ஒரு பெரிய காற்றினால் விழுந்ததனால் ஒருவன் இறந்தும் 20 பிள்ளைகள் காயம்பட்டும் போயினர்.

## ஸ்ரீமான் எஸ். ராமானுஜம்.

சென்னை வாசியாகிய ஸ்ரீமான் எஸ் ராமானுஜம் என்னும் 26 வயதுள்ள ஒரு வாலிபர் சீமைக்குச் சென்று கணித சாஸ்திரத்தில் நிபுணராகி சமீபத்



தில் எப். ஆர். எஸ். என்ற புதிய பட்டம் பெற்றது சரித்திரத்தில் புதுமையானது. அவர் கணக்கில் பல நூதன வழிகள் கண்டு பிடித்திருக்கிறார்.

## உபாத்தியாயர்களுக்கு நற்காலம்.

சென்னை கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களுக்கு இனி 20 ரூபாயிலிருந்து 35 ரூபாய் வரை சம்பளம் உயர்த்தப்படும். மேற்படி பள்ளிக்கூடங்களில் இலவசப் படிப்பு சொல்லிக் கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானம் ஆயிற்றாம்.

## சக்கண்டரி ஸ்கூல்களுக்கு கிராண்டு.

தென் ஆற்காடு ஜில்லா போர்டு, பல்லாரி, சிக்காகோல், கரூர், ஆதோணி முனிசிபாலிடிகள் ஆகிய இவைகளுக்கு சக்கண்டரி ஸ்கூல்கள் கட்ட ரூபாய் 105,000-ம் வாலாஜாபாத் திண்டுக்கல் முனிசிபாலிடிகளுக்கும், திருச்சி, தஞ்சை, நெல்லூர் ஜில்லா போர்டுகளுக்கு ரூ. 126580-ம் ராஜாங்கத்தார் கொடுத்திருக்கிறார்கள்.

---

## குடியானவர்களின் நிலைமையை உயர்த்துதல்.

## How to improve the condition of Farm Labourers.

---

நமது நாட்டிலே விவசாயிகளின் நிலைமை நாளுக்கு நாள் தாழ்ந்து கொண்டேவருகிறது. குடியானவர்களின் தினசரி வருமானம் நாளுக்குநாள் குறைந்து கொண்டுவருவதால், இவர்கள் தங்கள், தங்கள் கிராமங்களை விட்டு விட்டு அந்நிய நாடுகளுக்குக் கூலிகளாக போவதும், நமது நாட்டிலுள்ள பட்டணங்களில் ஜனங்கள் வந்து சேர்வதுமாய் இருக்கிறது. இந்த நிலைமையைக்கொண்டுதான் "கெட்டும் பட்டணம் சேர்" என்னும் வசனமும் ஏற்பட்டுவிட்டது.

பெரிய பட்டணங்களுக்கு அருகாமையுள்ள கிராமங்களிலுள்ள பெரும்பான்மையான குடியானவர்கள், விவசாயத் தொழில் உள்ள காலம் போக பாக்கியிருக்கும் காலங்களில் பட்டணங்களில் வந்து கூலிக்கு வேலை செய்து வருகிறார்கள். இதனால் பலவித மான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பட்டணங்களின் அருகாமையிலுள்ள கிராமங்களில் கூலியாள் கிடைக்காமல் சிரமப்படவேண்டியிருக்கிறது. இவ்விதமாய் கிராமாந்திரங்களிலுள்ள விவசாய வேலைக்காரர்கள் நமது நாட்டைவிட்டு வெளியேறுவார்களானால் நமது நிலைமை என்னவாகும் என்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

இந்நாட்டில் சுமார் 100-க்கு 80 பேர், விவசாயத்தையே நம்பியிருப்பவர்களாயிருக்கிறார்கள். போதிய ஆகாரம் விளைவிக்கப்படாததாலும், வேறு சிலகாரணங்களாலும், இந்நாட்டில் ஆகாரப்பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. தாது வருஷப் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கலம் (பட்டணம்படி 24க்கு) ரூ. 2—8—0 விற்றது. ஜனங்களுக்குக் கஷ்டத்தை விளைவித்ததோடு, ஏழை ஜனங்களும் நெல்மண்டிகளில் புகுந்து கொள்ளையடித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். சென்ற 5, 6 வருஷகாலமாய் கலம் ரூ. 2-8-0க்குக் குறைவில்லாமலே நெல் விற்று வருகையில் ஜனங்கள் பொறுத்து நிற்கிறார்கள். இதனால் பொது ஜனங்களுடைய நிலைமை உயர்ந்திருக்கிறது என்று சொல்லக்கூடும். இது தப்பு அபிப்பிராயம். 2½ ரூபாய் வீதம் பலவருஷகாலம் பணம் கொடுத்து, கொடுத்து வழக்கமாய் விட்டது. வழக்கத்தினால் ஒன்றும் தெரியவில்லை.

ஆனால் இவ்வாறு விலைவாசியேறியிருப்பது நமது காருண்ய கவர்ன்மெண்டார் வரியை உயர்த்துவதற்கு உதவியாயிருக்கிறது. விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைத்துவருகிறது என்று சொல்லி நிலவரியை உயர்த்துகிறார்கள் தற்கால நிலைமையில் ஒருவேளை கஞ்சிக்கும் கஷ்டப்படும் ஜனங்களைத் தினந்தோறும் பார்க்கலாம். நிலத்தில் அறுவடையானவுடன் களத்துமேட்டிலேயே நெல்லை விற்று சர்க்கார் கிஸ்து கொடுத்துக்கணக்குப்பார்த்தால் 3 மாத சாப்பாட்டிற்கும் இழுப்பில் இருக்கிறது. சிலவருஷம் கவர்ன்மெண்டார் கிஸ்துக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக் கடன் வாங்கியே செலுத்தி வந்திருக்கிறார்கள். தென் இந்தியாவில் செலுத்தப்படும் கிஸ்தியில் 100க்கு 86 பாகம் கடன் வாங்கி செலுத்தப்பட்டதென்றே பலருடைய அபிப்பிராயம். இவ்வாறு கிஸ்துக்காக இந்தியக்குடியானவர்கள் கடன்பட்டிருக்கும் தொகை 500 கோடி ரூபாய்க்கு மேலுள்ளது.

இந்நிலைமையில் இருந்தால் விவசாயத்தைக் கைக்கொள்ள எவன் விரும்புவான். விவசாயத்திற்கு கஷ்டம் ஏற்படும்பட்சத்தில் நமது நாடு தாங்காது. விவசாயத்திற்கு ஆள் கட்டுவேண்டுவது அவசியம். கிராமத்திலுள்ள ஆட்கள், அந்நிய நாடுகளுக்குப்போகாமலும், பட்டணங்களில்வந்து கஷ்டப்படாலும் இருக்கும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டும், இதற்குச்சட்டங்கள் ஏற்படுத்தவேண்டுவதில்லை. சட்டத்தினால் நன்மை ஒருக்காலத்திலும் உண்டாகாது ஆகவே அந்தந்த கிராமவாசிகள் ஒன்று கூடி, தங்கள் ஊரில் உள்ள குடிகள் அந்நிய விடங்களுக்குப் போகவேண்டியகாரணம் என்னவெனபதைக்கவனித்து அதற்குத்தகுந்த ஏற்பாட்டைச்செய்யவேண்டும். குடிகளுக்குக் கடன் அதிகம் கொடுத்து பத்திரம் எழுதி வாங்கிக்கொள்வதில் பிரயோஜனமில்லை. அந்நிய தேசங்களில் அதிகக்கூலி கொடுக்கிறார் என்று



எண்ணி, கூலியையும் அதிகப்படுத்தக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகவே இதற்கு ஏதாவது சில உபாயங்களைத்தேடவேண்டும்.

பயிர் செய்யும் கூலியாட்களுக்கு வருஷம் 360 நாட்களுக்கும் வேலையிருப்பதில்லை. நாள் முழுதும் எப்பொழுதும் இருப்பதில்லை. இவர்களுக்கு ஓய்விருக்கும் காலங்களில் ஏதாவது சிறிய தொழில்களைச் செய்யும்படி ஏற்பாடுகளைச் செய்து இவர்களுடைய வருமானத்தை அதிகப்படுத்தலாம். வருமானம் அதிகரித்து வயிறார சாப்பிடும்படியான நிலைமையில் வேலையாட்களை வைத்துவிட்டால் இவர்கள் ஒருக்காலத்திலும், தங்கள் தங்கள் பிறந்தவிடத்தைவிட்டு நகரமாட்டார்கள்.

தொழில்களை ஏற்படுத்தவேண்டும் நிலைமையை உயர்த்தவேண்டும் என்று சொல்லிவிடுவது மாத்திரம் போதுமானதல்ல. எவ்வித தொழில்களை ஏற்படுத்துவது எம்முறையில் ஏற்படுத்துவது என்பதை தீர ஆலோசிக்க வேண்டும்.

ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்துவரும், பாய்கள், பனியன்கள், கால் மேஜோடுகள், சிறுபொம்மைகள் மற்றுமுள்ள சில்லறைச் சாமான்கள் எல்லாம், கிராமாந்தரங்களிலுள்ள, குடியானவர்களால் ஓய்வு நேரங்களில் செய்யப்பட்டவையாகும். இவற்றைச் செய்வதற்கு அதிகமுதல் சாமர்த்தியம் அவசியம் இல்லை. ஓய்வு வேளைகளில் செய்வதால் இவர்களும் அதிகக் கூலிக்காக ஆசைப்படமாட்டார்கள். தொழில்களையும் கிராமங்களின் நிலைமைக்குத் தக்கவாறும், ஆங்காங்குள்ள வசதிகளுக்குத் தக்கவாறும் யோசித்துச் செய்யவேண்டும். யோசித்து சில கிராமத்தொழில்களை ஏற்படுத்திவிட்டால் அந்நியநாட்டுத்தொழில்கள் ஒருக்காலத்திலும், இந்நாட்டில் போட்டி போட முடியாது. தொழில்களை நிர்மாணிப்பதைப்பற்றிப் பின்னர் சொல்வோம்.

கோ. நடேசய்யர்,<br>
பத்திராதிபர், வர்த்தகமித்திரன்,<br>
தஞ்சாவூர்

---

## நீர்ப்பாசன மிராசுதார்களின் சங்கங்கள் அவசியமா?

## Channel Mirasdars' Association—Is it a necessity.

அவசியமே. கிராம மகா ஜனங்களே! பிரதி கிராமத்திலும் நீர்ப்பாசன மிராசுதார்களின் சங்கம் ஒன்று இருக்கவேண்டியது அவசியம். வாய்க்கால்கள் பாசனத்துக்கு உபயோகப்படுமானால் வாய்க்கால்கள் எந்தெந்த கிராமங்களின் வழியாய் ஓடி எந்த கிராம வயல்களுக்கு ஜலம் பாய்கின்றனவோ அந்தந்த கிராம மிராசுதார்கள் ஒன்றுகூடி மேற்படி வாய்க்காலின் பெயரால்

சங்கமொன்று ஸ்தாபித்து வாய்க்காலின் லாபநஷ்டங்களை கவனிப்பது அவசியம். ஆறுகளில்லாத கிராமங்களில் ஏரிகுளங்கள் இருக்கும் அந்த ஏரி குளங்களின் நீர் பாசனம் அக்கம்பக்கத்து கிராம வயல்களுக்கு உபயோகப் படாமலிருக்குமானால் கிராம பஞ்சாயத்தார்களே தங்கள் சொந்த கிராம ஏரி குளங்களைப் பார்த்துக்கொள்ளலாம். அப்படியிராமல் சேர்ந்தாற்போல் ஒன்றிரண்டு அல்லது பலகிராமங்களில் பொதுவாக நீர்ப்பாசனத்திற்கு வாய்க்காலின் உதவியே ஆதாரமாயிருக்குமானால் அந்த வாய்க்காலினால் உண்டாகும் லாபநஷ்டங்களுக்கு நீர்ப்பாசன எல்லைக்குள் சம்மந்தப்பட்ட கிராம மிராசுதார்கள் பொறுப்பாளியாகிறார்கள் ஆகவே அந்தந்தக் கிராம மிராசுதார்கள் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து வாய்க்காலை நல்ல ஸ்திதியில்வைத்து ஜலத்தட்டு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

வாய்க்காலின் அபிவிர்த்தியை உத்தேசித்தும் சுயலாபத்தைக் கருதியும் விவசாயிகள் (மிராசுதார்கள் குடிகள் ஒன்று சேர்ந்து தங்கள் தங்களுக்குச் சொந்தமான வாய்க்கால்களின் நீர்ப்பாசன அபிவிர்த்தி கெடாமலிருக்கும்படி கூடுமான வரையில் உழைக்க முன் வந்திருப்பது சிலவாய்க்கால்களின் மிராசுதார்களே. பெரும்பாலும் பலபெரிய வாய்க்கால்களின் அல்லது ஆறுகளின் மிராசுதார்கள் ஒன்று சேர்ந்து தங்கள் சுய நன்மையை உத்தேசித்து சங்கங்களைக்கூட்டி ஒருவிதகாரியத்தையும் ஆரம்பிக்கவில்லை. சாதாரணமாக திருச்சிறாப்பள்ளி ஜில்லாவில் மூன்று சங்கங்களும் இதர இரண்டொரு ஜில்லாக்களில்மட்டும் ஏரி குளம் சம்பந்தமாக சில சங்கங்கள் ஏற்பட்டு இருக்கின்றனவென்று அறிகிறோம்.

“சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை” “எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்” ஒரு விஷயத்தைப்பற்றி ஒருவன்மட்டும் தனியாய் நின்று ஆக்ஷேபித்தாலும் அல்லது அதைப்பற்றி சில கேள்விகள் கேட்டாலும் அதற்கு மதிப்பு சிறிதும் இருக்காது. பதில் சொல்லக்கடமைப்பட்டவர்களும கேள்விகளுக்கு விடையளிப்பதில் அலக்ஷியமாயுமிருப்பார்கள். காரியமும பூர்த்தியாகாது. அதே காரியத்தைப்பற்றி பலர் ஒன்றுகூடி சங்கம் ஸ்தாபித்து அத்தனை பேர்களும் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை அனுப்பி ஆக்ஷேபணை செய்தாலும் அல்லது பல கேள்விகள் கேட்டாலும் கேள்விகளுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் தாமதமில்லாமலும் கொஞ்சம் மரியாதையுடனும் பதில் கூறுகின்றார்கள். சங்கத்து அங்கர்களின் விண்ணப்பத்தில் கண்ட நிபந்தனைகளை ஒருவாறு அவர்கள் அங்கீகரிக்கவும் நேரிடுகிறது. பலர் ஒன்றுகூடி ஒரு சங்கம் மூலமாக தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்பொழுது அது பெரும்பான்மையான அங்கர்களின் அபிப்பிராயமாயிருக்கின்றபடியால் அதை அதிகாரிகள் கவனிக்கத்தான் வேண்டியிருக்கிறது.



21

உதாரணமாக திருச்சிறாப்பள்ளி ஜில்லாவில் மூன்று நீர்ப்பாசன மிராசுதார்களின் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலில் குளித்தலை தாலூகாவில் மருதூர் நாட்டுவாய்க்கால் மிராசுதார்களின் சங்கமும், பிறகு உடையார்பாளையம தாலூக்காவில் பொன்னேரி வாய்க்கால் மிராசுதார்களின் சங்கமும், சென்ற வருஷத்தில் உய்யக்கொண்டான் பாசனகிராம மிராசுதார்களின் சங்கமும் ஏற்பட்டிருக்கின்றன. ஷை வாய்க்கால்களின் சங்கத்து மிராசுதார்கள் தங்கள்தங்கள் வாய்க்கால்களின் வருங்கால க்ஷேமலாபத்தை எண்ணி உழைத்துவருவதால் அநேகவிதமான நன்மைகளை அடைந்துவருகிறார்கள். மருதூர் நாட்டுவாய்க்கால் அபிவிர்த்தியை முன்னிட்டு நீர்ப்பாசன போர்ட் ஒன்றை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வாய்க்காலும் நல்ல ஸ்திதிக்கு ஒருவாறு வந்துகொண்டிருக்கிறதென்று சொல்லலாம். பொன்னேரி வாய்க்கால் விஷயமாய் ஷை வாய்க்கால் சங்கத்து மெம்பர்களின் விடாமுயற்சியால் அந்த வாய்க்காலின் தலைப்பை வெட்டூரிலிருந்து மேற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள ராமநல்லூருக்கு மாற்றி வைக்கவேண்டிய அவசியத்தை சங்கத்தாரது அபிப்பிராயம் போல் கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதன் தலைப்பை மாற்றிவைப்பதற்கும் வாய்க்கால் பூராவையும் மராமத்து செய்யவும் ரூபாய் லக்ஷத்திற்கு மேலுள்ள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் கேட்டுக்கொண்டபடி மேற்படி வாய்க்காலுக்கு ஏற்படும் செலவில மூன்றில் ஒரு பாகத்தை மிராசுதார்கள் கொடுப்பதாகவும் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் 30 வருஷத்தில் கவர்ன்மெண்டார் மிராசுதார்கள் கொடுக்கிறதாக ஒப்புக்கொண்டிருக்கிற தொகையை கிஸ்து வசூலுடன் வசூலித்துக் கொள்ளலாமென்றும் தீர்மானம் மூலமாக சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சிறிது காலத்திற்குள் ஆகவேண்டிய வேலைகளை கவர்ன்மெண்டார் முடித்து மேற்படி வாய்க்காலின் நிர்வாகத்தை மேற்படி சங்கத்தின் ஆதரவிலாவது அல்லது நீர்ப்பாசன போர்டின் மேல் பார்வையிலாவது வைக்கப்போவதாக அறிகிறோம். உய்யக்கொண்டான் பாசன கிராம மிராசுதார்களின் சங்கம் சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும் அது செய்துவரும வேலை மெச்சத்தக்கது. சங்கத்தார்களின் அபிப்பிராயம்போல வேண்டிய சௌகரியங்களை சர்க்கார் செய்துவருகின்றார்கள். இம்மாதிரி சங்கங்கள் ஏற்படுவதில் பிரதிமிராசுதாரும மெம்பராகிறார். அப்பொழுது அவருக்கு தம்முடைய வாய்க்காலைப்பற்றி கவலையும் பொறுப்பும் ஏற்படுகின்றன. கிராம மகா ஜனங்களே! பஞ்சாயத்தார்களே!! எந்தெந்த ஊர்களில் வாய்க்கால்களும் ஆறுகளும் இருக்கின்றனவோ எந்தெந்த கிராமத்தார்கள் அவைகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அந்தந்தவிடங்களில் அந்தந்த கிராமத்தார்கள் ஒன்று சேர்ந்து சங்கங்கள் ஸ்தாபித்து அதனதன் அபிவிர்த்தியைத்தேடிக்கொள்ள முன் வருவீர்களாக. இதுபோலவே ஏரிப்பாசன

வசதிபெறும் மிராசுதார்களும் ஒன்று சேர்ந்து தனிச்சங்கங்கள் ஸ்தாபித்து சுகமடைய கடவுள் கிருபை புரிவாராக.

---

குறிப்பு:—ஜமீன் கிராமங்களிலும் கிராமக்குடிகள் சங்கங்களை ஸ்தாபித்து தங்கள் தங்கள் கிராம குளங்களையும் ஏரிகளையும் மராமத்து (பழுது) பார்ப்பதில் தங்களுக்குண்டான குறைகளை ஜமீன்தாருக்கு விண்ணப்ப மூலமாய்த் தெரிவிக்கவும். ஜமீன்தார்தான் ஸ்வான்தார்.

---

## கிராமங்களின் சுகாதார நிலைமை.

## Village Sanitation

ஜனங்களின் சுகத்திற்குத் தண்ணீர் அவசியமானது. ஜலமில்லாதவிடத்தில் மனிதன், மிருகம் புல் பூண்டு பச்சை இவைகள் யாதொன்றும் இருக்க முடியாது. உதாரணமாக பாலை வனங்களில ஜீவராசிகள் எவைகளும் காணப்படுகிறதில்லை கிராமங்கள் தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களில்தானிருக்கின்றன. மனிதனுக்கு ஆகாரத்தை காட்டிலும் முக்கியமானது தண்ணீர் பசியை இரண்டு நாள் அல்லது மூன்று நாள் தாங்கலாம்; ஆகாரமில்லாமலே ஸாதாரணமாக ஒருவன் பத்து தினங்கள் பட்டினியிருக்கலாம் ஆனால் தாகத்தை அம்மாதிரி அடக்கமுடியாது. தண்ணீரில்லாமல் மூன்று நாட்களகூட இருக்கமுடியாது. இதற்குக்காரணம் மனித சரீரத்தில் மூன்றில் இரண்டு பாகம் தண்ணீர்; ஒருபாகம் மாத்திரம்தான் உரமான சத்துள்ளது. ஆகையால்தான் நாம் உண்ணும் உணவிற்கூட ஜலபாகம் அதிகமாயிருக்கிறது குழந்தை பிறந்ததுமுதல் அக்குழந்தை ஆகாரம் உட்கொள்ளும் வரையில் பாலினால் வளருகிறது ஆனால் பாலிலோ நூற்றில் தொண்ணூறு பாகத்திற்குமேல் ஜலமிருக்கிறது. இதைக் குடித்தும் குழந்தை முதல் வருஷத்திற்குள் வளரும் அம்மாதிரி ஆடு, மாடு, மற்றுமுள்ள மிருக வகைகள், பட்சி ஜாதிகள் நானாவிதமான ஜெந்துக்கள் இவைகளெல்லாம் தண்ணீரிலேயே உயிரை வைத்துக்கொண்டிருக்கிறது ஆகையால் உயிர்வாழ்வதற்கு ஜலம் அதிக அவசியமானது.

கிராமங்களில் ஜலவசதிகள் அநேகமுண்டு. ஆறுகள், கால்வாய்கள், முதலியவைகள் நீராரம்பமென்று சொல்லப்படுகிற தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களில் அநேகமுண்டு காடாரம்பமென்று சொல்லக்கூடியதாகிய பெரம்பலூர், உடையார்பாளையம் பட்டுக்கோட்டை முதலிய இடங்களில் தண்ணீர் குளங்களிலும், குட்டைகளிலும், மழைக்காலங்களில் சேகரிக்கப்



பட்டு ஜனங்களுக்கு உபயோகப்பட்டு வருகிறது. இன்னும் சில இடங்களில் குளம் குட்டைகூடயில்லாமல் கிணறுகளே ஜலத்திற்கு ஆதாரமாயிருக்கின்றன

ஜலம் அநேக உபயோகமுள்ளது. முதலில் நமக்கு தாகத்திற்கும் சோறு முதலிய உணவுகளைச் சமைப்பதற்கும் தேவை. இதற்கு மிகவும் சுத்தமான தண்ணீர் வேண்டும். பிறகு துணி துவைக்கவும் தேக சுத்தி செய்துகொள்வதற்கும், மாடு கன்று கழுவுதற்கும் நீர் தேவை. ஆனால் இவைகளுக்கு ரொம்பவும் சுத்தமில்லாவிட்டாலும் கூடியவரையில் சுத்தமான ஜலமே வேண்டும். விவஸாயத்திற்கு வேண்டிய ஜலமானது அசுத்தமாயிருந்தாலும்கூட அதனால் கெடுதி கிடையாது. ஜலம் அநேக விதங்களில் கெட்டுப் போய்விடுகிறது. ஆறுகளில் ஓடும் ஜலம் கூடியமட்டில் சுத்தமானதென்றே சொல்லலாம். நீரானது மணலில் புரண்டோடுவதால நல்ல காற்றும், சூரிய வெப்பமும் பட்டு அசுத்தமாயிருப்பதெல்லாம் சுத்தமாகி மாறிவிடுகிறது. ஆனால் அப்படி மாறுவதற்கு ஜலம் கொஞ்சதூரம் ஓடவேண்டும் குறைந்தது அரை மைல் தூரமாகிலும் ஓடவேண்டும். மேலும் பெரிய ஆறுகளில் ஓடும் ஜலம்மாத்திரம் அப்படியாகுமே ஒழிய சிற்றாறுகளிலும், கால்வாய்களிலும் ஓடும் ஜலம் இம்மாதிரி சீக்கிரம் சுத்தமாகாது. இவைகளில் மணல் அதிகமாகக் கிடையாது. இருபக்கங்களிலும் புல், பூண்டு பச்சை, அழுகும் வேர்கள் இலைகள் முதலியவைகள் ஏராளமாய் உண்டு வடிவுகள், வயலிலிருந்தும் தோட்டங்களிலிருந்தும வந்துசேர்ந்துகொண்டிருக்கும், ஆடுமாடுகள் அசுத்தம் செய்வது அதிகமிருக்கும் இவைகளால் சிற்றாறுகளின் ஜலம் குடிப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடியவையல்ல.

பெரிய ஆறுகளில் கூட தற்காலம் புது நாகரீகம் மேலிட்டு, முனிசிபாலிடி உண்டாயிருக்குமிடத்தில் ஆயிரம் பதினாயிரம் என்று செலவுசெய்து, வரியை உயர்த்தி, பெரும் சாக்கடைகளைக்கட்டி அவைகளை பெரும் நதிகளில் வடியவிடுகிறார்கள். தற்காலம் திருச்சி முனிசிபாலிடி சாக்கடைகூட சிந்தாமணியிலிருக்கும் கால்வாயில் விழுந்து பாலத்தடியில் வந்து சேர்ந்து பிற்பட்டு கிழக்கிலிருக்கும பசுத்துறைவழியாய் ஓடி தில்லைநாயகம் பிள்ளை படித்துறையை ஒட்டிப்போகிறது. நகர வாசிகளெல்லோரும் இந்த ஜலத்தைதான் ஸ்நானம் செய்யவும் குடிக்கவும் உபயோகப்படுத்துகிறார்கள். மேலும் ஓடும் நதி புண்ணிய நதியென்று நம்முடைய சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் அந்தத்தண்ணீரை அசுத்தம்செய்தால் பாபமென்று சொல்லப்படுகிறது. இந்தச் சாஸ்திரத்தை நமது ஜனங்கள் அறிந்திருந்தும் ஓடும் தண்ணீரை அசுத்தப்படுத்தாமலிருப்பதில்லை. ஆறுகளின் கரையோரமாக ஜனங்

கள் மலபாதைக்குப்போகிறார்கள். பிறகு அந்த ஜலத்திலேயே கைகால் சுத்தம்செய்துகொண்டு வாய் கொப்பளிக்கிறார்கள் மூக்கை சிந்துகிறார்கள். சற்றுதூரம் பின்னால் சில ஸ்திரீகள் குடிப்பதற்கு இந்த ஜலத்தையே குடத்தில் எடுத்துச் செல்லுகிறார்கள். ஜலத்தைக் கெடுப்பவன் ஒருவனாயிருந்தாலும், அந்த ஜலம் கெட்டுப்போவதின் காரணமாக ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதினின்றும் வருந்துகிறார்கள்.

முக்கியமாய் ஓடும் ஜலம் கெடுவதால் அதை குடிப்பதினின்றும் உண்டாகும் வியாதிகள் அநேகம். அவற்றில் முக்கியமானவை காலராவென்று சொல்லப்படும் வாந்தி பேதி யென்கிற நோய். இந்த நோய் சென்னை ராஜதானியில் அநேகவிடங்களிலிருந்தபோதிலும்கூட முக்கியமாய் தஞ்சாவூர், திருச்சிறாப்பள்ளி ஆகிய இந்த இரண்டு ஜில்லாக்களில் மாத்திரமே அதிகம். இதற்குக்காரணம் இவ்விரண்டு ஜில்லாக்களிலும் பெரும்பான்மையாக ஜனங்கள் குடிக்கும் ஜலம் ஆறுகளிலும், கால்வாய்களிலும் வருகிறது. ஆறுகுளங்களில்லாமலிருக்கும் ஊர்களில் இவ்வியாதி அடிக்கடி வருகிற வழக்கமேயில்லை வாந்திபேதியானது கண்ணுக்குப் புலப்படாத சிறு கிருமிகளால் உண்டாகிறது. இப்பூச்சிகள் ஜலத்தில் ஒரு நிமிஷத்தில் கோடிக்கணக்காய் விருத்தியாகின்றன. இந்நோய்கண்ட ஓர் மனிதன் தன் கால்கைகழுவ ஆற்றிலிறங்கி சுத்தம் செய்துகொண்டால் அவனால அந்த ஜலத்தில் அநேகம் கிருமிகள் ஜலத்தில் சேர்ந்து விடுகின்றன, பிறகு அதைக்குடிப்போர்களுக்கு அவ்வியாதி பிடித்துக்கொள்ளுகிறது. வட இந்தியாவிலும், தெலுங்கு தேசமாகிய ஆந்திரத்திலும் ஜனங்கள் மலபாதைக்குப் போகும்காலத்தில் கையில் ஓர் செம்பில் ஜலமெடுத்துச் செல்வது வழக்கம். இதுதான் தாமசியமான விஷயம். இப்படிச்செய்வதனால் குடிக்கும் ஜலம் கெட்டுவிடமாட்டாது. நமது ஊர்களிலும் இம்மாதிரி வழக்கத்தை எல்லோரும் அனுஷ்டானம் செய்யவேண்டியது அவசியமாகும் ஓடும் தண்ணீரை மெல்லிய துணியினால் வடிக்கட்டிவிட்டால் அசுத்தம்போய் விடுமென்று சிலர் நினைக்கிறார்கள். இது மிகவும் தவறு. அழுகிய புல், பூண்டுவேர் முதலியவைகளை மாத்திரம் வடிகட்டலாமே யொழிய காலரா கிருமிகளை வடிகட்டமுடியாது. அவை மிகவும் நுட்பமானவையாதலால் துணிகளின் நூல் இழைகளின் நடுவே சென்று துன்பத்தை விளைவிக்கும். ஆகையால் வாந்தி பேதி நடக்கும் காலத்தில் தண்ணீரை உலையில் வைத்து சிறிதுநேரம் நன்றாக பொங்கியபிறகு ஆறவைத்து குடிப்பதுதான் முறை. அப்படிச் செய்வதற்கு முடியாவிட்டால் நீரோடைகளின் பக்கங்களில் சிறு ஊற்றுக்கள் தோண்டி நீரை நன்றாக இறைத்து தெளிந்துவரும் ஜலத்தைக்குடிப்பது உசிதமாகும். கால்வாய்களிருக்கும் கிராமங்களில் சுமார் அரைமைலுக்குக் காவல் செய்யவேண்டும். இந்த



அரை மைல் தூரத்திற்குள் கைகால் கழுவக்கூடாது. கரைகளில் மலபாதைக்குப்போகக்கூடாது. ஆடுமாடுகளைத் தேய்க்கக்கூடாது. கிராமத்திற்கு முதலிலிருக்கும் படித்துறையில் குடிக்கும் ஜலமெடுக்கவேண்டும், அதற்கடுத்த இடத்தில் குளிக்கவும், வாய்முகம் கழுவவும், துணிகள் துவைக்கவும் வேண்டும். அதற்குப் பின்புறம் கைகால் கழுவவும் மாடுகள் தேய்த்துக் குளிப்பாட்டவும் வேண்டும், வாந்தி பேதியிருக்கும் காலத்தில் நோயாளி எடுக்கும் வாந்தியையும் பேதியையும் ஓடும் தண்ணீரில் கொட்டக்கூடாது. மேலும் அவனால் உபயோகப்படுத்தப்படும் துணி, படுக்கை பாய் முதலியவற்றை குடிக்கும் தண்ணீரில் கழுவக்கூடாது. பழைய சோற்றையும், செரிப்பதற்கு கடினமாயிருக்கும் பதார்த்தங்களையும் வாந்தி பேதியிருக்கும் காலத்தில் உண்ணக்கூடாது. சாப்பிடும் ஆகாரம் யாவற்றையும் நன்றாய் வேகவைத்து சூடாகவே புசிக்கவேண்டும். குடிப்பதற்கான ஜலத்தை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்.

ஸ்ரீரங்கம்,

டாக்டர். T. S. S. ராஜன்
M.R.C.S. L.R.C.P.

---

## கனம் T. ரெங்காச்சாரியாருடைய "சென்னை பஞ்சாயத்து ஆக்ட்."

## The Hon'ble T. Rengachariar on "Madras Panchayats Act."

இந்தியர்களுக்கு ராஜீய வியவகார தர்க்கங்களில் அறிவு, பயிற்சி, பழக்கம், தைரியம் முதலியவைகள் ஏற்படும்பொருட்டு சென்னையில் சென்ற 1915-ஆம் வருஷத்தில் இங்கிலாந்திலிருப்பதுபோல ஒரு பெரிய ஜனப் பிரதிநிதி சபை (பார்லிமெண்ட்) ஒன்றை அன்னிபெஸண்ட் அம்மை ஏற்படுத்தியிருக்கின்றாள். அச்சபையில் கனம் T ரங்காசாரியார் சென்னை பஞ்சாயத்து ஆக்ட் என்னும் விஷயத்தை இரண்டாவது முறை மெம்பர்களின் அங்கீகாரத்துக்கு வாசித்துக்காட்டினார். இவரே சென்னை சட்ட சபையிலும் கிராம பஞ்சாயத்துக்காக அடிக்கடி வாதாடி வருகின்றாரென அறிகிறோம். இதர மெம்பர்களும் கவலை செலுத்திவருகின்றனர். பிரம்மஸ்ரீ ஆசாரியாரவர்களுடைய ஆக்ட் வருமாறு:—

## 1916-ம் வருஷத்திய சென்னை பஞ்சாயத்து 1-வது ஆக்ட்

முகவுரை:—சென்னை ராஜதானிக்குள் கிராமபஞ்சாயத்து சபைகளையும் ஜில்லா பஞ்சாயத்துகளையும் ஏற்படுத்தவும் அவைகளைப்பற்றி சட்டங்களை திருத்துவதற்கும் கிராம கோர்ட்டுசம்பந்தமாகவும் உள்ள ஆக்ட்.

ஜனங்களுக்குள்ளே வியாஜ்ஜிய விஷயமாக செலவு செய்கிறதை நிறுத்துவதென்னும் நோக்கத்துடனும் பழையகாலத்திலிருந்த பஞ்சாயத்து சபைகளை புதுப்பிக்கவும் ஜனங்கள் தங்கள் அயலார்களிடம் நீதி செலுத்தவும் ஸ்தல சுய ஆக்ஷி முறைகளை அறிந்து நடத்தவும் அவர்களுக்கு புத்தி விசாலமும் சுவாதந்திரியம் ஏற்படவும் இது மிகவும் விரும்பத்தக்கதாயிருக்கிறது.

இதனால் விதிக்கப்படுவது பின்வருமாறு:—

1. இந்த ஆக்டுக்கு 1916ம்வருஷத்திய சென்னை பஞ்சாயத்து 1-வது ஆக்ட், என்று பெயரிடலாம்.

2. இது உடனே அமுலுக்குவரவேண்டும்.

3. இந்த ஆக்டை கவர்ன்மெண்டார் தீர்மான மூலமாகவோ அல்லது தனி உத்திரவின் பேரிலோ ஒப்புக்கொள்ளாமல் ஜில்லா, அல்லது ஜில்லாவின் ஏதாவது ஒருபாகம் இவைகளிலே இச்சட்டம் செல்லத்தக்கதல்லவென்று மறுத்தளிக்கும் வரையில் இந்த ஆக்ட் சென்னை இராஜதானிமுழுதும் அனுஷ்டானத்தில் கொண்டுவரப்படும்.

3 a) இந்த ஆக்டிலும் இதனால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களிலும் முன் பின் தொடர்ச்சியில் மாறுபாடுகள் ஒன்று மில்லாவிட்டால்:—

(1) இந்த ஆக்டினால் கூட்டப்படும் சபைக்கு "பஞ்சாயத்து" என்ற பெயர் வழங்கும் இதில் ஜில்லா பஞ்சாயத்தும் கிராம பஞ்சாயத்தும் சேர்ந்து இருக்கின்றன (பஞ்சாப் பஞ்சாயத்து ஆக்ட் 1912-வது வருஷத்திய 6-வது பிரிவு)

(2) சபை என்பது:— இந்த ஆக்டின்கீழ் வியாஜ்யங்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்படும் மெம்பர்கள் சேர்ந்தது.

(3) டிஸ்டிரிக்ட் முனிசீபும், சப் ஜட்ஜும், 1873-ஆம் வருஷத்திய சென்னை ஸிவில் கோர்ட்டின் 3வது ஆக்டின்படி உள்ள டிஸ்டிரிக்ட் முனிசீபும் சப் ஜட்ஜும் ஆவார்கள்.

(4) ரெவனியூ டிவிஷனல் ஆபீசர் என்பது.— ரெவனியூ போர்டின் சட்டப்படி ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் ஆவார்.



(5) ரெஜிஸ்ட்ரார்:— கூட்டுத்தொழில் சங்கத்தின் ரெஜிஸ்ட்ரார் ஆவார்கள். அஸிஸ்டன்ட் ரெஜிஸ்ட்ராரும் உண்டு.

(6 ஸ்தாவர சொத்துக்களில் விளையும் பயிர்களும் புல்லும்சேரா.

(7) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது இந்த ஆக்டினால் செய்யப்பட்ட விதிகளினால் நிர்ணயிக்கப்பட்டதென்று அர்த்தமாகும்

(பஞ்சாப் பஞ்சாயத்து ஆக்ட் 1912 வது வருஷத்திய 6வது பிரிவு.)

(8) கிராமம் என்பது இந்த ஆக்டினால் கூறப்பட்டதெதுவோ அதுவே கிராமமாகும்.

(9) டிஸ்டிரிக்ட் போர்டு என்பது:— 1884-ம் வருஷத்து 5-வது ஆக்ட் நிபந்தனைப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள டிஸ்டிரிக்ட் போர்டாகும்.

(10) பொது ரஸ்தாவென்பது.— 1884-ம் வருஷத்து 5-வது ஆக்டின்படியுள்ள ரஸ்தாவாகும்.

(11) கிராமமுனிசீபு:— 1889-ம் வருஷத்து சென்னை 1-வது ஆக்டின்படி நியமிக்கப்பட்ட கிராம முனிசீபு ஆகும்.

(இன்னும் வரும்.)

---

## நியாயஸ்தல (கோர்ட்டு) செய்தி.

## (COURT NEWS).

### புல் பெஞ்ச் தீர்ப்பு.

[சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் இவர்கள் முன்பாக.]

### கிஸ்தி பாக்கிக்காக ஏலம் போடலாமா?

ரிவினியூ டிபார்ட்மெண்டாருக்கு நிலத்தீர்வை செலுத்தவேண்டிய விஷயத்தைப்பற்றி 13-3-18 தேதி தீர்ப்பு சொல்லப்பட்டது.

வாதி மைனராயிருக்கும் காலத்தில் தன்னை ஸ்வீகாரம் செய்துகொண்ட பிதா இறந்துவிட்டதால் பிதாவின் சொத்துகளுக்கு பாத்தியதையுடையவனானன். அத்தருணத்தில் இறந்துபோன பிதாவின் நிலங்கள் இறந்துபோனவன் பெண்சாதியின் பேரால் ரிவின்யு அதிகாரிகளால் பட்டா செய்யப்பட்டன. அந்தக்காலத்தில் கவர்ன்மெண்டாருக்கு வாய்தா பணம் செலுத்தப்படவில்லையானதால், சில நிலங்கள் ஏலம் போடப்பட்டன. மேற்படி ஏலம் செல்லாதென்றும் அதை ரத்து செய்யவேண்டியதென்றும் மைனர் தரப்பில்

கொண்டுவரப்பட்ட வியாஜ்யம் தள்ளிவிடப்பட்டது. கேஸின் முக்கிய அம்சங்களை கவனிப்பதற்காகப் புல் பெஞ்ச் ஜட்ஜுகள்முன் விசாரணைசெய்யப்பட்டுத் தீர்ப்பு சொல்லப்பட்டது.

நிலங்களை ரிவின்யூ அதிகாரிகள், கிஸ்தி பணம்செலுத்தாததற்காக விற்கப்படாதென்றும், சொத்துக்கள் மைனராகிய வாதிக்குச் சொந்தமாகையால், இறந்துபோனதகப்பன் பெண்சாதி சொத்துக்களை யாதொரு வினியோகப்படுத்த பாத்தியப்பட்டவளல்ல வென்றும மிஸ்டர் டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார் அப்பீல் வாதியாகிய மைனர் தரப்பில் வாதித்தார் ஜட்ஜிகள் ஏகோபித்து ரிவின்யூ அதிகாரிகள் நிலங்களை கிஸ்திபணம் வசூல் செய்ய ஏலம் போடக் கூடாதென்றும் சொத்துக்கள் ஸ்வீகார குமாரனுக்கே பாத்தியப்பட்டவைகளென்றும் அபிப்பிராயப்பட்டு, அப்பீல் மனுவை ஏற்றுக்கொண்டார்கள். பிரதி மனுதார் தரப்பில வக்கீல் மிஸ்டர் எஸ். முத்தய்ய முதலியார் ஆஜராயினார்.

---

## விசேஷ பஞ்சாயத்துக்களைப்பற்றிய குறிப்புகள்.

## Notes on Typical Panchayats.

### மோகனூர் பஞ்சாயத்து.

நாமக்கல் தாலூக்கா மோகனூர் கிராம பஞ்சாயத்து சமீபத்தில் ஏற்பட்டது. அவ்வூரில் ஏற்கனவே யூனியனும், ஐக்ய நாணயச் சங்கமும் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வூர் பள்ளர் தெருவில் கொஞ்சம் சொத்துள்ள பள்ள பழணியப்பன் அதிக செல்வாக்குப் பெற்று மேற்படி தெருவில் பள்ளர்களில் ஒருவர்கூட கள், சாராயம் ஒன்றையும குடிக்கக்கூடாதென்று கட்டுப்படுத்தி வருவதால் ரூ. 300 வரை அபராதமூலம் சேர்க்கப்பட்டு கிராமப் பொதுச் செலவுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஏற்பட்டுள்ள கிராம பஞ்சாயத்தில் பள்ளர் பறையர் இவர்களுடைய நிலைமையைக் கவனித்து வரும்பொருட்டு மேற்படி பள்ள பழணியப்பன் ஒரு மெம்பராக இருக்கலாமென்று மோகனூர் கிராம பஞ்சாயத்து இதர மெம்பர்களாகிய பிராமணர் பிராமணரல்லாதார் யாவரும் ஏகோபித்து அங்கீகாரம் கொடுத்துவிட்டனர். இது நற்காலத்துக்கு ஓர் அடையாளமாகும். மேற்படி பழணியப்பன் சிவன். விஷ்ணு முதலிய தேவாலயங்களுக்குப் பண உதவி செய்து அவைகளை நல்ல நிலைமையில் வைத்து இருப்பதாக அறிகிறோம். குடி நிறுத்தப்பட்டிருப்பதால் பள்ளர்தெரு நல்ல நிலைமைபெற்று வருகிறதாம். இதனை தயவுடன் இதர பஞ்சாயத்தார்கள் கவனிப்பார்களாக.



### 2. பெரியமறை பஞ்சாயத்து.

உடையார்பாளையம் தாலூக்கா பெரியமறை கிராம பஞ்சாயத்தார்கள் தங்கள் கிராமப் பொது பண்டிலிருந்து சர்க்கார் உதவி பெறாமல் கிராமச் சாவடியை ரிபேர் (மராமத்து) செய்து பஞ்சாயத்து மீடிங்குகள் கூட்டவும் ஆபீஸ் வைத்துக்கொள்ளவும் பெஞ்சு, மேஜை, நாற்காலி, விளக்கு முதலிய சகல சாமான்களையும் வாங்கிவைத்திருக்கின்றனர். உண்மையில் அது ஒரு ஆபீஸ் போலவே நடைபெற்றுவருவதாய் அறிகிறோம்.

### 3. கோவிலூர் பஞ்சாயத்து.

மேற்படி தாலூக்கா கோவிலூர் கிராமத்திய கிராமப் பொதுநிதியில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 500ல், பயிர்காலத்தில் விவசாயம் அல்லது வேறுவித அவசரச்செலவுக்கு கிராமக்குடிகளுக்குமட்டும் மூன்று மாதத்தவணையில் ரூ. 20-க்கு மேற்படாமல் அரை வட்டிக்கு (100-க்கு வருஷத்துக்கு ரூ. 6 வீதம் வட்டி) பணம் கொடுத்து உதவிவருகிறார்களென்று அறிந்து நாம் நிரம்பவும் சந்தோஷமடைவதுடன் அவர்களுக்கு வந்தனமும் செலுத்துகின்றோம்.

---

## விசேஷப்பஞ்சாயத்துக்களின் விசேஷத்தீர்மானங்கள்.

## Typical Proceedings of Panchayats.

### உடையார்பாளையம் தாலூகா பெரியதிருக்கோணம் கிராம பஞ்சாயத்து.

### 1. 28—9—17ல் நடந்த பஞ்சாயத்து தீமானங்கள்.

மேற்படி கிராமத்திய உத்தண்ட ஐயனார் கோவில் புளியந்தோப்பில் உள்ள புளியமரங்கள் 4-யும் 1327ம் பசலிக்கு குத்தகைக்கு விடப்பட்டது. பஞ்சாயத்தாரால் ஏலம் விடப்பட்டு ரூ. [illegible]2-க்கு காங்கமுத்து படையாச்சிக்கு விடப்பட்டது. 16 பேர்வழிகள் ஏலம் கேட்டார்கள் ஷை ஏலத்தொகையை 1918௵ மார்ச்சு௴ 31௳க்குள் செலுத்திவிடுவதாக முச்சலிக்கை ஒன்றும் கொடுக்கத்தவறினால் மாதம் 1-க்கு 100க்கு ரூபாய் ஒன்றரை வீதம் வட்டியுடனும் கோர்ட்டு செலவுடனும் கொடுப்பதாக எழுதி வாங்கப்பட்டது.

### 2. மகிமைக் குத்தகை.

1917-ம்௵ அக்டோபர்௴ 1௳ முதல் 1918-ம்௵ செப்டம்பர்௴ முடிய அடியில்கண்டபடி பகிரங்கமாய் ஒரு வருஷத்துக்கு விடப்பட்டிருக்கிறது.

கருப்ப முதலி ... குத்தகைதார்.

காளயுக்தி௵ வைகாசி௴ 30உக்குள் பூராத்தொகையையும் கொடுத்து விடுவதென்பதாகவும், தவறினால் 100-க்கு ரூபாய் ஒன்றரை வீதம் வட்டியும் கோர்ட்டு செலவுடன் கொடுப்பதாயும் முச்சலிக்கை எழுதி வாங்கப்பட்டது. ஏலத்தொகை ரூ. 22–0–0. ஏலம் கேட்ட நபர்கள் 17.

### மகிமை விபரம்

உள்ளூர் வண்டிகள் அல்லது பக்கத்து கிராமத்திய வண்டிகள், விற்பனைக்குச் சரக்கு ஏற்றிக்கொண்டு வரும்போது வண்டி 1-க்கு அணா 0–1–0

உள்ளூர் சரக்கு பக்கத்தூர்களுக்கு ஏற்றிக்கொண்டு போனாலும் அல்லது சரக்குக்குச் சொந்தக்காரர்கள் தாங்களே கொண்டுபோய் விற்றாலும் வண்டி 1-க்கு மகிமை அணா 0–4–0.

உள்ளூரில் மாடு விற்றாலும் வாங்கினாலும் ஜோடி 1-க்கு மகிமை அணா 4.

ஆடு விற்றாலும் வாங்கினாலும் ஆடு 1-க்கு மகிமை பைசா 0–0–3.

ஷை கிராமத்தில் குடியிருப்பு வீதிகளைத்தவிர மாடு மேய்கிற இதர இடங்களில் மாட்டுச்சாணியை 1917௵ அக்டோபர் முதல் ஒரு வருஷத்திற்கு ஏலக்குத்தகை விட்டு மோ. நல்லப்ப ரெட்டி என்பவர் ரூ. 3–4–0 க்கு ஏலம் எடுத்து ஒப்பந்தச்சீட்டும் எழுதிக்கொடுத்தார்.

குறிப்பு:— பொது சமுதாய நிலங்கள், கிராம மஹிமைக் குத்தகை முதலிய விஷயங்களைப் பஞ்சாயத்தார்களே கவனித்தல் நல்லது. பெரிய திருக்கோணம் பஞ்சாயத்தார்கள் அனுஷ்டித்தமாதிரி இதர பஞ்சாயத்தார்களும் கவனித்தல் அவசியம்.

---

## திருமானூர் கிராம பஞ்சாயத்து

(உடையார்பாளையம் தாலூக்கா)

19-8-17 ல் பஞ்சாயத்தார்கள் செய்த தீர்மானங்கள்.

“அதிகாரிகள் பஞ்சாயத்தார்களின் அபிப்பிராயத்தை விரும்பிய விஷயம்.”

4. போலீசாரால் பொது நன்மைக்கு இடைஞ்சல் என்று சார்ஜ் செய்யப்பட்ட வண்டிக்காரர்கள் 16 பேர்களுக்கும் என்ன அபராதம் விதிக்கலாம் என்று பஞ்சாயத்தார் அபிப்பிராயம் கோறி வரலான அரியலூர் மஹா-ா-ா-ஸ்ரீ 2-வது கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட்டார் உத்திரவு படிக்கப்பட்டது.



### தீர்மானங்கள்.

பஞ்சாயத்து மெம்பர்களில் மெஜாரிடி அனுமதியின்பேரில் ஆஜராகி ஒப்புக்கொண்டு ஸ்டேட்மெண்டில் கையெழுத்திட்ட 10 பேர்களுக்கு முதல் தடவையாதலால் மன்னித்து தலைக்கு அணா நான்கு அபராதம் விதிக்கலாமென்று அபிப்பிராயப்படுகிறது.

நோட்டீசில் கையெழுத்திட்ட இதர 5 மெம்பர்களில் கரைய சிதம்பரம் பிள்ளை ஊரில் இல்லாததினிமித்தம் ஆஜராகக்கூடவில்லையென்று எழுத்து மூலம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். இதர 4 பேர்வழிகள் ஆஜராகவில்லை. வெ. பொன்னுசாமி பிள்ளை என்பவர் கையெழுத்தும் செய்யவில்லை, ஆஜராகவும் இல்லை. இது முதல் மீட்டிங்கு ஆதலால் அவர்களுக்கு எச்சரிக்கை செய்து திரும்பவும் மறுநோட்டீஸ் கி. மு. அவர்களைக்கொண்டு கொடுத்து அடுத்த மீட்டிங்கில் ஆஜராகும்படி ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பு:—இம்மாதிரி ஏனைய அதிகாரிகளும் பஞ்சாயத்தார்களின் அபிப்பிராயங்களைப் பெறுவார்களாக. ப--ர்.

12. மூன்று மீட்டிங்குகளில்சேர்ந்தாற்போல் ஆஜராகாத மெம்பர்களை பஞ்சாயத்திலிருந்து விலக்கி தேவையானால் மெம்பர்கள் தீர்மானத்தின் மேல் வேறு மெம்பர்களை நியமித்துக் கொள்ளவேண்டியது.

13. கிராம பஞ்சாயத்து ஏற்பட்டு நடந்துவருவதாய் கிராமத்தார்களுக்குத்தண்டோரா மூலமாய்த் தெரிவிக்கும்படி கி. மு. அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டியது.

குறிப்பு:—இதர கிராமங்களில் புதிதாக பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தும்போது பஞ்சாயத்தார்கள் 12, 13 தீர்மானங்களை கவனிப்பார்களாக. ப—ர்.

## உடையார்பாளையம் தாலூக்கா நாகமங்கலம் கிராமம்.

கேசு நெ. 28/17க்கு 27-8-17 ல் பஞ்சாயத்தார் தீர்மானம்

13-8-17 ல் ஷை யூரிலிருக்கும் பண்டார சடையன் பெண்சாதி வள்ளியம்மை என்பவள் பஞ்சாயத்து கோர்ட்டில் கொடுத்த பிராதின் விபரம்:— ஷை யூரிலிருக்கும் சுப்பராய பண்டாரம் 1. சாமிநாத பண்டாரம் 2. இவர்கள் தன் வயக்காடு நஞ்சையை சாகுபடி செய்து கொண்டும் வீடு, தோட்டம் செட்டி கொல்லை மூனுவீசம் காணி நஞ்சை நிலங்களையும், தண்டட்டி ஜோடி

ஒன்றையும் அனுபவித்துக்கொண்டு யாதொன்றும் இல்லையென்றும் சொல்லுகிறபடியால் அதை விசாரிக்கும்படி பிராது கொடுக்கப்பட்டது.

**தீர்மானம்.**—இந்த மனுதாரிக்கு நிலம் கொஞ்சமானதாலும் ஷியாள் தள்ளாத கிழவியானதாலும் வருஷம் 1க்கு கெட்டி தான்யம் 40 மரக்கால் கொடுக்கும்படி தீர்மானம்.

பிறகு இந்த கிராம பஞ்சாயத்தார் முன்பாக ஷி சுப்பராய பண்டாரம் 1 சாமிநாதபண்டாரம் 2. இவர்கள் இந்த மனுதாரிக்கு நஞ்சையில் டிஸமல் 2-ம் புஞ்சையில் டிஸமல் 8 இருப்பதாயும் அதை ஷி மனுதாரி பயிரிட்டுக்கொண்டு ஜீவனம் செய்வதில் தங்களுக்கு சம்மதம் என்றும், அப்படி மனுதாரி பயிரிட சம்மதிக்காவிட்டால் பஞ்சாயத்தார்கள் சொற்படி வருஷம் 1க்கு 40 மரக்கால் தானியம் கொடுக்க சம்மதமென்றும் எழுதி வைத்தார்கள்

## உடையார்பாளயம்தாலூக்கா எலந்தக்கூடம்

### கேசு நெ. 25க்கு 8-10-17ல் கிராம பஞ்சாயத்து தீர்மானம்.

ஷி தாலூக்கா எலந்தக்கூடம் கிராமத்திலிருக்கும் மு. கறுப்புடையான் என்பவன் குடி தண்ணீர் குளத்தில் ஷி தேதியில் ஸ்நானம் செய்ததைப்பற்றி விசாரித்து பைசல் செய்த விபரம் :—

குடி தண்ணீர் குளத்துக்கு காவல் போட்டிருப்பது ஷியானுக்குத் தெரிந்திருக்க ஷியான் செய்த குற்றத்திற்காக ரூ. 1 வசூல் செய்து பொது பண்டில் சேர்க்கப்பட்டது.

### 9-10-17 விசேஷ மீட்டிங்கு

எலந்தக்கூடம் சின்னப்புடையார் மகன் நல்லப்புடையார் என்பவர் 17-9-17 உ குடி தண்ணீர்க் குளம் படிக்கட்டுக்காக தாம் கொடுப்பதாய் முச்சலிக்கை எழுதிவைத்தபடிக்கு ரூ. 118—9—7. இந்தத் தொகையைக் கொடுத்துவிட்டார்.

குறிப்பு:—மேற்படி படிக்கட்டு வேலை நடந்து வருகிறதென்று அறிகிறோம்.

ப—ர்.

## இனாம் திருமழப்பாடி

### 4-9-17-ல் கூடிய கிராம பஞ்சாயத்து சபையின் நடவடிக்கைகள்

2. ஷி மீட்டிங்குக்கு வரும் ஒவ்வொரு மனுவுக்கும் நான்கு அணா வீதம் வசூல் செய்து மேற்படி ஆபீசில் கடிதம், புஸ்தகம் முதலிய சில்லரைச் செலவுகள் செய்யவேண்டியதென்றும் அதற்காக ஒரு கணக்கு வைத்துக் கொள்ளவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.



8 திருமழப்பாடி கிராமக் கழுவாரி சம்பந்தமாய்க் கொடுத்த மகஜர் படிக்கப்பட்டது. ஷி வாய்க்காலை குடிமராமத்தில் வெட்டவேண்டியது அவசியந்தான். ஷி வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட குடிகள் ஜாடாவும் காணி 1க்கு ஒரு ஆள் வீதம் குடிமராமத்தில் வெட்ட வேண்டியதென்றும், அப்படி குடிமராமத்தில் வேலை செய்யவாராதவர்கள் காணி ஒன்றுக்கு அணா 4 வீதம் கொடுத்து விடவேண்டியது என்றும், ஷி வடிவாய்க்காலை வெட்ட அடுத்த மீட்டிங்கில் சொல்லி தண்டோரா மூலமாய்த் தேதியைப் பிரசித்தம் செய்யவேண்டுமென்றும் ஷி வாய்க்காலின் குறுக்கே கரைவைத்து தேக்கம் ஏற்படுத்தக் கூடாதென்றும் தண்டோராமூலமாய் பிரசித்தம் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

10 அடுத்த மீட்டிங்கில் ஷி கிராமத்திய பில்குத்தகை, மகிமைக்குத்தகை, களக்குத்தகை, பாசிக்குத்தகை முதலியவற்றை ஏலம் விடும் விஷயம் தண்டோரா மூலமாய் பிரசித்தம் செய்யவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பு:— முதல் விஷயத்தில் இரண்டு அணா ஏற்படுத்தியிருந்தால் நலமே. கடைசி இரண்டு தீர்மானங்களை இதரகிராம பஞ்சாயத்தார்களும், கிராம மகாஜனங்களும் பின்பற்றுவார்களாக. ப—ர்

## ஐரோப்பிய மகாயுத்தம்.

## The Great War

1. **காரணம்**—ஐரோப்பா கண்டத்தில் அநேக பெரிய தேசங்களும் சிறு சிறு ராஜ்யங்களுமிருக்கின்றன. பெரிய தேசங்களுள் கிரேட் பிரிடன். பிரான்ஸ், ஜர்மனி, ருஷியா, ஆஸ்டிரியா ஆகிய ஐந்தும் முக்கியமானவைகள். இவ்வைந்தும் வல்லரசுநாடுகள் ஆகும். ஐரோப்பா கண்டத்திலுள்ள இதர தேசங்களின் உரிமையையும், க்ஷேமலாபங்களையும் காக்கவேண்டிய கடமை இவ்வைந்து வல்லரசுகளுக்குண்டு. குறைகளும், அபிப்பிராய பேதங்களும், சச்சரவுகளும் சிற்றரசர்களுக்குள் ஏற்படுமானால் இவ்வைந்து தேசத்தார்களும் ஒன்றுகூடி பஞ்சாயத்து செய்யவேண்டுமென்பது முக்யநிபந்தனை. இதர சில்லரை ராஜாங்கங்களின் நிலைமையைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு இப்பஞ்சாயத்தார்களுக்கே தஸ்தாவேஜு மூலம் ஏற்பட்டு இருந்தது.

சென்ற 1914-ம் வருஷ ஜூன்மீ 28உ பஞ்சாயத்து மெம்பர்களில் ஒருவரான ஆஸ்டிரியாதேசத்து அரசரின் குமாரராகிய இளவரசரையும் இளவரசியையும் ஸெர்வியா என்னும் சிறிய தேசத்து மாணவன் ஒருவன் ஆஸ்டிரியாவுக்குச் சொந்தமான பாஸ்னியாவின் முக்ய பட்டணமாகிய ஸராஜிவோ என்

னும் ஊரில் சுட்டுக் கொன்றதே இந்த மகா கோர யுத்தத்திற்கு முக்ய காரணம். ஐரோப்பாக்கண்டத்தில் பெரிய நாட்டாண்மைக்காரர்களும், பஞ்சாயத்தார்களும், வல்லரசுகளுமாகிய மேலே சொன்ன ஐந்து தேசத்தார்களுள் ஆஸ்டிரியா தேசத்து அரசர் கோபங்கொண்டு; ஸெர்வியா தேசத்து சிற்றரசரைப் பல கேள்விகள் கேட்டு அவைகளுக்குத் தகுந்த சமாதானம் சொல்லுமாறு கேட்டார். அதே வருஷம் ஜூலை௴ 25௳ ஸெர்வியா கொடுத்த சமாதானம் ஆஸ்டிரியாவுக்குத் திருப்திகரமாயில்லாததால் ஆஸ்டிரியா ஸெர்வியாமேல் யுத்தம் தொடங்கிற்று.

2. **யுத்தக்கக்ஷிகள்**—ஸெர்வியா தேசத்து ஜனங்களும் ரஷியா தேசத்து ஜனங்களும் ஒரே ஜாதியார். ஸெர்வியர்களைக்காப்பாற்ற ரஷியா முன் வந்தது. ஜர்மனி வீணில் பிரஞ்சின்மேல் சண்டை துவக்கி பெல்ஜியம நாட்டு வழியே போர்க்கோலங்கொண்டு செல்லுவதைத்தடுக்க பிரிடிஷ் பெல்ஜியத்திற்கு உதவிசெய்ய நேரிட்டது. பிரிடிஷாரின் கொள்கையை அறியாது ஜர்மனி வீணில் பிரிடிஷாரின்மேலும் யுத்தம் தொடங்கியது பிறகு கக்ஷிகள் ஏற்பட்டன.

நேசக்கக்ஷியில் நமது அரசாங்கத்தாராகிய பிரிடிஷ், பிரஞ்சு, ரஷியா ஸர்வியா, பெல்ஜியம், ரொமேனியா, ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இடாலி, போர்ச்சுகல் முதலிய நாட்டார்கள் சேர்ந்து யுத்தம் நடத்திவருகிறார்கள். எதிர்க்கக்ஷியில் ஜர்மனி, ஆஸ்டிரியா, துருக்கி, பல்கேரியா முதலியோர் சேர்ந்து எதிர் யுத்தம் செய்துவருகின்றனர். ஆனால் சமீபத்தில் ரஷியாவும் ரொமேனியாவும் ஜர்மனியோடு தனியே சமாதானம் செய்துகொண்டதாய்த் தெரிகிறது.

## இரண்டாவது யுத்தக்கடனும் படை திரட்டுதலும்.

## Second Indian War Loan and Recruiting.

இப்பொழுது இதுகாறும் கேட்டிராத கோரமான யுத்தத்தில் நமது ராஜாங்கத்தார் ஒருகக்ஷியில் சேர்ந்து யுத்தம் புரிகின்றனர். யுத்தம் ஆரம்பமாகி சுமார் 3௵ 10௴ ஆகிறது. கோடிக்கணக்கான ஜனங்கள் மாண்டுபோயினர். கணக்கற்ற திரவியம் செலவு செய்யப்பட்டு வருகிறது. யுத்தத்தால் அகவிலை மிகவிலையாயிருக்கிறது. எல்லாக் கண்டங்களிலுள்ள எல்லா தேசத்தார்களும் கஷ்டப்படுகின்றனர். நாமும் அதிக கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறோம். நமது ராஜாங்கத்தார் உலகத்தில் சாமாதானமே நிலைநிறுத்தப் பாடுபடுகின்றனர். நமது ராஜாங்கத்தாருக்கு இந்த யுத்த சமயத்தில் நமது பொருள் உடல் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்யவேண்டியது அவசியம். நாம் எக்காலத்



தும் ராஜபக்தியுள்ளவர்கள். இந்த இரண்டாவது யுத்தக் கடனுக்குக் கூடுமானவரை பண உதவி செய்தும் சேனையில் சேர்ந்தோ அல்லது நண்பர்களை சேரச்செய்தோ உபகாரத்தைச் செய்து நமது ராஜபக்தியைக் காட்டவேண்டும். பக்கத்து போஸ்டாபீஸ் மூலம் சிறுதுகைகளையும் கடனுக்குக் கொடுத்து உதவலாம். கடன்கொடுப்பதில் பலநன்மைகள் உண்டு. கூலிவேலைக்கும் ஆட்கள் தேவை என்று விளம்பரம் செய்திருக்கின்றனர். அதிகச் சம்பளமும் படியும் கொடுக்கிறார்கள். இனாம் சாப்பாடும் கொடுக்கப்படுகிறது. இனாமாக ரூ 50 கொடுத்து உதவுகிறார்கள். நேர்த்தியான உடுப்புகள் கொடுக்கப்படுகின்றன. படிப்பு இல்லாமலிருந்தாலும் பெரிய உத்தியோகங்கள் கொடுக்கிறார்கள் கூலிவேலை செய்யப்போகிறவர்களுக்கும் நல்ல சம்பளம் கொடுத்து அநேக சௌகர்யங்களும் செய்து கொடுக்கின்றனர். கிராம பஞ்சாயத்தார்கள் தங்கள் ராஜபக்தியைக் காட்ட முன்வருவார்களாக.

---

## புத்தக வரவு

“**திருச்சி ஜில்லா சரித்திரம்**”, “**மகமதியர்களுக்கு முன் இந்தியா தேசம்**” என்னும் இரண்டு புஸ்தகங்கள் வரப்பெற்றோம். இரண்டும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளவை. இவற்றின் ஆசிரியர் ஸ்ரீமான் எம். எஸ். நடேசய்யர், உண்மையான இந்திய சரித்திரத்தை இந்தியராய்ப் பிறந்த இவர் விளக்கியிருப்பது போற்றத்தக்கது. இவ்விரண்டு புத்தகங்களும் தேசாபிமானத்தை நன்கு புகட்டுகின்றன. பூர்வகாலத்தில் நம்தேசம் இருந்த நிலைமையை நன்கு எடுத்துக்காட்டியிருக்கின்றார். கிராம ஆக்ஷி முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன ஆங்கிலம் பயின்றோர் அவசியம் இவற்றை வாங்கிப்படித்து ஆதரிப்பார்களென்றும், மத்தியதர பாடசாலைகளில் **மகமதியர்களுக்குமுன் இந்தியதேசம்** என்னும் சரித்திரமும், திருச்சி ஜில்லாவின் எல்லைக்குட்பட்ட ஸ்தல சுயஆக்ஷி சபையாரது மேற்பார்வைக்குட்பட்டு நடத்தப்பட்டுவரும் முதல்தர பிரதம பாடசாலைகளில் **திருச்சி ஜில்லா சரித்திரமும்** பாடப்புத்தகங்களாக கொள்ளப்பட வேண்டுமென்பதை நாம் பன்முறையும் வற்புறுத்துகின்றோம்.

இவ்விரண்டு புத்தகங்களும் திருச்சி தெப்பக்குளம்போஸ்டு ஹிந்து ஸெகண்டரி ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் **M. S.** நடேசய்யரிடமும், திருச்சி தென்னூர் பஞ்சாயத்து ஆபீஸிலும் பெற்றுக்கொள்ளலாம்.

---

## வேலையின்கூலி
## அல்லது
### கள்வர் கவர்ந்த கலியாணப்பெண்.

இது வாசிப்பதற்கு இனிமையான ஒரு அற்புதமும் தமிழ் நாவல். இதில் பல நீதி விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. சிலபிரதிகள் மட்டுமே கையில் இருக்கின்றன. இதனை வாசித்து யாவரும் மகிழலாம். இப்புத்தகம் "ஜநோபிமானி" பத்திரிகையின் உப பத்திராதிபரும் ஷெ சஞ்சிகையில் "காணாமல் போன நோட்டுகள்" என்னும் கதை எழுதியவருமான ஸ்ரீமான் எம். எஸ். கிருஷ்ணசாமி அய்யர் எழுதியது. இதன் விலை ரூ. 0–6–0 புத்தகம் கிடைக்குமிடம்:—"பஞ்சாயத்து" ஆபீஸ், தென்னூர், திருச்சிறுப்பள்ளி.

## அன்பின் வல்லமை
### என்னும் ஓர் அரிய தமிழ் நாவல்,

படிக்கப் படிக்கப்பெருமகிழ்ச்சியைத்தரும். நீதி மார்க்கத்தை நன்கு போதிக்கவல்லது, இப்புத்தகத்தை எழுதியவர் சென்னை "ஜநோபிமானி" உபபத்திராதிபர் ஸ்ரீமான் எம் எஸ். கிருஷ்ணசாமி அய்யர்.

புஸ்தகத்தின் விலை அணா 12. புத்தகம் வேண்டுவோர், திருச்சி, தென்னூர் "பஞ்சாயத்து" ஆபீஸுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

## கைகண்டமருந்து

மிஸ்டர் சிவனின் பாதரோக நிவாரணி பித்தவெடி, குழாய்ப்புண், சேற்றுப்புண் முதலியவைகளைக் குணப்படுத்தும். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் தெரியும். விலை ரூ. 0–4–0 கிடைக்குமிடம் மானேஜர் "பெண் கல்வி" ஆபீஸ். சென்னை.

## நமது நிருப நேயர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

கிராம முன்னேற்றத்திற்குரிய வியாசங்கள் மட்டும் எழுதியனுப்பப் படவேண்டும். வியாசங்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் நிறுத்தி எழுதப்பட்டிருக்கவேண்டும். பென்ஸலால் எழுதியனுப்பப்படும் வியாசங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விஷயதானம் செய்வோருக்கு நமது நன்றியறிதலை மிகுந்த வணக்கத்துடன் தெரிவிப்போம். இலவசமாகப்பத்திரிகையும் அனுப்பப்படும். எழுதவேண்டிய விஷய விபரங்களுக்கு 4-வது பக்கம் பார்க்கவேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

Printed at the Southern Star Press, Trichinopoly and published by M. S. R. Chandran, Tennoor, Trichinopoly.

Regd. No. M. 1342.

# பஞ்சாயத்து
# (PANCHAYAT)

திருச்சிறுப்பள்ளியில் வெளிவரும்
**மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.**
பத்திராதிபர்: M. S. R. சந்திரன்.

| | | |
|---|---|---|
| பு 1. | காளயுக்தி-௵ வைகாசி-௴ | ஸ. 2 |

கிராமத்தார்களின் முன்னேற்றத்திற்கென்றே வெளிவருகின்றது.

### "நமது போஷகர்கள்"

1. கவர்னர் ஜெனரல் சட்ட சபை மெம்பர் கொடியாலம் **K. V.** ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள்.

2. ஸ்ரீரங்கம் டாக்டர் T. S. S. ராஜன் அவர்கள், M.R.C.S., L.R.C.P.

குறிப்பு:—ரூ. 25-ம் அதற்கு மேலும் கொடுத்து உதவி புரிபவர்கள் நமது போஷகர்களாகக் கொள்ளப்படுவார்கள். பல பிரமுகர்களும் பிரபுக்களும் இதனை ஆதரிப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கின்றனர். இதனை ஆதரிக்குமாறு எல்லாரையும் வேண்டுகின்றோம்.

### பத்திரிகையின் நோக்கம்.

எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்து ஏற்படவேண்டுமென்பதே இதன் முக்ய நோக்கம். பிரதி கிராமத்திலும் எல்லா பஞ்சாயத்துகளிலும், பொது ஜனங்களிடத்திலும் இப்பத்திரிகை இருக்கவேண்டியது அவசியமாகும். இப்பத்திரிகைக்குப் பல தேசாபிமானிகளும் கல்விமான்களும் விஷயதானம் செய்கிறார்கள்.

### சந்தாவும் விளம்பரமும்.

| | |
|---|---|
| இதன் வருஷ சந்தா ... ... | ரூ. **3–0–0** |
| விளம்பர விகிதம் பக்கம் 1-க்கு மாதம் 1-க்கு | ரூ. **4–0–0** |

மற்ற விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

மானேஜர்,
"பஞ்சாயத்து"
தென்னூர், திருச்சிறுப்பள்ளி.

விஷய அட்டவணை

CONTENTS.

1. ஸ்தல சுய ஆக்ஷி தீர்மானம்—கிராமபஞ்சாயத்துக்கள்
Local Self Government Resolution—Village Panchayats ... 39

2. ஸ்தல சுய ஆக்ஷி: இந்தியா கவர்ன்மெண்டாரின் தீர்மானம்
Do. India Government Resolution— Village Panchayats ... 42

3. கிராம பஞ்சாயத்துகளைப்பற்றி ஸ்ரீமதி அன்னி பெசன்ட் அம்மை. Mrs. Anne Besant's views on "Village Panchayats" 47

4. பஞ்சாயத்தார் கவனிக்கவேண்டியவை Panchayatdar's items ... ... ... ... ... 48

5. கனம் T. ரெங்காசாரியாருடைய பஞ்சாயத்து ஆக்ட்
Hon'ble T. Rengacharia's Panchayat Act ... 50

6. கள்ளிப்பட்டி. Kallipatti Panchayat ... ... 52

7. விசேஷ பஞ்சாயத்துக்களின் தீர்மானங்கள் — Proceedings of Typical Panchayats ... ... ... 55

8. நியாயஸ்தல செய்தி — Court News ... ... 58

9. ஐக்ய நாணயச் சங்க கான்பரன்ஸ — Co-operative Conference ... ... ... ... 60

10. விவசாய சங்கம் — Agricultural Association ... 61

11. இரண்டாவது யுத்தக்கடனும் படை திரட்டலும் Second War Loan and Recruiting ... ... ... 61

12 விளம்பரங்கள் ... ... ... 63

---

ரெங்காஸ் ப்ளு ப்ளாக் இங்க் பௌடர்.

இது நன்றாயிருக்கிறது. இதன் உபயோகம் வாங்கிப் பார்த்த பிறகே தெரியவரும். உபயோகித்த பிறகே இதன் மேன்மை தெரியும். வேண்டுவோர் அடியில் கண்ட விலாஸத்துக்கு எழுதவும்.

ரேங்கசாமி அய்யர்,

அந்தநல்லூர், திருச்சந்துறை P. O.,

திருச்சி தாலூக்கா.

# பஞ்சாயத்து

பு 1. காளயுக்தி-௵ வைகாசி-மீ ஸ 2

## ஸ்தல சுய ஆட்சி தீர்மானம்.

### கிராமப்பஞ்சாயத்துக்கள்

ஸ்தல சுய ஆட்சி விஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டார் சென்ற மேமீ 16உ ஒரு தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் பெரும் பாகம் முனிசிபல் ஜில்லா தாலூக்கா போர்டுகள் ஆகிய இவைகளைப்பற்றி கூறுகிறது: பின்னர் கிராமப்பஞ்சாயத்துக்களைப்பற்றி விளக்கியிருக்கின்றனர். அதன் விபரம் மற்றொருபக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதனை யாவரும் படிக்கும்படி வேண்டுகிறோம்.

சித்திரை மாதப்பத்திரிகையில் ஸ்தல சுய ஆட்சி சம்பந்தமாக வருஷாந் தர அறிக்கையின் சில குறிப்புகளை எழுதினோம். ஸ்தல சுய ஆட்சி என்ன வென்பதும் எடுத்துச்சொல்லப்பட்டது. மேற்படி ஆட்சியைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கின்றார்கள். நமது இந்தி யா தேசத்தின் நிலைமையைக் கவனித்து வருவதில் இந்த் கவர்ன்மெண்டார் பொறுப்பாளியாய் இருக்கிறார்கள். இப்பொழுது இத்தீர்மானத்தின் பெரும் பாகம் அனுஷ்டானத்திற்கு வரும்போது நாம் கோரும் வண்ணம் பூராவும் பலன் தருமாவென்பது சந்தேகம். நாம் தீர்மானத்தை முற்றிலும் படித்தால் மேற்படி ஆட்சியில் நம்மைப்பொறுப்பாளி ஆக்குவதில் இந்தியா கவர்ன் மெண்டாருக்கு ஆக்ஷேபனை சிறிதும் இல்லையெனத்தெரியவரும். அனுஷ்டா னத்தில் மட்டும் வரும்போது மாகாண கவர்ன்மெண்டார் எவ்வளவு தூரம் தீர்மானத்திலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவார்கள் என்பதை இனிமேல் தான் கவனிக்கவேண்டும்.

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் சென்னை சட்டசபை மெம்பரா ன கனம் வ. எஸ். கிருஷ்ண ராவ் என்பவர் கிராமங்கள் தோறும் பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானம் ஒன்றை சபையில் கொண்டு

வந்தார். அப்பொழுது சென்னைமாகாண கவர்ன்மெண்டார் அதைச்சிறிதும் அங்கீகரிக்காது யூனியன் பஞ்சாயத்துகளையே ஏற்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். தற்போது அந்தந்த கிராமங்களில் ஜனங்கள் கட்டுப்பாடாய் இருக்கிறார்கள் என்றும் அந்தந்த கிராமத்தார்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்குப் பொறுப்பாளிகளாய் இருக்க, பஞ்சாயத்து சபைகளை அந்தந்த கிராமத்துக்குத்தனியாகவே ஏற்படுத்துவது நல்லதென்றும் கிராமபஞ்சாயத்து சபைகளுக்குப்பதிலாக இரண்டு அல்லது பல கிராமங்களை ஒன்றுசேர்த்து யூனியன் சபைகளை ஏற்படுத்தக்கூடாதென்றும், பிரதி கிராம ஜனங்களும் நிர்பந்தத்தின் மேல் யூனியன் சபையில் சேர்ந்து வேலைசெய்கிறார்களேயன்றி சுயமாக அவர்களுக்குரிய சிரத்தையும், கவலையும், ஆசையும் ஏற்பட்டு தங்களுடைய கடமையைச் செய்வார்களென்று நாம் நினைப்பதற்கில்லையென்றும் பொருள் விளங்கும்படி வெளியிட்டிருக்கின்றனர். இதனை நாம் முற்றிலும் ஆமோதிக்கின்றோம். நமது முதல் சஞ்சிகையில் ' திருச்சி ஜில்லாவில் பஞ்சாயத்துகள் செய்துள்ள வேலைகள் " என்னும் வியாஸத்தில் நாம் குறிப்பிட்டபடி, அரியலூர் டிவிஷனில் தலை கிராமத்திலும் அதன் மஜரா கிராமங்களிலும் தனித்தனியே பஞ்சாயத்து சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. தனித்தனி பஞ்சாயத்துக்களையே ஜனங்களும விரும்புகின்றனர் அவைகளின் வேலைகளோ நிரம்பவும் சிலாகிக்கத்தக்கவையாயிருக்கின்றன. அரியலூர் டிவிஷனில் குலமாணிக்கம் என்னும் கிராமத்தில் செம்பியக்குடி, புதுக்கோட்டை என்னும் இரண்டு மஜரா கிராமங்களிருக்கின்றன. கீழப்பழூர் ஒரு யூனியன். இந்த யூனியனில் மூன்று கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தற்போது மாதிரி கிராம பஞ்சாயத்துசபைகளை ஸ்தாபிக்கும்போது தலைகிராமத்தார்களும் மஜரா கிராமத்தார்களும் ஒன்றுபட்டிருக்க மனங்கொள்ளாது தங்கள் தங்கள் கிராமங்களுக்குத் தாங்களே பொறுப்பாளிகளாயிருக்க விரும்பினார்கள். இதுகாறும் கீழப்பழூர் யூனியன் செய்துள்ள வேலையைவிட பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாதிரி கிராம பஞ்சாயத்துக்கள் செய்திருக்கும் வேலைகள் உண்மையில் அற்புதமானவை. மெச்சத்தக்கவை. முன்சொன்ன கிராமத்தார்கள் தனிப்பஞ்சாயத்து சபைகளையே விரும்புகின்றனர். இனி நாம் பிரதிமாத சஞ்சிகையிலும் வெளிப்படுத்திவரும் விசேஷபஞ்சாயத்துக்களின் விசேஷநடவடிக்கைகளைப் படித்துப்பார்த்தால் விஷயம் நன்குவிளங்கும். சாதாரணமாக எவனும் தன்னுடைய கிராமவிஷயத்தில் கவலைகொள்ள விரும்புவது சகஜம்.

இப்போது சென்னை கவர்ன்மெண்டார் பஞ்சாயத்து சபைகளின் மெம்பர்களை அதிகாரிகளே நியமிக்க வேண்டுமென்று அவர்கள் செய்திருக்கும் மசோதாவில் சொல்லியிருக்கின்றனர். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் பஞ்சாயத்து மெம்பர்களை கிராமஜனங்களே தெரிந்தெடுக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். திருச்சி ஜில்லா அரியலூர் டிவிஷனில் பஞ்சாயத்து மெம்பர்களை கிராமத்தார்களே தெரிந்தெடுத்திருக்கின்றனர். அப்படித்தெரிந்தெடுத்ததில் அவர்களுக்கு அதிக சந்தோஷமும் மனத்திருப்தியும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் கொண்டுள்ள மேலான நோக்கம் மெச்சத்தக்கது. இந்த அபிப்பிராயத்தை ஜனங்களும் நல்வரவாக மதிப்பார்கள். நமது சென்னை மாகாண கவர்ன்மெண்டார் தயவுடன் இந்தியா கவர்ன்மெண்டார் செய்ததீர்மானத்தில் கண்டிருக்கும் பஞ்சாயத்து விஷயங்கள் பூராவையும் கவனித்து அதன் நிபந்தனைகளை கூடியசீக்கிரத்தில் நிறைவேற்றுவார்களென்று நாம் நம்புகிறோம். இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள தீர்மானப்படி திருத்தங்கள் கிடைக்குமானால் கிராமபஞ்சாயத்துக்கள் மேலான நிலைமைக்குவரும் என்பதில் சந்தேகமில்லை, தற்போது ஜில்லாக்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுவரும் மாதிரிகிராம பஞ்சாயத்துக்களில் ஏறக்குறைய எல்லாபஞ்சாயத்துக்களும் நல்ல வேலை செய்துவருவதால் அவைகளுக்கு இப்புதிய தீர்மானத்தில் உள்ளபடி அதிகாரங்களை உடனே கொடுத்து விடும்படி நாம் கவர்ன்மெண்டாரை வற்புறுத்துகிறோம். கிராம மகாஜனங்களே! பஞ்சாயத்தார்களே! இந்தியாகவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் தீர்மானம் சீக்கிரம் அமுலுக்கு வருமாதலால் பஞ்சாயத்து ஏற்பட்டிருக்கும் கிராமத்தார்கள் அதனைப்பெற்று கிராமநிர்வாகங்களைச் செவ்வனே கவனித்து கிராமத்தார்கள் தங்கள் தங்கள் கிராமகாரியங்களில் பொறுப்பாளிகளாயிருக்க முன் வருவீர்களாக. பஞ்சாயத்துகளைச்சரிவர நடத்தமுயலுங்கள். புதியபஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுள்ள கிராமத்தார்கள் புதியஊக்கத்துடனும், திடமனதுடனும், ஒற்றுமையுடனும் தங்கள் பஞ்சாயத்து சபைகளை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரப்பாடுபடுவார்களென்று நினைக்கின்றோம்.

---

## பஞ்சாயத்துக்களுக்கும் இதர கிராம சபையார்களுக்கும் ஓர் வேண்டுகோள்.

நமது பஞ்சாயத்து பத்திரிகையில் பஞ்சாயத்தார்கள் செய்யும் பஞ்சாயத்து நடவடிக்கைகளில் விசேஷமானவைகளை வெளிப்படுத்தவேண்டியிருப்பதால் கிராமப்பஞ்சாயத்தார்களும், சமுதாயத்தார்களும், இதர சபையார்களும் மீடிங்கு காலத்தில் தீர்மானம் செய்யும் எல்லா விஷய நடவடிக்கைகளுக்கும் ஒரு நகல் நமக்கும் அனுப்பினால் நாம் அவ்வப்போது நமது பத்திரிகையில் வெளியிடுவோம். இதனை யாவரும் கவனிக்கவேண்டுகின்றோம். விசேஷ நடவடிக்கைகள் வெளிவருவதால் பல பஞ்சாயத்தார்களுக்கும் பொது ஜனங்களுக்கும் நன்மைகள் பலவுண்டு.

# ஸ்தல சுய ஆட்சி.

## இந்தியா கவர்ன்மெண்டாரின் தீர்மானம்.

### கிராமப் பஞ்சாயத்துக்கள்.

லார்டு ரிப்பனுடைய காலத்தில் ஸ்தல சுயஆட்சி விஷயமாய் செய்யப்பட்ட தீர்மானமானது முனிசிபாலிடிகள், ஜில்லா தாலூக்கா போர்டுகள் ஆகிய இவற்றை மாத்திரம் குறித்துச் செய்யப்பட்டதாகும். பின்னால் கிராமப் பஞ்சாயத்தைப்பற்றி பிரஸ்தாபம் எற்பட்டிருக்கிறது. 1909-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட அதிகாரப் பிரிவினை கமிஷன் கிராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதைக் குறித்து விசேஷமாய் யோசனை செய்திருக்கின்றது. அந்தந்த கமிட்டியினுடைய ரிப்போர்ட்டில் இவ்விஷயம் விரிவாய் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. எந்த முறையின்மீது கிராமப் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதையும் கமிஷன் குறிப்பிட்டிருக்கின்றது. கிராம ஜனங்களுக்குள் பொதுவாழ்க்கையில் சிரத்தையை யுண்டுபண்ணுவதும் கிராம ஜனங்களைப் பிரதி தினமும் பாதிக்கும் சில்லரை விஷயங்களைத் தீர்த்துக்கொள்ளுவதில் அவர்களுக்கு அதிகாரமிருக்கும் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்பதே கமிஷனுடைய அபிப்பிராயம். கிராமப் பஞ்சாயத்துகள் விஷயத்தில் அனுஷ்டிக்கப்படவேண்டிய முறைக்கும் முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் அனுஷ்டிக்கப்படவேண்டிய முறைக்கும் வித்தியாஸமிருக்க வேண்டுமென்பது நியாயமென்று கமிஷன் அபிப்பிராயப் பட்டபடியே கவர்ன்மெண்டும் அபிப்பிராயப்படுகின்றது.

ஆகையால் கமிஷனர்கள் தங்களால் சிபார்சு செயயப்பட்டிருக்கும் பஞ்சாயத்து முறைகளுக்கும், மதருஸ் லோகல்பண்டு யூனியன்கள், வங்காளத்திலுள்ள சவுக்கிதாரியூனியன்கள், ஐக்கிய மாகாணங்கள் பம்பாய் மத்திய மாகாணங்கள் முதலியவைகளில் இப்பால் ஸ்தாபிதம் செய்யப்படப்போகிற புதிய சிருஷ்டனையான சங்கங்கள் இவைகளுக்கும் வித்தியாஸம் பாராட்டியிருக்கிறார்கள். இவ்விதம் சிருஷ்டனைசெய்யப்பட்ட யூனியன்கள் ஸ்தல சுய ஆக்ஷி என்னும் பதம் எந்த அர்த்தத்தில் 1882ம் வருஷத்திய தீர்மானத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வழியில் ஸ்தல சுய ஆக்ஷிக்கு உதவியாக



இருக்கக்கூடும். இவைகளுக்கு முனிசிபாலிட்டிகள் லோகல் போர்டுகளைவிட அதிகார எல்லையும் குறைவாயிருக்கும். ஆனால் இவைகள் கிராம ஒற்றுமை வாழ்க்கைக்கு சம்பந்தப்பட்டவைகளல்ல. கிராமங்களிலுள்ள புராதனவழக்கங்கள், அவர்களுக்குள் ரத்த சம்பந்தங்கள், ஜாதி சம்பந்தங்கள், கிராமங்களில் ஜனங்கள் தங்களுடைய காரியங்களுக்காக வரி விதித்துக்கொள்ளும் வழக்கம் இவைகளை ஒட்டி, கமிஷனர்கள் கிராம பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். கமிஷனர்களால் பாராட்டப்பட்டிருக்கும் மேற்குறிப்பிட்ட வித்தியாஸங்கள் உண்மையானவைகள் என்றும் ஆகவே பஞ்சாயத்துகள் ஸ்தாபிதம் செய்யும் விஷயமாய்ப் பொதுவிதிகள் ஏற்படுத்துவதில், தனி கிராமங்களின் வாழ்க்கைக்காவது, அல்லது ஒற்றுமையுடன் நடந்துவரும் பல கிராமங்களின் வாழ்க்கையைக் குறித்தாவதுமட்டும் அவர்கள் ஆலோசனை செய்யவேண்டுமென்று கருதுகிறார்கள்.

## அதிகாரப் பிரிவினை கமிஷனர்களின் அபிப்பிராயங்கள்

பல ராஜதானிகளில் மட்டுமல்ல, ஒவ்வொரு ராஜதானியிலுமுள்ள பல கிராமங்களில் உள்ள வித்தியாச நிலைமைகளை முன்னிட்டு, பஞ்சாயத்து முறைகளை விருத்தி செய்வதில் முன் ஜாக்கிரதையுடன் நடக்க வேண்டுமென்று கமிஷனர்கள் குறிப்பிட்டார்கள். இந்தியா கவர்ன்மெண்டாரும் கிராமப் பஞ்சாயத்துக்களை விருத்தி செய்ய முயற்சிசெய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்தாலும், கமிஷனர்களால் குறிப்பிடப்பட்ட எச்சரிக்கைப்படி நடக்க வேண்டிய தவசியமென்று கருதுகிறார்கள். அதே மாதிரியாக கமிஷனர்கள் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு சில அலுவல்களும் அதிகாரங்களும் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டாலும், அவைகளை விருத்தி செய்வதில் ஒரே விதமான முறைகளை எல்லா இடங்களிலும் அனுஷ்டிக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்துகளுக்கு அலுவல்களும் அதிகாரங்களும் கிரமேண எச்சரிக்கையுடன் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அவைகள் அந்தந்த இடங்களுக்கு ஒத்தவாறு இருக்க வேண்டுமென்றும், அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றுகிறார்களென்பதைப் பொறுத்திருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்துகள் ஜில்லா அதிகாரிகளின் கண்காணிக்கையிலிருக்க வேண்டுமென்றும், கூடுமானால் விசேஷ உதவி உத்தியோகஸ்தர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்றும், அவைகள் பிரத்தியேகமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், மெம்பர்கள் பத்ததிகளை அனுசரித்தில்லாமல் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், கிராம முன்சீப் அச்சபைகளின் சேர்மனாக இருக்க வேண்டுமென்றும் கமிஷனர்கள் சிபார்சு செய்தார்கள் அத்துடன் இந்த பஞ்சாயத்துகளுக்கு சொற்ப ஸிவில்,

கிரிமினல் கேசுகளைப் பரிசீலனை செய்ய அதிகாரமிருக்க வேண்டுமென்றும், நியாய வழுவுதல் ஏற்பட்டால் அவைகளை நிவர்த்திக்க கோர்ட்டார்களுக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். சுகாதார சம்பந்தமாயும், கல்வி அபிவிருத்தி சம்பந்தமாயும் கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு வரிபோடும் அதிகாரம் கொடுப்பது ஜனங்கள் சம்மதிக்கக் கூடாததாக இருக்குமாதலால், அந்த அதிகாரம் கொடுக்கப்படக்கூடாதென்றும், ஆனால் நிலவரியில் (ரோட் செஸ்) ஒரு பாகமும் உதவிகளும் லோகல் போர்டுகளிலிருந்தாவது கலெக்டராலாவது கொடுக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

## 1915-ம் வருஷத்திய தீர்மானத்தின் நோக்கங்கள்.

கமிஷனர்களின் சிபார்சுக்கு பொதுவாய் இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களுடைய 1915-ம் வருஷத்திய தீர்மானத்தில் இணங்கினார்கள். அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் முறைகளை மாகாண கவர்ன்மெண்டார்களின் அபிப்பிராயத்துக்கு விட்டாலும், அவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய விஷயமாய் அடியிற்கண்ட பொது விதிகளை அவர்கள் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள்.

(1) இம்முறைகளைக்குறிப்பிட்ட கிராமங்களிலாவது, அல்லது பொதுவாய் ஜனங்கள் ஒற்றுமையாயிருக்கிற கிராமங்களை விட பெரிய விஸ்தீரணங்களிலாவது, பரிக்ஷை செய்து பார்க்கவேண்டும்.

(2) அவசியமானால், ஏற்படுத்தப்படுகிற சட்டங்கள் அனுமதிகொடுக்கிறதாகவும், பொதுவாகவுமிருக்கவேண்டும் பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கப்படும் அலுவல்களும் அதிகாரங்களும் எல்லா கிராமங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டியதில்லை. அவைகள் அப்படி இருக்கவும் கூடாது.

(3) நிர்வாகம், நீதி ஆகிய இரண்டு அதிகாரங்களையும் பஞ்சாயத்தார்களுக்கு கொடுக்கலாமென்று உத்தேசிக்கப்படுகிற இடங்களில், ஒரே பஞ்சாயத்தார் இரண்டு அதிகாரங்களையும் நடத்தவேண்டும்.

(4) ஏற்கனவே சுகாதாரம், கல்வி சம்பந்தமாய் கிராமங்களில் கமிடிகள் இருந்தால் அவைகளை கிராமப் பஞ்சாயத்துகளுடன் சேர்த்துவிடவேண்டும்.

(5) பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படும் நீதி பரிபாலன அதிகாரங்கள் சாதாரணமாய் விரிவாய் இருக்கவேண்டும்; ஆனால் விவகாரிகளுக்கு இந்த கோர்ட்டுகளுக்கு வரத் தூண்டுதல் உண்டுபண்ணுவதற்கு, பஞ்சாயத்துகள் மூலமாய் விவகாரங்களை தீர்த்துக்கொள்ள இஷ்டப்படுகிறவர்களுக்கு நியாய



மான சவுகரியங்கள் கொடுக்கவேண்டும். உதாரணமாக கோர்ட்டுபீஸ் விதிப்பதானால் அது குறைவாயிருக்கவேண்டும்; நடவடிக்கைகளில் குழப்பத்திற்கு இடந்தரக்கூடாது. டிக்கிரிகளை கூடுமானால் சீக்கிரம் நிறைவேற்றிக்கொள்ள அனுமதி கொடுக்கப்படவேண்டும்.

(6) மாகாண கவர்ன்மெண்டாரின் கண்காணிக்கைக் குட்பட்டு, விரும்பப்படும் பக்ஷத்தில், வரி விதித்துக்கொள்ள பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கலாம். ஆனால் வரிவிதிக்கும் விஷயம் ஜாஸ்தியாயிருக்கிறதென்கிற காரணத்தினால் பஞ்சாயத்துகள் விருத்தி அடைவதற்கே இடஞ்சலாயிருக்கும்படி செய்துவிடக்கூடாது.

(7) நிர்வாக முறைகளில், பஞ்சாயத்துக்கும் மற்ற நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களை நிர்த்தாரணித்து விடவேண்டும். அவைகளுக்கு டிஸ்டிரிக்டு போர்டுகளாவது தாலுக்கா போர்டுகளாவது திரவிய உதவி செய்யும் பக்ஷத்தில், அந்த போர்டார்கள் இப்பஞ்சாயத்துக்களை கண்காணிப்பதில் ஆக்ஷேபனை யிருக்கக்கூடாது.

## இப்பொழுது பிரேரணை செய்யப்படும் மாறுதல்கள்.

அதற்கப்புறம், பஞ்சாயத்து முறையை விருத்தி செய்ய வேண்டி பல மாகாணங்களில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இம்மாதிரி முறை ஏற்படுத்துகிறதற்காக அஸ்ஸாமில் ஒரு சட்டம் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. ஐக்கியமாகாணத்தில் இவ்விஷயமாய் ஒரு ஸ்பெஷல் கமிடி விசாரணை செய்து ரிபோர்ட் செய்திருக்கிறது. இவ்விஷயத்தை இன்று முன்செலுத்தவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் விரும்புகிறார்கள்; அடியிற்கண்ட விஷயங்கள் தவிர மற்றப்படி 1915-ம் வருஷத்திய தீர்மானத்தில் சொல்லப்பட்ட அபிப்பிராயங்கள் இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்மதமானவை. கிராமங்கள் வெகு சமீபமாகவிருந்து அவைகளை ஒன்றாக பாவிக்கக்கூடியதாயிருந்தாலொழிய, அந்தந்தக் கிராமத்துக்கு தனியாகப் பஞ்சாயத்து சபை ஏற்படுத்தவேண்டும். மேலே சொல்லியிருக்கிற 7-வது பிரிவின் கருத்தையும் மாற்றவேண்டியிருக்கிறது. இந்த சமயத்தில் பஞ்சாயத்துகளுக்கும் இதர நிர்வாகசபைகளுக்கும் சம்பந்தம் ஏற்படுத்துவது உசிதமல்ல; அவை வேறு எந்த சபையுடனும் சம்பந்தமில்லாதிருக்க வேண்டியதுதான்; அவைகள் தங்களுடைய வேலையை எப்படிச்செய்கின்றனவென்பதை ஜில்லாவின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்; ஆனால் அப்படிப் பரிசோதனை செய்கிறவர்கள் தாசில்தாருக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டும்.

பஞ்சாயத்துகளில் கிராம உத்தியோகஸ்தர் சம்பந்தப்பட வேண்டியது அவசியமென்று இந்தியா கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள். மற்றமெம்பர்கள் கிராம ஜனங்களாலேயே பொறுக்கியெடுக்கப்படவேண்டும் அப்படிப் பொறுக்குவதானது பத்ததியை அனுசரித்திருக்க வேண்டாம். பஞ்சாயத்து சபையின் தலைவரை மெம்பர்களே தெரிந்தெடுக்கலாம்; கிராம உத்தியோகஸ்தரைத்தான் பஞ்சாயத்தின் தலைமையாக நியமிக்கவேண்டுமென்ற கட்டாயம் கூடாது. கிராம சுகாதாரம், கிராமப்படிப்பு, சொல்ப சிவில் கிரிமினல் விவகாரங்கள் ஆகிய இவைகளே பஞ்சாயத்து சபைகளின் முக்கிய வேலைகளாயிருக்கவேண்டும். விவகாரங்களைப்பற்றி யோசிக்கையில் பஞ்சாயத்தானது அந்தந்த கிராமத்துக்குத் தனியாக இருக்க வேண்டுமென்பது புலப்படும்; விவகாரங்களைப் பைசல் செய்கையில் பொதுஜன அபிப்பிராயத்துக்கு பயந்து பைசல் செய்வார்கள் என்பது அந்தந்த கிராமத்துக்குத் தனியாக பஞ்சாயதது ஏற்பட்டால் தான் அனுஷ்டானத்தில் சரியாயிருக்கும். கிராமத்தில் வசூல் செய்யப்படும் ரோடு வரியில் ஒருபாகமானது பஞ்சாயத்துக்குக் கிடைக்கும்படி யிருக்கவேண்டும். ஆனால் அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சிபார்சு செய்தது போல் எல்லாப்பஞ்சாயத்துகளுக்கும் அப்படிக்கிடைக்க வேண்டுமென்ற அவசியமிராது. இந்த வரும்படி யன்னியில் ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக ஒரு வரி விதிக்க பஞ்சாயத்துக்கு அதிகாரம் கொடுக்கவும் இந்தியா கவர்ன்மெண்டார் இஷ்டப்படுகிறார்கள் பஞ்சாயத்து சபைகளை உத்தேசித்து செய்யப்படும் சட்டமானது சுலபமானதாயிருக்கவேண்டும். அப்போதைக்கப்போது எற்படும் அனுபோகத்தை அனுசரித்து விதிகளைச்செய்துகொள்ள சட்டம் இடம் கொடுக்கிறதாயிருக்கவேண்டும். பல பிரதேசங்களில் பல மாதிரியான நிலைமைகள் இருக்கிறபடியால், ஒரேமாதிரியான எற்பாட்டை அனுஷ்டானத்தில் கொண்டு வருவது சிரமமாயிருக்கும் சில இடங்களில் கிராமங்களே இல்லை. ஆயினும் எங்கு சாத்தியமோ அங்கு சரியானபடி ஆரம்பம் செய்யவேண்டும் எந்தக்கிராமங்களிலாவது மேற்சொன்ன முறைசாத்தியப்படமாட்டாது என்று மாகாண கவர்ன்மெண்டுகள் நினைத்தால் வேறு என்ன செய்யலாமென்று அவைகள் சொல்லட்டும். ஸ்தல சுய ஆட்சியை உத்தேசித்து யூனியன்களையும் பல யூனியன்கள் சேர்ந்த வட்டங்களையும் ஏற்படுத்துவதைத்தடுக்க உத்தேசமில்லை எந்த இடத்தில் கிராமப்பஞ்சாயத்தை ஏற்படுத்த காலம் வரவில்லையென்றுவது அல்லது முடியாதென்றுவது தோன்றுகிறதோ அங்கு தாலூகா போர்டுகளுக்கு உதவியாக யூனியன்களை ஏற்படுத்துவது உபயோகமாகவிருக்கும்

## இப்போழுது செய்ய வேண்டியது.

இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற யோசனைகளில் பலவற்றை புதுச்சட்டம் செய்யாமலேயே அனுஷ்டானத்தில் கொண்டுவந்து விட



முடியும். சென்னைமாகாணம் முதலிய சில இடங்களில் இப்பொழுதிருக்கிற சட்டத்தைத் திருத்த ஏற்பாடாகிறது.

கிராமப் பஞ்சாயத்து அபிவிருத்தியானது தனிச் சட்டத்தின் மூலமாகவே ஏற்படவேண்டும் பஞ்சாயத்து சட்டத்துக்கும் முனிசிபாலிடி சட்டம், லோகல் போர்டு சட்டங்களும் சம்பந்தங்கூடாது.

இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற போக்கை யனுசரித்தல், ஸ்தல சுயஆட்சியில் தாராளமான விருத்தியாம்சம் ஏறபடும் மற்றவைகளை விட ஸ்தல சுய ஆட்சிதான் ஜனக்கூட்டத்தைத் தொடும். உத்தியோகஸ்தர்களின் அமிதமான கண்காணிப்பிலிருந்து ஸ்தலநிர்வாகம் விடுதலை பெறுமானல் தங்களுடைய வாழ்வு சம்பந்தமானகாரியங்களில் தங்களுக்கு ஆதிக்கமிருக்கிறதாக அநேகர் கருத இடமும் ஜனங்களுடைய நிலைமையை விருத்தி செய்ய இது வரையில் இல்லாத சந்தர்ப்பமும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஏற்படும். ஜனங்களின் அகவாழ்வு ஸ்தல ஸ்தாபனங்களைப் பொருத்த விஷயமாயிருக்கிறது; ஆரம்பப்படிப்பு அவைகளுக்குட்பட்டிருக்கிறது; சாலைபோடுவது முதலிய வேலைகளை அவைகள் செய்கின்றன. தஙகளுடைய பொறுப்புகள் எவ்வளவு விரிவாகின்றனவோ அவ்வளவு ஸ்தல சுய ஆட்சி விருத்தியடையும்; ஸ்தலக்காரியங்களை நிர்வகிக்கும் விஷயததில் உண்டாகும் அனுபோகத்தின்மேல் மத்திய கவர்ன்மெண்டை நிர்வகிக்கும் திறமை ஏற்படவேண்டியிருக்கும்.

---

## கிராமப் பஞ்சாயத்துகளைப்பற்றி

### ஸ்ரீமதி அன்னி பெசன்ட் அம்மை

அன்னி பெசன்ட் அம்மை என்பவர் மேல்நாட்டுப் பெண்மணி. நம்முடைய தேசத்துக்கு வந்து நம்மதத்தில் அபிமானங்கொண்டு நம்மை அவர்தம் சகோதரர்களாகப் பாவித்து பாரத வாசிகளாகிய நாம் எல்லோரும் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமென்ற ஆசைகொண்டவராய் அல்லும் பகலும் நமக்காக உழைத்து வருபவருள் அவரும் ஒருவர். அவ்வம்மை சென்ற வருஷம் டிசம்பர் மாதக் கடைசியில் கல்கத்தாவில் கூடிய 32-வது காங்கிரஸ் மகா சபையில் கிராமப் பஞ்சாயத்துக்களைப்பற்றி பேசியிருக்கிறார். அது பின் வருமாறு :—

“பண்டை காலம் முதற்கொண்டு கிராமத்தார் என்கிற ஒரு தனி வகுப்பினர் இருந்து வருகிறார்கள். பொது அறிவும் ஐக்யபத்யமும் அவர்களிடம் அதிகமாய் இருந்து வருகிறது. சிலாசாஸனங்களாலும் பழைய தஸ்தாவேஜிகளாலும் இது நன்றாய் விளங்கும். 19-ம் நூற்றாண்டு வரையில் அவை சிறி

தும் அழியாது நீடித்து நின்றன. பர்மாவில் இப்போதும் அதன் சின்னங்கள் காணப்படுகின்றன. ஸர்தாமஸ் மன்ரோ சென்னை கவர்னராயிருந்தார். தனி ரயத்வாரித் திட்டம் 1820-ம் வருஷத்தில் அனுஷ்டானத்துக்கு வந்ததும் பஞ்சாயத்துகள் நாளடைவில் மறைந்து போயின. கிராமவாசிகள் ரஸ்தாக்கள் போடுவதிலும், நந்தவனங்கள் வைத்து வளர்ப்பதிலும் பொது நன்மைகளுக்காகப் பாடு படுவதிலும் அதிக ஊக்கமும் பொறுப்பும் காட்டி வந்தார்கள் என்பதும் கௌடில்யா தெரிவிக்கிறார். குக் கிராம கவர்ன்மெண்டார் கிராம நிர்வாக அதிகாரத்தையும் நீதி பரிபாலனத்தையும் நன்கு நடத்திவந்தார்கள். ஆகவே மறுபடியும் பஞ்சாயத்துக்களை ஸ்தாபிக்க இந்தியா மந்திரி சட்ட பூர்வமாய் அதிகாரம் கொடுத்து விடுவாரென்று நம்புகிறேன். சென்னை சட்ட சபையில் கனம ரங்காசாரியார் ஆன மட்டும் கொண்டுவரப் பார்த்து கடைசியில் பலிக்காத கிராமப் பஞ்சாயத்து மசோதாவை இந்தியா மந்திரியிடம் நான் சமர்ப்பித்திருக்கிறேன். சென்னைப் பட்டணத்தில் அங்கீகரிக்கப்படாத இம் மசோதா பார்லிமெண்டிலாவது நிறைவேறுதா என்று எதிர் பார்ப்போம். பல தடவைகளில் நான் சொல்லியிருக்கிறபடி, பஞ்சாயத்துகளை உபயோகமான சபைகளாகவும் அவற்றில் கிராமத்தாருக்கு ஊக்கம் உண்டாகும்படியும் வைத்து நடத்தவேண்டும். கிராம பஞ்சாயத்து முறையை அனுசரித்தே பட்டணங்களில 'வார்டு' பஞ்சாயத்து முறைகள் ஏற்படவேண்டும். 5000 ஜனங்கள் உள்ள இடங்களில் இம் முறையை அனுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டும். அந்தந்த வார்டுக்கு அந்தந்த காரியங்களை நடத்திக் கொள்ள சுவாதீனம் வேண்டும். முனிசிபல் நகரங்களில்கூட வார்டு பஞ்சாயத்து சபைகளுக்கு ஓரளவு அதிகாரமும் மேற்பார்வையும் இருக்கவேண்டும். இவ்விதமாக கிராமங்களில் பஞ்சாயத்து சபைகள் அதிகமாய் ஏற்படுதல் மேன்மை.''

---

## பஞ்சாயத்தார் கவனிக்க வேண்டியவை

(முதல் சஞ்சிகை 9-ம் பக்கத்தொடர்ச்சி.

### 4. கேஸுகளைப்பற்றிய சில குறிப்புகளும் கிராம நிதியும்

20. கவர்ன்மெண்டார் கிராமங்களில் ஏற்படுத்திவரும் மாதிரி பஞ்சாயத்துகளுக்கு **Informal Panchayats** அதிகாரம் கொடுக்கிறவரையில் பஞ்சாயத்தாருடைய தீர்மானத்துக்குக் கட்டுப்படுவதாக இரண்டு கக்ஷிக்காரர்களிடத்திலிருந்து முச்சலிக்கை வாங்கிக்கொண்ட பிறகுதான் சிவில் கிரிமினல் கேசுகளை விசாரிக்கவேண்டும்.



21. மேல் அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு அனுப்பாமலே கேசுகளைத் தீர்த்துவிடவேண்டும். கூடுமானவரையில் இரண்டு கக்ஷிக்காரர்களையும் ராஜி செய்து ஒற்றுமைப்படுத்த முயலவேண்டும்.

22 கட்டுப்படாமலிருந்தால் அவனுக்கு இஷ்டப்பட்டவர்களைக்கொண்டாவது, அல்லது அக்கம்பக்கத்து பஞ்சாயத்தார்களைக்கொண்டாவது, பெரிய தனக்காரர்களைக்கொண்டாவது வியாஜ்ய விவகாரங்களை விசாரிக்கச்செய்து நியாயமான தீர்ப்பு சொல்லி இரண்டு கக்ஷிக்காரரையும் திருப்திப்படுத்துவதே மேன்மை அவர்களுக்கும் பணச்செலவு அதிகம் ஏற்படாது. எப்படியாவது கட்டுப்படாதவனைக் கட்டுப்படுத்தி சமாதானப்படுத்த முயற்சிப்பதே உத்தமம் குறிப்பு:—மாதிரிப் பஞ்சாயத்துக்களின் வேலைகளைப் பரிசீலனை செய்த பிறகு அவைகளுக்கு அதிகாரம் கொடுக்கப்போவதாக ராஜாங்கத்தார் சொல்லிவருவதால் கிராம காரியங்களை ஒற்றுமையுடன் நடத்தவழி தேடுவதே பஞ்சாயத்தார்களின் முக்கிய கருத்தாயிருக்கவேண்டும். கேசுகளைத் தீர்த்தபிறகு கிராமப்பொது விஷய செலவுகளுக்கென்றாவது அல்லது கிராம பண்டுகளுக்கென்றாவது (நிதிக்கு) சிறு தொகையாகப் பணம் வசூலிக்கலாம்.

23. கிராமநிதிக்கு பணம் சேர்த்து வைப்பதில் பஞ்சாயத்தார்களுக்கு ஊக்கம் ஏற்பட்டால்தான் கிராமப் பொதுக் காரியங்களில் செலவு செய்வதற்கு வழி ஏற்படும். கிராமங்களில் மகிமைக் குத்தகை, வாத்துக்குத்தகை மீன் குத்தகை முதலியவைகளை அமுலுக்குக்கொண்டுவரலாம். சமுதாய நிலங்களிலிருந்து வருமானம் கிடைக்கும் பொதுவரிகளின்மூலமும் அல்லது அறுவடைகாலங்களில் ஏகரா ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு மரக்கால் தானிய வீதமும் வசூலிக்கலாம். சிவில் கிரிமினல் கேசுகளை விசாரிப்பதில் இரண்டு கக்ஷிகாரர்களிடமிருந்து ஏதோ ஒரு சிறு பகுதியை கிராமப் பொது ஜன நிதிக்குக்கொடுத்து உதவும்படி சொல்லலாம். பஞ்சாயத்தார்களால் குற்றவாளி என்று கருதப்படும் நபரிடமிருந்து சிறுதொகை வேண்டுமானால் வாங்கலாம். கிராமக்கோயில்களின் சொத்துக்களையும் சத்திரம் சாவடி இவைகளின் சொத்துக்களையும் கிராமப் பொதுக்காரியங்களுக்காக விடப்பட்டிருக்கும் சமுதாயம் அல்லது மானிய நிலங்களையும் பஞ்சாயத்தாருடைய மேல்பார்வையில் வைத்து அவற்றின் வருமானத்தை அடையலாம். கிராமங்களில் சர்க்காரும் போர்டார்களும் செய்யும் வேலைகளை சர்க்காரிடமிருந்து முன் பணம் பெற்று ஒப்பந்த வேலைகளை பஞ்சாயத்தார்களே செய்து கொடுத்து அதன் லாபத்தை பஞ்சாயத்தில் சேர்க்கலாம். சமுதாய நிலங்களில் ஆடு மாடுகள் மேய்வதில் வேண்டுமானால் வரி எற்படுத்தலாம். வீணாய்ப்பயிரிடப்படாமல் விடப்பட்டு இருக்கும் புறம்போக்கு ஜாகாக்களில் பலன்தரும்

மரம் முதலியவற்றை வைத்துப் பயிர் செய்து மேற்படி புறம்போக்கு ஜாகாக்களையோ மரம் செடிகளையோ பஞ்சாயத்தின் பேரிலேயே கிராமப் பொதுஜன சௌகரியத்துக்காக பட்டா செய்து கொடுக்கும்படி ஸர்க்காரை வேண்டி அந்த விருக்ஷங்கள் அல்லது செடிகள் இவைகளின் பலன்களை பஞ்சாயத்து நிதிக்குச்சேர்க்கலாம். கிராம தேவாலயங்களுக்கும் பொதுஜனங்களுக்கும் சௌகரியமாயிருக்கும்பொருட்டு சில புறம்போக்கு ஜாகாக்களை கிராம தேவாலயங்களின்பேரில் பட்டா செய்து கொடுக்கும்படி ஸர்க்காரை வேண்டி அந்தவிடங்களில் நந்தவனங்கள் உற்பத்திசெய்து கிராம கோயில்களுக்குச் செலவிட்டதுபோக மீதியை விற்பனைசெய்வதும் நலமே.

**24.** கிராமங்களில் தெருக்களை ஸுத்தமாய்வைத்து இரவில் தெருக்கள் ஸந்திக்கும் இடங்களில் தீபம் போடவேண்டியது அவசியம்.

குறிப்பு:—மேற்சொன்ன விஷயங்கள் ஸர்க்காருடைய அனுமதியும் அதிகாரமும் பெற்றுள்ள பஞ்சாயத்துகளுக்கு (யூனியன், காட்டு, நீர்ப்பாசன பஞ்சாயத்துகளுக்கு) சொல்லப்படவில்லை. இவைகள் மாதிரிபஞ்சாயத்துகளுக்காகவே சொல்லப்பட்டன.

இவைகளை மாதிரி கிராம பஞ்சாயத்தார்கள் நன்றாய்க் கவனித்து மேலே சொல்லியபடி நடப்பார்களென்று நம்புகின்றோம். கிராம பஞ்சாயத்துகளை நன்றாய் நடத்தி கிராம காரியங்களை நன்றாக நிர்வகித்து ஸர்க்காருக்கு நம்முடைய திறமையை காண்பிப்போமானால் நமது ஜனப்பிரதிநிதிகள் அடிக்கடி கேட்டுக்கொண்டுவரும் அதிகாரங்களை கிராமத்தார்களுக்கே கொடுத்துவிடுவார்கள. அப்பொழுது கிராமங்கள் மேலான ஸ்திதிக்கு வருமென்பதற்கும் கிராமத்தார்கள் சுகமாய் வாழ்வார்கள் என்பதற்கும் சந்தேகமில்லை.

---

## கனம் T. ரெங்காசாரியாருடைய

## "சென்னை பஞ்சாயத்து ஆக்ட்"

(29ம் பக்கத்தொடர்ச்சி)

### சபையும் அதிகாரம் செலுத்துமிடமும்.

4. (a) இந்த ஆக்டின் நடவடிக்கைகாக எந்த கிராமத்தையாவது அல்லது அநேக கிராமங்களையாவது அல்லது அதன் பாகங்களையாவது கிராமமாகயிருக்கும்படி லோகல் கவர்ன்மெண்டார் சமயாசமயங்களில் உத்திரவு செய்யலாம்.



(b) இந்த ஆக்டின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலாவது அல்லது ஒவ்வொரு வட்டத்திலாவது பஞ்சாயத்து ஏற்படுத்தவும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பெருந்தொகை மெம்பர் ஆவ்வளவு இருக்கவேண்டுமென்பதை தீர்மானிக்கவும், கூடுமானால் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஐந்து மெம்பர்களுக்குக் குறையாமல் வேண்டிய அவசியத்தையும் லோகல் கவர்ன்மெண்டார் விளம்பரத்தினால் தெரிவிக்கலாம்.

5. பஞ்சாயத்து மெம்பர்கள் இந்த ஆக்ட் விதிகளின் முறைப்படி நியமிக்கப்படவேண்டும் அம்மெம்பர்களுள்மூன்றில் இரண்டு பாகம குடி ஜனங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனமாயிருக்குமாகில், அவர்கள் தங்கள வேலையில் மூன்று வருஷங்கள அமர்ந்திருக்கலாம் குடி ஜனங்கள் பூர்வீக வாசியாகவாவது அல்லது நிலசம்பத்துடையவனாகவாவது, இந்துக்கள் குடும்பத்தில் சேர்ந்த மெம்பராகவாவது, பொறுப்பாளியாகவாவது அல்லது மைனர்களின் கார்டியனாகவாவது இருக்கவேண்டும் (குறிப்பு:—ஒவ்வொரு கிராமத்து கிராமமுனிசீபும் தன் உத்தியோகத்துடன் பஞ்சாயத்து மெம்பராகவுமிருக்கலாம்.)

6. (a) 1873-வருஷத்து சென்னை ஸிவில் கோர்ட்ஸ் 3வது ஆக்டின்படி டிஸ்டிரிக்ட் முனிசீப அதிகாரம் செல்லுமிடத்திற்குள் ஒரு டிஸ்டிரிக்ட்டிற்குப் பஞ்சாயத்தார்களையாவது விளம்பரத்தினால் ஏற்படுத்தி ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்திற்கும் இவ்வளவு பெருந்தொகையான மெம்பர்கள் இருக்கலாம் என்பதை லோகல் கவர்ன்மெண்டார் தீர்மானித்துவிடலாம்.

(b) இந்த ஆக்ட் விதிகளின் முறைப்படி, டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்து மெம்பர்கள் நியமிக்கப்படவேண்டும். அவர்கள் மூன்று வருஷம் உத்தியோகத்திலிருக்கலாம்.

7. காலத்திற்குக் காலம் செய்யும் விதிகளுக்கு உட்படுவோமாகில், ஒரு வருஷத்திற்குமேல் டிஸ்டிரிக்ட்டில் குடியில்லாதவரையும் நிலமில்லாதவரையும் அல்லது நிலஎஜமானனுக்கு ஏஜண்டாக இல்லாதவரையும், டிஸ்டிரிக்ட் பஞ்சாயத்து மெம்பர்களாக நியமிக்கக்கூடாது

8. (a) இந்த ஆக்ட் விதிகளில் நிர்ணயிக்கப்பட்டபடி வருஷத்திற்கொருமுறை பஞ்சாயத்துகாரியங்களை நடத்தவும, நீதி செலுத்தவும் அப்பஞ்சாயத்து மெம்பர்களுக்குள்ளே கமிடி ஒன்று ஏற்படுத்தவேண்டும் மெம்பர்கள் இரண்டு கமிடிகளுக்குமேல் அதில் உட்காருவதற்கு லாயக்குள்ளவர்களல்ல.

(b) இம்மாதிரியான கமிடி ஒவ்வொன்றிலும் நடக்கும் நடவடிக்கைகளை எழுத்து மூலமாய் எழுதிவைத்து, விதிகளில் குறித்தபடி வருஷத்தில் ஓர் தினம் நியமித்து, அன்றையதினம் இந்த ரிக்கார்டுகளை பெரிய பஞ்சாயத்தாரிடம் ஒப்புவிக்கவேண்டும்.

9. இப்பேர்ப்பட்ட விதிகளுக்கு உட்படும் பக்ஷத்தில் கிராமபஞ்சாயத்து மெம்பர் ஒவ்வொருவரும் அந்தக்கிராமத்தில் மூன்று வருஷத்திற்குமேல் குடியிருந்தவராகவாவது, மிராசுதாராகவாவது ஏஜண்டாகவாவது அல்லது அந்தக்கிராமத்திற்கு ஒருமைலுக்குள் குடியிருக்கிறவனாகவாவது இருக்கவேண்டும் அப்படிக்கில்லாவிட்டால் அவரை கிராமபஞ்சாயத்து மெம்பராக நியமிக்க முடியாது.

10. ஒவ்வொரு பஞ்சாயத்திலும், வருஷத்திற்கு ஒருமுறை கிராமமுனிசீபு கர்ணம் அல்லது வேறே எந்த மனிதனையாவது அந்த மெம்பர்களுக்குள் அக்கிராசனாதிபதியாக ஒருவரை தேர்ந்தெடுக்கவேண்டும். அவர் ஒவ்வொரு கமிடியிலும் அக்கிராசனாதிபதியாயிருக்கவேண்டும், மேற்சொன்னபடி அந்த மெம்பர்களுக்குள்ளே ஒருவரை உதவி அக்கிராசனாதிபதியாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

இன்னும் வரும்,

---

## கள்ளிப்பட்டி

### கோபிசெட்டிபாளையம் தாலுக்கா

1918-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 25-ம் தேதி கிராம பஞ்சாயத்தாரால் அடியிற்கண்டபடி தீர்மானிக்கப்பட்டது.

பஞ்சாயத்துக்கு தலைவரை வோட்டின்பேரில் நியமிக்கவேண்டும்.

2. பஞ்சாயத்து மெம்பர்களை பொறுக்கி எடுக்கவேண்டும்.

3 ஜனங்களின் பாதுகாப்புக்காக கிராமக் குற்றங்களை கண்டு பிடித்து தெரிவிக்கும் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் படவேண்டும்.

4. கிராமத்திலுள்ள வோட்டர்கள் ஜாப்தா தயாரிக்கவேண்டும்.

5. பிரதி பௌர்ணமி தினத்திலும் சர்வஜனங்களும் அடங்கிய மக சபை ஒன்று கூடவேண்டும்.

மேற்படி 5 விஷயமான காரியங்களையும் நிறைவேற்ற அடியிற்கண்டபடி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன.



(1) வோட்டுகள் ஜாப்தா தயாரிக்கப்பட்டன.

(2) பஞ்சாயத்துக்கு நான்கு பேர்களில் மிஸ்டர் ஸி. கே. இராமசாமி கவுண்டருக்கு 40 வோட்டுகள் கிடைத்தபடியால் அவரே தலைவரானார்.

3. பஞ்சாயத்து மெம்பர்களும் குற்றங்களைக் கண்டுபிடித்து சபையோருக்குத் தெரிவிக்கும் உத்தியோகஸ்தர்களும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

காருண்ய கவர்ன்மெண்டார் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் செய்வதில் கிராமப் பஞ்சாயத்து அதாவது இப்போதிருக்கிற கிராம மணியகாரர் கோர்ட் ஒன்றும் பஞ்சாயத்து மெம்பர்களடங்கிய பஞ்சாயத்து கோர்ட்டு ஒன்றும் இரண்டு கோர்ட்டுகள் நியமிக்கலாமென அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அடியிற்கண்ட மாதிரியாக ஸ்தாபிக்கவேண்டுமென பஞ்சாயத்து எதிர்பார்க்கிறது:—

"கிராமமுனிசீப் அடங்கிய கிராமக்கோர்ட்டு ஒன்றும், பஞ்சாயத்து கோர்ட்டு ஒன்றும் ஆக இரண்டு கோர்ட்டுகள் கூடாது. தற்போது கிராம மணியகாரர் அடங்கிய கிராமக் கோர்ட்டு சரிவர நடந்துவராமல் இருப்பதால் இரண்டு கோர்ட்டுகள் வேண்டியதில்லையென்றும், பஞ்சாயத்து கோர்ட்டு என்று ஒரே கோர்ட்டு மூன்று கிராமங்களை ஒன்றுசேர்த்து ஸ்தாபிக்க வேண்டுமென்றும், ஜில்லா கலெக்டர் பஞ்சாயத்து மெம்பர்களை நியமிப்பது கூடாதென்றும், ஜனங்களுள் எலக்ஷன் செய்யவேண்டுமென்றும், சபைத்தலைவரை பஞ்சாயத்து மெம்பர்களே எலெக்ஷன் செய்யவேண்டுமென்றும், கிராம அதிகாரி அதில் ஒரு மெம்பராக இருக்கலாமேயல்லாது ஜனங்களால் எலெக்ஷன் செய்யப்பட்டால்மாத்திரம் சபைத்தலைவராக இருக்கவேண்டுமேயல்லாது ஜில்லா கலெக்டர் கிராமமுனிசிப்புகளை சபைத்தலைவராக நியமிக்கக் கூடாதென்றும், இப்போது தாலூக்கா போர்டு எலெக்ஷன் முறைப்படி கிராமபோர்டு கிராமப்பஞ்சாயத்துகளிலும் எலெக்ஷன் முறைகளும் வோட்டர்களும் ஏற்படுத்தவேண்டுமென்றும் இப்போது கவர்ன்மெண்டு ஜீ. ஓ. உத்தரவிற்கண்டபடி பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு ரூ 100 வரை தீர்க்க அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும், சொற்பக்குற்றங்களுக்கு ரூ 15 வரை அபராதம் விதிப்பதை ரூ. 20 வரை அதிகார வரை கொடுக்க வேண்டுமென்றும், 10 ரூபாய் நஷ்ட ஈடுகளை விசாரிக்க பஞ்சாயத்தாருக்கு அதிகாரம் கொடுப்பதை ரூபாய் 50 வரை நஷ்ட ஈடுகளை கொடுக்க பஞ்சாயத்தார் தீர்மானிக்க அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும், இப்போது கவர்ன்மெண்டு ஜீ. ஓ. உத்திரவிற்கண்டபடி சொற்ப குற்றங்களை விசாரிக்க அதிகாரங்களோடு பாரெஸ்டு பஞ்சாயத்து, நீர்பாய்ச்சல் முதலான தகராறு

களை பைசல் செய்தல், கிராம நத்தங்களில் ஆக்கிரமிக்காமற் பாதுகாத்தல், அப்படி ஆக்கிரமிப்பவர்களுக்கு அபராதம் விதித்தல், தாலுக்கா போர்டுகளுக்கு மெம்பர்களை நியமிக்க வோட்டுகொடுக்கும் சுதந்தரம் பஞ்சாயத்து ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு பஞ்சாயத்தாரின் சம்பந்தப்பட்ட காரியங்களை ஜில்லா கலெக்டர்களும் ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளும் பஞ்சாயத்து மெம்பர்களின் அபிப்பிராயத்திற்கு கொண்டுவந்து பைசல் செய்யவேண்டுமென்றும், ஜமாபந்தி ஆபீஸர்கள் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்து மெம்பர்களையாவது அல்லது பஞ்சாயத்து (பிரசிடெண்டு) தலைவரையாவது வைத்துக்கொண்டு அந்தந்த கிராமத்தின் காரியங்களை ஜமாபந்தியில் பைசல் செய்யவேண்டுமென்றும், கிராம சீர்திருத்த முறைகளைப்பற்றியும் நூதன வரி விதிக்கும் முறைகளைப்பற்றியும் கவர்ன்மெண்டாரும் லோகல் போர்டாரும் பஞ்சாயத்தார் அபிப்பிராயத்தின் பேரில் பைசல் செய்யவேண்டுமென்பதாகவும் இம்மாதிரி சீர்திருத்தங்களுடன் பஞ்சாயத்து கோர்ட்டுகளை கவர்ன்மெண்டார் சீக்கிரம் கிராமங்களில் ஏற்படுத்தவேண்டுமென்றும் சபையோரால் தீர்மானிக்கப்பட்டது கவர்ன்மெண்டுக்கு சபையோரின் தீர்மானத்தை அனுப்பிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது

(சு .......ன்.)

குறிப்பு:—கள்ளிப்பட்டி பஞ்சாயத்தார்கள் சொல்லும் அபிப்பிராயங்களை கவர்ன்மெண்டார் கவனிப்பார்களாக ப—ர்.

---


## "திருச்சி சிவராமய்யர் பாங்க்"

தருமத்திற்கெனவே ஏற்பட்டிருக்கும் இந்த பாங்கின் வருமானம் "ஜாதி வித்யாஸமன்னியில் ஏழைப்பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும கல்வி கற்பிக்கவும், அன்னம் கொடுக்கவும், இன்னும் அதற்குச் சம்பந்தமாயுள்ளது மான மேற்கூறிய தர்மத்துக்கு அனுகூலமாயுள்ள காரியங்கள் செய்யவும் உபயோகப்படுத்தப்படும். இந்த பாங்கில் டிபாசிட்டாகப் போடப்படும் துகைக்கு 100க்கு அரைவட்டி கொடுக்கப்படும். இதுவரை சேர்ந்துள்ள தரும பணத்திலிருந்தே "சதரன் ஸ்டார் பிரஸ்" என்னும் அச்சு ஆபீசு வேலை செய்துகொண்டிருககிறது. இருவகையிலும் வரும்லாபம் தர்மத்திற்கு உபயோகப்படுவதால் அதிகமாக பொதுஜன அபிமானம் எதிர்பார்க்கப்படுகிறது. விபரங்களுக்கு அடியில்கண்ட விலாஸத்துக்கு எழுதவும்:—

மானேஜர்,
சிவராமய்யர் பாங்க்,
12. கிலேதார் தெரு,
தெப்பகுளம் திருச்சி




## விசேஷ பஞ்சாயத்துக்களின் தீர்மானங்கள்.

### உடையார்பாளையம் தாலூக்கா கண்டிராதித்தம் கிராமத்தில் 6–8–17ல் கூடிய மீட்டிங்கின் பஞ்சாயத்தார் தீர்மானங்கள் வரப்புத் தகரார் விஷயம்.

இன்றையதினம் கொல்ல கோவிந்த ஆசாரிக்கும் சின்னச்சாமி படையாச்சிக்கும் ஏற்பட்டிருக்கும் வரப்புத்தகரார் ஜாகாவுக்குப் போய் அவாளவாள் அத்துப்படி அக்கம் பக்கம் கொல்லைகாரர்களையும் கூட வைத்துக்கொண்டு பொளிக்கல் போட்டுக் கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து மெம்பர்கள் ஏகோபித்து யோசனைசெய்து ஷை யார்களிடம் முச்சலிக்கை எழுதிவாங்கிக்கொண்டு ஷை யார்கள் தகரார் ஜாகாவுக்குப் போய் அவாளவாள் அத்துப்படி பொளிக்கல் போட்டுக் கொடுத்து ஷை யார்கள் தகரார் பைசல் செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—இதனைப்பலர் கவனிப்பார்களாக. அமினு வேண்டுமோ. ப—ர்.

### 7–8–17ல் கூடிய பஞ்சாயத்தார்களின் தீர்மானங்கள். ரூ. 440க்கு நம்பிக்கை மோசடிப்பத்திரம் சாஸனம் செய்யப்பட்ட விஷயம்.

ஷை கிராமத்திலிருக்கும் மூடிகொண்டான் முத்துசாமி உடையான் பெண்சாதி பொன்னம்மாள் கொடுத்திருக்கும் பெட்டிஷன் வாசிக்கப்பட்டது. அதில் பெடிஷனர் சொல்லுவது—தன் சொந்த நிலத்தை ஷையூர் கருப்பன் படையாச்சி மகன் மைனர் வடிவேல் படையாச்சிக்கு ரூ 440க்கு கிரயம்பேசி ரூ ௩க்கு மட்டும் ஸ்டாம்பு வாங்கி ரூ 140 பத்திரத்தில் காட்டாமல் நம்பிக்கையின் பேரில் பேசிக்கொண்டு ஷை பத்திரத்தில் கண்டதுகை ரூ 300 வாய்க்கராராய்ப்பேசிக்கொண்டது ரூ 140 ஆக ரூ 440ம் துகை வாங்காமலே ரிஜிஸ்தா செய்து கொடுத்து விட்டதாயும் பிறகு மைனர் தகப்பன் கருப்பன் படையாச்சியை ரூ 440யும் கொடுக்கும்படி பெடிஷனர் கேட்டதாகவும் பிறகு இதோ தருகிறேன் அதோ தருகிறேன் என்று வீண்புகல் சொல்லிக்கொண்டு வந்ததாகவும் பிறகு கிரயசாசனம் பெற்ற மைனர் வடிவேல் படையாச்சி என்பவன் வேறொரு கூத்தப்புடையானுக்கு ரூ 300க்கு கிரயசாசனம் செய்து கொடுத்து விட்டதாகவும் பெடிஷனர் பொன்னம்மாளுக்கு வரவேண்டிய துகை ரூ 440க்கு ரூ 400க்கு மட்டும் மைனர் வடிவேல் படையாச்சி இடம் சாசனம் எழுதி வாங்கப்பட்ட கூத்தப்படையான் பாண்டு எழுதிக்கொடுத்ததாகவும் அந்த பாண்டு பெடிஷனரிடம் இருக்கும்போது ஷை கூத்தப்புடையானுக்கு பெடிஷனரிடம் கிரயச்சாசனம் பெற்ற மைனர்

வடிவேலு படையாச்சி சாசனம்செய்து கொடுத்ததை ரிஜிஸ்தர் செய்து கொடுக்காமல் இருந்து விட்டானென்று ஷை கூத்தப்புடையான் என்பவன் ஊரில் சில மத்தியஸ்தர்களை பெடிஷனரிடம் அழைத்துக் கொண்டு போய் தான் எழுதிக்கொடுத்திருந்த பாண்டை ஒருசமயம் பிராது செய்து விடுவாய் என்று நம்பிக்கை யில்லாமல் பாண்டை வாங்கி மத்தியஸ்தமாய் கிராமமுன்சிபிடத்தில் கொடுத்து வைத்திருந்ததாகவும் அப்படி மத்தியஸ்தமாய் வைத்திருந்த பாண்டை கொடுக்கும்படி பெடிஷனரை (பொன்னம்மாளை) ஷை கூத்தப்புடையான் ஏகதேசமாயும். துர்பாஷையாயும் பேசி பலதுன்பப் படுத்தினதாகவும் பிறகு உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் மத்தியஸ்தமாய் வைத்திருந்த பாண்டை கூத்தப்புடையானிடம் பெடிஷனர் வாங்கிக்கொடுத்துவிட்டதாகவும் ஷை பெடிஷனருக்குச் சேரவேண்டிய துகை ரூ. 440யும் கிரயசாசனம் பெற்ற மைனர் வடிவேல் படையாச்சியாலும் கார்டியன் கருப்பன் படையாச்சியாலும் இன்னும் துகைகிடைக்கவில்லை என்றும் இவ்விதம் நம்பிக்கையாகதான் கிரயம்பேசி சாசனம்செய்துகொடுத்ததற்கு அடியில்கண்ட சாக்ஷிகள் இருக்கிறார்களென்றும் சாக்ஷிகளையும் வரவழைத்து தனக்கு நியாயப்படி முடிவுசெய்து தரவேணும் என்றும் பெடிஷனர் கேட்டுக்கொள்ளுகிறாள்.

இது சங்கதிகளைப்பற்றி ஷை சாக்ஷிகளையும் கிரயசாசனம் பெற்றவர்களையும் வரவழைப்பதற்காக பஞ்சாயத்தார் யோசனை செய்து ஷையாகளுக்கு அடுத்த மீட்டிங்கில் குறிப்பிட்ட இடத்தில் வந்து ஆஜராகும்படி நோட்டீஸ் மூலமாய் தெரியப்படுத்தவேணும் என்றும் நோட்டீசை கிராமமுன்சீபு மூலமாய் ஷை வகையறாப் பேர்களுக்கு அனுப்பவேணும் என்றும் பஞ்சாயத்தார் கிராமமுன்சீபிடத்தில் சொல்லுகிறார்கள். அதின்படி நோட்டீசை ஷை வகையறாப்பேர்களுக்கு தெரியப்படுத்தி சார்வுசெய்து தருவதாக கிராமமுன்சீபால் சொல்லப்பட்டிருக்கிறது. அதின்படி பார்டிகளுக்கு நோட்டீசு மூலமாய் பஞ்சாயத்தார் தெரியப்படுத்தி அடுத்த மீட்டிங்கில் இது விஷயமாய்ப் பேசப்படும். அப்படி பேசும்போது இதுவிஷயமாய் இன்னும் 2 பஞ்சாயத்து மெம்பர்களை ஜாஸ்திப்படுத்திப்பேசுவது நலமான காரியமென்று பஞ்சாயத்து மெம்பர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

## 11–9–17ல் நடந்த நடவடிக்கைகள் விபரம்.

இன்றையதினம் மீட்டிங்கில் முடிகொண்டான் முத்துச்சாமி உடையான் பெண்சாதி பொன்னம்மாள் கொடுத்திருந்த பெடிஷன் விஷயமாய் சென்ற மீட்டிங்குகளில் தாவாவில் கண்ட கருப்பன் படையாச்சியிடத்திலும் மைனர் வடிவேல் படையாச்சியிடத்திலும் வாக்கு மூலம் வாங்கப்பட்டது.



வாதி பொன்னம்மாள் தரப்பு சாக்ஷிகளிடத்திலும வாக்குமூலம் வாங்கப்பட்டது. வாக்குமூலம் வாங்கி வாதி தரப்பு சாக்ஷிகளையும் கிராஸ் (குறுக்கு விசாரணை) செய்யப்பட்டது. அதில் வாதிசொல்வது, பிராதை அனுசரித்து சொல்லுகிறார். பிரதிவாதி கருப்பன் படையாச்சி சொல்வது :—வாதி பென்னம்மாளிடம் என் மகன் மைனர் வடிவேல் படையாச்சி தன் பணத்தை வாதிக்கு பத்திர பார்வையில் செலுத்தி ரிஜிஸ்தரான ஆதரவு ஏற்பட்டிருக்கிறதென்றும் தான் தொகை தரவேண்டியதில்லை என்றும் சொல்லுகிறார். ஷை மைனர் வடிவேல் படையாச்சியும் பத்திரம் எழுதும்போதே தொகை ஜாடாவும் செலுத்தி பத்திரம் ரிஜிஸ்தராய்விட்டது. இனி தாவா கிடையாது என்று சொல்லுகிறார். பிரதிவாதி தரப்பு 1வது சாக்ஷி பத்திரம் எழுதும்போது நான்கூட இருந்ததுண்டு. பத்திரத்தில் நானும் கையெழுத்திட்டிருக்கிறேன். நம்பிக்கையின்பேரில் பிற்பாடு ரூ. 300 வாங்கிக்கொள்வதாக பத்திரம் எழுதி ரிஜிஸ்தராயிருக்கிறது. ரிஜிஸ்தராபீசிலும் தானும்போய் கையெழுத்துப்போட்டிருக்கிறேன் என்று சொல்லுகிறார். 2 வது தரப்பு சாக்ஷி பத்திரம் எழுதினபோதே தொகை ரூ. 300ம் செலுத்திவிட்டதாகவும் சொல்லுகிறார். வாதி தரப்பு சாக்ஷிகள் 5 பேரை விசாரித்ததில் வாதிக்கு பிரதிவாதி ரூ. 300க்கு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர்செய்துகொடுத்ததுமட்டும் உண்டேதவிர நாளதுவரை துகை செல்லவேயில்லை என்றும் பெண்பிள்ளையை ஏமாற்றி இவ்விதமான புகல் சாசனம் எழுதி ரிஜிஸ்தராயிருக்கிறதென்றும் அது சங்கதி ஒவ்வொருவருக்கும் தெரிந்திருப்பதோடு மற்றுமுள்ள குடிகளுக்கும் தெரியும் என்றும் சொல்லுகிறார்கள். ஷை தஸ்தாவேஜி எழுதின ராமசாமி உடையானை விசாரித்ததில் தான் உபயவாதிகளையும் வைத்துக்கொண்டு ரூ. 325க்கு வாதி நிலத்தை பிரதிவாதிக்கு கிரயம்பேசினது உண்டென்று சொல்லுகிறார், பிறகு ரூ. 3க்கு ஸ்டாம்பு வாங்கி வரும்படி சொன்னபிரகாரம் பிரதிவாதி ரூ. 3 ஸ்டாம்பு வாங்கிவந்ததின்பேரில் ஷை பத்திரத்தில் தொகை ரூ. 300ம் வாதி பத்திக்கொண்டதாக தான் எழுதினது வாஸ்தவமென்றும் நாளது தேதி வரையில் வாதிக்கு பிரதிவாதியால் ரூ. 325 செல்லவில்லை என்றும் சொல்லுகிறார். தவிர பற்பல குடிகள் யாவரும் வாதிக்கு தொகை ரூ 300 பத்துவழியானதாக பத்திரம் எழுதி பிரதிவாதி ஏமாற்றிவிட்டார் என்றும் சொல்லுகிறார்கள். பிறகு மறு மீட்டிங்கில் சரியான உண்மை வெளிக்கிவரும்படியான கிராஸ் கேள்வி கேட்டதில் தொகை கொடுக்கவில்லை என்கிற விஷயம் சந்தேகமில்லாமல் பஞ்சாயத்தாருக்குத்தோன்றுகிறது. ஆகையால் அடியில்கண்ட விவரப்படி தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

## தீர்மானம்.

2. முடிகொண்டான் முத்துச்சாமி உடையான் பெண்சாதி பொன்னம்மாள் நஞ்சை புஞ்சை நிலங்களை பிரதிவாதி கருப்பன் படையாச்சி தன்

மகன் வடிவேல் படையாச்சி பேரால் ரூ. 300 தொகை செலுத்திவிட்டதாக பத்திரம் எழுதி ஏமாற்றி ரிஜிஸ்தர்செய்துகொண்டு ரூ. 300 கொடுக்காமல் 10 மாசமாய் பிரதிவாதி அலயச்செய்தது வாஸ்தவமென்று பஞ்சாயத்து மெம்பர்களும் அபிப்பிராயப்பட்டு வாதிக்குதொகை செல்லவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு பஞ்சாயத்தார் ஏகோபித்து முடிவான தீர்மானம் எழுதும்போது பிரதிவாதி கருப்பன் படையாச்சி ரூ. 325க்கு வாதி நிலத்தை கிரயம் பேசி ரூ. 300 கையில் செலுத்திவிட்டதாக நம்பிக்கையின் பேரில் பத்திரம் எழுதி ரிஜிஸ்தராகியிருக்கிறது வாஸ்தவமென்றும் வாதிக்கு தான் தொகை செலுத்தாததினால் நாளையதினம்போய் திரும்ப வாதிக்கு சாசனம் செய்து கொடுத்துவிடுகிறேன் என்றும் சொல்லுகிறார் தனக்கு பத்திரம் எழுதினபோது செலவான ரூ. 14யும் கொடுத்துவிடும்படி கோட்டுககொண்டார். கணக்குபார்த்ததில் பிரதிவாதிக்கு ரூ. 8-8-0 வாதி கொடுத்துவிடுகிறதென்றும் திரும்பவும், பிரதிவாதியிடம் சாசனம் பெற்ற நிலத்தை விபரங்கண்டு பஞ்சாயத்தார் தீர்மானப்படி பத்திரம் எழுதி ரிஜிஸ்தர்செய்து கொடுத்துவிடவேண்டுமென்று பிரதிவாதியிடம் கட்டுப்பட்டு முச்சலிக்கை எழுதி வாங்கிக்கொண்டு முடிவான தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப் பத்திரம் முதலில் தொகை பெற்றுக்கொள்ளாமல் பத்திரத்தை நம்பிக்கையின் பேரில் பெற்றுக்கொண்டதாக எழுதி ரிஜிஸ்தர்செய்து கொடுத்திருக்கும் எழுத்துக்கார ராமசாமி உடையான் இனி கிராமத்தில் பத்திரம் எழுதக்கூடாதென்று மகா-ள-ள-ஸ்ரீ டிபுடி தாசீல்தார் அவர்களுக்கு ரிபோர்ட்டு செய்யவேணும் என்று பஞ்சாயத்தார் அபிப்பிராயப்படுகிறார்கள். பிரசிடெண்டு பொன்னுசாமி படையாச்சியின் முயற்சியால் 10ரூ காலமாக ஏமாற்றி மோசம் செய்யவேணும் என்ற நம்பிக்கை மோசடிப் பத்திரத்தைத் திரும்ப சாஸனம் செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

**குறிப்பு:—** கிராம மகாஜனங்களும் நண்பர்களும் இந்தத் தீர்ப்பை பன்முறையும் படிப்பார்களாக. கண்டிராதித்தம் கிராமபஞ்சாயத்தார்களுக்கு வந்தனம். அவர்களது திறமையை நிரம்பவும் நாம் மெச்சுகின்றோம். அரசாங்கத்தாரும் இதனை கவனிப்பார்களாக. பஞ்சாயத்தால் நன்மைகள் பலவுள. கிராமத்தார்களின் அறிவு அளவற்றது.

ப......ர்.

---

## நியாயஸ்தலச்செய்தி.

### சென்னை ஐகோர்ட்டு

### சீப் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சதாசிவய்யர் இவர்கள் முன்பாக.

### புல் பெஞ்சுத் தீர்மானம்.

கடவாயூர் தேவாம் சக்தில் பொது சொத்தைக்கிராமவாசிகள் பரிபாலிக்கும் விஷயமாக ஒரு வழக்கு நடந்தது. அதன் மானேஜ்மெண்டு விஷயமாய்ச்



சில மத்தியஸ்தர்கள் சேர்ந்து தனிமையாக ஏற்பாடு செய்திருந்தனர். பிற்பாடு அந்த ஏற்பாடு ஒரு கோர்ட்டு டிக்கிரியை ஆதாரமாகப் பெற்றிருந்தது. பின்பு அக்கிராமவாசிகள் கூட்டங்கூடி மெஜாரட்டியில் அந்த ஏற்பாட்டில் சில திருத்தங்கள் செய்தனர். இது சம்பந்தமான வழக்கில் ஜஸ்டிஸ் அப்துல் ரகீம் அவர்கள் கிராமவாசிகளின் மெஜராட்டியார் அந்த ஏற்பாட்டை மாறலாமென அபிப்பிராயங் கொடுத்தார். நேப்பியர் அவர்கள் ஒருவித ஏற்பாடு எப்பொழுது ஒரு கோர்ட்டு டிக்கிரியில் கட்டுப்பட்டு விட்டதோ அப்பொழுது இதை மாற்ற அவர்களுக்கு அதிகாரமில்லை என்றார். இது புல்பெஞ்சு அபிப்பிராயத்திற்கு வரவே அனைவரும் கோர்ட்டு டிக்கிரியில் கட்டுப்பட்ட ஏற்பாட்டை மெஜாரட்டி ஜனங்கள் மாற்ற அதிகாரமில்லா விட்டாலும் மாற்றப்பட வேண்டிய விஷயங்களைக் கோர்ட்டிற்கு அறிவித்தே திருத்தம் செய்து கொள்ளவேண்டுமெனத் தீர்ப்புச் செய்தனர்.

### சீப் ஜஸ்டிஸ் முன்பாக.

### ஒப்பந்தத்தவறுதலுக்கு நஷ்ட வட்டி.

ஒரு பத்திரத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் வட்டி செலுத்தத் தவறினால் அதிகமானதவறுதல் வட்டி போட்டுக்கொள்வதெனக்கண்டுள்ள ஷரத்தின்படி அதிகவட்டி வசூலிக்க தாவா கொண்டு வரப்பட்டது. கீழ்க்கோர்ட்டார் அதிகவட்டி கேட்டிருப்பது குற்றமெனக்கண்டு சதாரண வட்டி விகிதத்தின் படிக்கே டிக்கிரி கொடுத்திருந்தனர்.

வட்டி செலுத்தும் காலாவதி கடந்த காரணத்திற்காக அதிக வட்டி சேர்க்கப்படவேண்டியது அவசியமென்றும் இந்தியன் காண்டிராக்டுச்சட்டத்தின் 74-வது ஸெக்ஷன் தாரத்தின்மேல் வாதி கோரிக்கைப்படி பரிகாரங் கிடைக்கவேண்டுமென்று வாதி கோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்தார்.

காண்டிராக்ட்டு வட்டியோ நூற்றிற்கு 18; அதிக வட்டி நூற்றிற்கு 24; ஐகோர்ட்டார் வாதி அதிக வட்டி கொடுக்கவேண்டியதெனத் தீர்மானித்து 100-க்கு ரூ. 24 விகிதம் வட்டிபோட்டு வசூலிக்க டிக்கிரி கொடுத்தார். மனுதார் பக்கம் ஸ்ரீமான் பி. ஜி. கிருஷ்ணய்யரும் பிரதிவாதி பக்கம் ஸ்ரீமான் ஸி. மாதவன் நாயரும் ஆஜராயினர்.

### ஜஸ்டிஸ் சதாசிவய்யர் ஜஸ்டிஸ் நேப்பியர் இவர்கள் முன்பாக இரண்டாவது அப்பீல் 1917-ம் வருஷத்திய நெ, 383.

வாதி சில சாமான்களைக் கூட்டுவியாபாரம் செய்துகொண்டிருந்த 1, 2 பிரதிவாதிகளுக்கு விற்று, வாதி முதலாவது பிரதிவாதியிடம் மட்டும் பிராமி

சரி நோட்டு எழுதிவாங்கிக்கொண்டார். ஆயினும் அத்தொகையை வசூலிக்க 2 பிரதிவாதிகள் பேரிலும் வாதி வழக்கிடக் கீழ்க்கோர்ட்டார் ஒரு பிரதிவாதியின் பேரில் மட்டும் டிக்கிரி கொடுத்தார். அப்பீல் செய்ததில் 2-வது பிரதிவாதியையும் கட்டுப்படுத்தி இரண்டு பிரதிவாதிகள்பேரிலும் டிக்கிரி கிடைத்தது. இரண்டாம் பிரதிவாதி ஹைகோர்ட்டில் வழக்குச்செய்ததும் ஹைகோர்ட்டார் 341 இந்தியன் கேஸ் 456யை அனுசரித்து ஒரு பாகஸ்தன்பேரில் பிராமிசரி நோட்டு ஏற்பட்டிருந்தாலும் இருவரையும் அந்தக் கடன் கட்டுப்படுத்தியதாகும் என உத்தரவு செய்தனர்.

அப்பீல் வாதி பக்கம் ஸ்ரீமான் பி. சோமசுந்தரமும், அப்பீல் பிரதிவாதி பக்கம் ஸ்ரீமான் பி. சோமய்யா அவர்களும் ஆஜராயினர்.

---

## ஐக்கிய நாணயச் சங்கம் கான்பரன்ஸ்.

விஜயமங்கலம் ஐக்ய நாணய யூனியன் இரண்டாவது கான்பரன்ஸ் மே மாதம் 25௳ கூடியபோது வாசிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தில் கிராமவாசிகளுக்கு வேண்டிய பருத்திக்கொட்டை, எண்ணெய் விதைகள், எருக்கள் முதலியவைகளை சங்கங்களே வாங்கி தங்களுக்குள் விற்பனை செய்துகொள்வதனால் ஏராளமான லாபமுண்டாகுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. சபைத்தலைவரின் முகவுரைப் பிரசங்கத்தில் "கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள 150 சங்கங்களில் ஈரோடு தாலுகாவில் 86 சங்கங்களிருக்கிறதாகவும் அதில் இந்த பிர்க்காவில்மட்டும் 30 சங்கமிருப்பதால் இந்த பிரதேசம் முன்னுக்கு வர வழியிருப்பதால் இன்னும் அனேக சங்கங்கள் ஏற்படுத்தி எளியவர்களையும் சேர்த்துக்கொண்டு பொது நன்மை புரியவேண்டுவது அவசியமென்று கூறியதுடன் கம்பிளியாம்பட்டி சின்ன ரெங்கசாமிக்கவுண்டர் இந்த சங்கங்களைக் கூட்டி கான்பரன்ஸ் நடத்துவதைப்பற்றியும், தன்னுடைய கிராமத்தில் சிவில் கிரிமினல் முதலிய விவகாரங்களை கோர்ட்டுகளுக்குக் கொண்டு போகாமல் பைசல் செய்வதையும்பற்றிப் புகழ்ந்து பேசினர்" அனேக உபயோகமுள்ள வியாஸங்கள் படிக்கப்பட்டன. இந்த கான்பரன்ஸார் ஒரு முக்யமான தீர்மானம் செய்தனர் அது பின் வருமாறு :—

"ஏழை ஜனங்களை சங்கத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பதையும் சங்க மெம்பர்களுக்கு வேண்டிய விவசாய கைத்தொழில் சாமான்களையும் சங்கமானது வாங்கி மெம்பர்களுக்கு பாகித்து கொடுக்கவேண்டுமென்பதைப்பற்றியும், சங்க மெம்பர்களால் உண்டாக்கப்படும் விவசாய கைத்தொழில் சரக்குகளை சங்க மூலமாய் விற்பனை செய்வதைப்பற்றியும், குறுகிய காலக் கடன், டிபாசிட்டு செய்தல் முதலியவைகளைப்பற்றிய தீர்மானங்கள் செய்யப்பட்டன.



இத்தீர்மானம் விசேஷிக்கத்தக்கது. இதனை ஐக்ய நாணய சங்கத்தார் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி அமூலுக்குக் கொண்டுவரவேண்டும். பெரும்பாலான சங்கங்களில் பெருந்தொகைகளாக பெரியதனக்காரர்களே பங்கிட்டுக்கொண்டு ஏழைகளுக்குக் கடன்கொடுக்க மறுக்கின்றனர். இது சகஜமாயிருக்கிறது. சங்கத்து உத்தியோகஸ்தர்கள் இதனை அப்போதைக்கப்போது கவனித்தல்வேண்டும். விவசாய இலாகாவும் ஐக்ய நாணய சங்க இலாகாவும் ஒத்துழைத்தல் வேண்டுமென்று ரெஜிஸ்ட்ரார் மிஸ்டர் ஹெம்மிங்குவே குறிப்பிட்டது அனுபவத்தில் பொருத்தமானது. ஆங்காங்கு கோவாபரேடிவ் ஸ்டோர்ஸை ஏற்படுத்தல் மேன்மை. வேண்டிய சரக்குகளுக்கு அப்போதைக்கப்போது தமக்கு எழுதினால் தாம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொடுப்பதாக மிஸ்டர் ஹெம்மிங்குவே வாக்குறுதி கொடுத்திருக்கிறார். இலவசக் கட்டாயப்படிப்புக்குத் தனி வரி கொடுக்கத் தயாராய் இருப்பதாகவும் மிராசுதார்கள் ஒப்புக்கொண்டு தீர்மானமும் செய்திருக்கின்றனர்.

---

## விவசாயச் சங்கம்.

1918-௵ மே௴ கும்பகோணத்தில் நடந்த விவசாய சங்கத்து வருஷ பூர்த்திக்கொண்டாட்டத்தில் மேற்படி சங்கத்துக்காரிய தரிசி படித்த ரிபோர்ட்டின் சுருக்கம் வருமாறு :—விதைகள் விற்பனையிலிருந்து ரூ 141—1—6 வரவு வந்திருக்கிறது. சங்கத்தில் மாதாந்திரப் பத்திரிகை பிரசுரிக்கப்படுகிறது. விதைகள் சங்கதின் மெம்பர்களுக்கு மிக்க மலிவாகக் கொடுத்தும். ரஸாயன எரும் கொடுத்து முக்கியமான வேலையைச்செய்து வந்திருக்கிறது. இச்சங்கத்திற்கு விவசாய இலாகாவால் அளிக்கப்படும் பிரசுரங்களை இனாமாக அதன் மெம்பர்களுக்குக் கொடுத்துவருகிறது. இதேமாதிரியாக பிரதி கிராமத்திலும் விவசாய சங்கம் இருத்தல் மேன்மை. வாய்க்கால் நீர்பாசன சங்கங்கள் இருந்தாலும் அவ்விடங்களிலே விவசாய பொருள் காக்ஷி ஒன்றை ஏற்பாடு செய்தும் விவசாயத்திற்குவேண்டிய பொருள்களைச் சேகரித்தும் தானியங்களைத் தருவித்தும் விவசாயிகளுக்கு உதவிசெய்யலாம்: விவசாயிகள் பயிர் செய்வதற்குத் தகுந்த வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள இச்சங்கங்கள் இன்றியமையாதனவாகும். பஞ்சாயத்தார்களும் இதனைக்கவனிப்பார்களாக.

---

## இரண்டாவது யுத்தகடனும் படை திரட்டலும்

இப்போது நடைபெறும் மகா கோர யுத்தச்செலவின் பொருட்டு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு இனாமாக 150 கோடி ரூபாய் கொடுப்பதாக

நமது கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்ட விஷயம் நமது நேயர்களுக்குத் தெரியும். சென்ற வருஷத்தில் சுமார் 55 கோடி ரூபாய் கொடுபட்டது. இந்த வருஷத்தில் எவ்வளவு தொகை சேருமோ அதைகொடுத்துதவவேண்டி இரண்டாவது தடவை நமது கவர்ன்மெண்டார் கடன் வாங்குகிறார்கள். தொகை கொடுக்கிறவர்களின் இஷ்டப்படி 1921, 1923, 1925 அல்லது 1928-ம் வருஷங்களில் ஸெப்டம்பர் மாதம் 15 தேதியில் தொகை திருப்பிக் கொடுக்கபபடும். வட்டி ரூ 100-க்கு 5-8-0. இந்த வட்டி வரும்படியின்மேல் வருமான வரி விதிக்கப்படமாட்டாது. 1925 அல்லது 1928-ம் வருஷங்களில் தொகையைத்திருப்பிக் கொடுக்கப்படும்போது 100க்கு 103 அல்லது 105 ரூபாய் முறையே கொடுக்கப்படும். கடன் கொடுக்கக்கூடிய பெரிய முதலாளிகளுக்கு இந்த நிபந்தனைகள் வெகு சௌகரியமானவைதான். ஆகையால் பெருந்தொகை வசூலாகுமென்று எதிர்பார்க்கலாம். சொற்ப சக்தியுள்ளவர்கள் ரூ. 10, வீதம் தபாலாபீஸ் ரொக்கச் சீட்டுகளைப்பெற்றுக் கொண்டு உதவிபுரிய இது நல்ல சமயம். இரண்டாவது யுத்தக்கடனில் பணம் போடுவோர், தமக்குச்சேரவேண்டிய வட்டித்தொகையை இனி நேராக வாங்கிக்கொள்ளாமல் கவர்ன்மெண்டுக்கு அவரவர் கட்டக்கூடிய கிஸ்தித்தொகைக்குச் சாட்டிக்கொள்ளலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். சேனைக்கும் கூலி வேலைக்கும் ஆட்கள் தேவையென்று கவர்ன்மெண்டார் விளம்பரம் செய்திருக்கின்றனர். சேனைக்கும் கூலி வேலைக்குப்போகும் ஆட்களுக்கு இனாம் சாப்பாடு, நேர்த்தியான உடுப்புகள், பெரிய உத்யோகங்கள் முதலியவற்றைக்கொடுக்கிறார்கள். அநேக சௌகர்யங்களும் செய்துகொடுக்கிறார்கள். ரூ. 50 முன் பணமும் கொடுக்கிறார்கள் மற்றப்படி சேனைகளுக்கு என்னென்னவித நன்மைகள் செய்துகொடுக்கப்படுகின்றனவோ அவைகளும் உண்டு. பின் வரும் உத்தியோகங்களுக்கு அடியில் கண்ட சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. தச்சுவேலை, கொல்லவேலை இவ்விரண்டுக்கும் அதிகச் சம்பளம் ரூ 50, குறைந்த சம்பளம் ரூ 25, ஜலம் தூக்க ரூ 10, நாவிதன் ரூ 16, வண்ணான் ரூ 20, துணி நெய்தல், டெய்லர் இவர்களுக்கு ரூ 20, தோட்ட வேலை கவனிக்க ரூ 12, சேவகன் ரூ 10, ஸ்வீபர் ரூ 10, கொத்துவேலை அதிகம் முதல் தரம் ரூ 40, மூன்றாந்தரம் ரூ 25, மூச்சி ரூ 20. இம்மாதிரியே ஒவ்வொரு வகையிலும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. கஷ்டப்படும் ஜனங்களுக்கு இதுவே நற்காலம். தக்க பிரபுக்களை யுத்தகடனுக்குப் பணவுதவி செய்யும்படியும், மிகுந்த ஏழைகளை கூலிவேலைக்குப்போகும்படியும் சொல்லி பஞ்சாயத்தார்கள் தங்கள் ராஜபக்தியைக்காட்ட முன் வருவார்களாக.

---



## நமது சந்தா நேயர்களுக்கு ஒரு அறிவிப்பு.

எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களால் பத்திரிகை தாமதமாக வெளிவருகின்றது. அடுத்த சஞ்சிகையில் ஆனி, ஆடி இரண்டு மாதங்களையும் ஒன்றாய்ச்சேர்த்து பத்திரிகையை வெளியிடுவோம், பிறகு வழக்கம்போல் பிரதி மாதமும் பத்திரிகை வெளித்தோன்றும். தயவுசெய்து சந்தாத்தொகையை அனுப்புவிக்குமாறு எல்லாரையும் வேண்டுகிறோம்: அடுத்த சஞ்சிகையில் நிருபங்கள் வெளிவரும்.

பத்திராதிபர்.

## நமது ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

### தமிழ்ப்புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| வேலையின் கூலி அல்லது கள்வர் கவர்ந்த கலியாணப்பெண் (தமிழ் நாவல்) | 0 | 6 | 0 |
| அன்பின் வலிமை. இது ஓர் அரிய தமிழ் நாவல் | 0 | 12 | 0 |
| இந்திய கோரிக்கைகள். இது சுதேசமித்திரன் ஆபீஸில்வெளியானது. இந்தியனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் இதைப் படித்தல் அவசியம். | 0 | 8 | 0 |
| "பஞ்சாயத்து" தனி சஞ்சிகை ... ... | 0 | 5 | 0 |

### இங்கிலீஷ் புஸ்தகங்கள்.

திருச்சி ஜில்லா சரித்திரம் 0–4–0. மகமதியர்களுக்கு முன் இந்தியா 1–8–0.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்,

"பஞ்சாயத்து"

தென்னூர், திருச்சினாப்பள்ளி

## ஸ்ரீ ரவீந்திரநாத் டாகூர் அவர்கள் இயற்றிய சிறு கதைத்தொகுதி.

முதல் பாகம் நமது பார்வைக்கு வரப்பெற்றோம், இதிலடங்கிய பெரும்பாலான விஷயங்கள் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் மொழிபெயர்ப்பு ஆகும் இச்சிறு கதைகள் சிறு சிறு வாக்கியங்களால் நவரசமும் சொட்டச் சொட்ட எழுதப்பட்டுள்ளன. 'ஆசியாவின் வரகவி' யாகிய ஸ்ரீ ரவீந்தரநாத் டாகூரின் நூல்கள் யாவும் ஆழ்ந்த் கருத்துக்கள் பொதிந்து கிடக்கப்பெற்றிருக்கின்றமையால் அவைகள் யாவும் தமிழில் எழுதப்படின் தமிழ் நாட்டாருக்கு நன்மை பயப்பனவாகும் இதனை யாவரும் அபிமானிப்பார்களென நம்புகிறோம். ஆசிரியருக்கு ஈசன் பெரிதும் துணைபுரிவாராக. இதன் விலை அணா 12. கிடைக்குமிடம் கிருஷ்ணசாமி அண்ட் கோ. தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி.

# திருச்சி சிவராமய்யர் பாங்க்.

## 1905-ம் வரு ஸ்தாபிக்கப்பட்டது.

1, இந்த பாங்கு அதன் டிபாசிட்டர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர் உள்ள கமிட்டியின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கிறது.

2, மாதம் ஒன்றுக்கு ரூ. 1 முதல் 100 வரை 45 மாத காலம் டிபாசிட் செய்யலாம், 46-வது மாதத்தில் மாத டிபாஸிட் ரூ. 1-க்கு கடன் வாங்கிய வர்களுக்கு ரூ. 50 வீதமும் கடன் வாங்காத நபர்களுக்கு ரூ. 51-4-0 வீதமும் கொடுக்கப்படும்.

3. சாசுவத் டிபாஸிட்டாக செலுத்தப்படும் தொகைகளுக்கு 100-க்கு மாதம் 1-க்கு ரூபாய் அரை வீதம் வட்டி கொடுக்கப்படும்.

4. வெளியூர்களிலிருந்து அனுப்பப்படும் மாதாந்தர டிபாசிட் தொகையானது ரூ, 5-ம் அதன் பெருக்குத் தொகைகளுக்கும் 46-வது மாதத்தில் மணியார்டர் கமிஷன் ஒத்துக்கொடுக்கப்படும்.

5, இந்த பாங்கின் முழுத்தொகையும் பாங்கின் டிபாஸிட்டர்களுக்கே சொத்தின்பேரில் 100-க்கு முக்கால் வீதம் வட்டிக்குக் கடன்கொடுக்கப்படும்

6 இந்த பாங்கில் ஏற்படும் லாபமானது ஜாதி வித்யாஸமின்றி ஏழைப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கவும் அன்னம் கொடுக்கவும் உபயோகிக்கப்படும்

## திருச்சி சதரன ஸ்டார் அச்சு ஆபீஸ்.

தர்ம வருமானத்தைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் "சதரன் ஸ்டார் அச்சு ஆபீஸில் கிடைக்கும் லாபமும் மேற்கூறிய தருமத்துக்கு உபயோகப்படுகிறது, இதில் அச்சடித்தல், பயிண்டு செய்தல் முதலிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். ஆர்டர்களுக்கு உடனுக்குடன் கவனம் செலுத்தப்படும்.

குறிப்பு :—இப்பத்திரிகையில் 54வது பக்கத்தில் செய்திருக்கும் பாங்க் விஷயமான அறிக்கையில் விபரம் "மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாமென்று இருப்பதை உடனேயே தெரிந்துகொள்ளுமாறு இப்பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

S, சிவராமய்யர்.
மானேஜர்.

---

Printed at the Southern Star Press. Trichinopoly and published by M. S. R. Chandran, Tennore, Trichinopoly.

Home (Edn.) Dept

E. T. Privileges

[2373] From the Editor of the Panchayat d/ 16.8.18
Endt to the D.M. Trichinopoly 2373-1 d/ 28/8/18
From the D.M. Trichinopoly no. 1439 d/ 7.9.18
Memo to the D.M. Trichy 2373-2 d/ 18/9/18
From the D.M. Trichy no. 7458 d/ 26/9/18

?i8.

Patronage.

The question of patronizing the journal 'Panchayat' has been considered in the notes to G.O. no. 1040 Local d/ 10.8.18, (C) where it was finally decided that only one copy should be purchased and that for six months. ~~and if Govt can only give the journal so much patronage this dept can do much less.~~ d.

2. E.T. Privileges. The journal claims to be a monthly publication and though the 1st issue came out in April-May 1918, no more than two issues have so p. 4 C.F. far been ~~published~~. The journal can not have under these circumstances an established circulation or a status to merit the grant of E.T. Privileges. Another journal has under similar circumstances been negatived E.T. Privileges (vide notes to G.O. no. 1271 Home (Edn.) d/ 18.12.17) (D)

Vide notes to G.O. no. 1395 16.12.1911 (N)

The Editor may be told that his request in this regard can not be complied with, it being open to him to come up to Govt again if and when the journal has the necessary qualifications for the grant of the privileges.

3. Advertisements. As a rule advertisements from depts. of the Sect. are sent only to the daily papers in Madras. The Editor of the paper may be so informed.

please see note at B on p. 7 of the notes
G.O. 340 / 4.4.18 (E)

4. The Govt can not well direct ~~its~~ officers ~~Subordinates~~ to purchase copies of the Journal for the Panchayats etc ~~not~~ unless its utility is proved. ~~[illegible]~~. But it is open to the Editor to address the officers concerned. He may be told so. ~~if~~

A draft order is subd for approval.

[signature] 23/10/18

Ay? 18.10.18

Pdch 22.10.18.

E.T. Privileges

45

Sectt. II—10 (a).

~~Home Misc.~~) DEPARTMENT.

Stating that the Govt are unable to further patronize the Panchayat and that the Journal cannot at present be admitted to —.

I

READ AGAIN G.O. No. 1064 Local, dated 10. 8. 1918.

" " " " , " 19 .

READ ALSO:—

II

No. 2373 From the Editor of the Panchayat, No. —, dated 16. 8. 1918.

III

" " , " " ~~Emch~~ to the , " 2373-1 28. 8. 1918.

IV

2583 From the Dir Trichy 1486 7. 9. 18.

V

Memo to the DM. Trichy 2373 10. 9. 1918.

VI

" " 2712 " " From the Dir Trichy 7480 26. 9. 18.

ORDER. No. 720, dated 23. 10. 1918.

mis.

The Govt are unable to Extend any further patronage to the Journal. ~~not can~~ They are also unable to accede to ~~at present direct that~~ the request of "the Editor ~~of the Panchayat~~" to be ~~admitted~~ supplied with ~~any~~ Govt publications free of cost.

2 It is open to the Editor to address village pleaders and panchayats to purchase his Journal if they think fit to do so.

3 Advertisements from Govt Depts are as a rule sent only to the leading dailies in Madras.

[initials] 23/10/18

To

The Editor,
'Panchayat'
Tennore, Trichinopoly

Recd. by the [illegible] 25.10.18

The D.M. Trichy (G.O. 40) [illegible]

[initials] 18.10.18

*When given for copying*
*When copied*
*When examined* } 191
*When signed*

READ AGAIN G.O. No. , DATED
191 .

CURRENT NO.

ENCLOSURES TO C. NO.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ORDER OF GOVERNMENT .. .. .. | A | A | A | A | A | A | A |

LETTER OF GOVERNMENT

STATEMENT WITH DITTO.

PAPERS NOT FILED UP, BEING MEANT FOR DESPATCH IN ORIGINAL.

*N.B.*—
A = Copy in full.
B = Not to be copied.
P = Copy abstract only.
Q = Copy heading only.